

கலைஞர் 100 1924 - 2023

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 82 – ஒலி: 55 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – புரட்டாசி 17 – புதன்கிழமை 04 அக்டோபர் 2023 – மதுரை 12 + 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 55: Thiruvalluvar Year - 2054 - Purattasi 17 - Wednesday 04 October 2023 - Madurai 12+12 Pages ₹5.00


## சமூக ஊடகங்களில்

# பொய்ச் செய்திகளைப் பரப்புவோர் மீது கடும் நடவடிக்கை எடுத்திடுவீர்!

## மாவட்ட ஆட்சியர் - காவல்துறை அலுவலர்கள் மாநாட்டைத் தொடங்கிவைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

**சென்னை, அக்.4-**

**“சமூக ஊடகங்களில் பொய்ச் செய்திகளைப் பரப்புவோர் மீது கடும் நடவடிக்கை எடுத்திடுவீர்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாவட்ட ஆட்சியர் - காவல்துறை அதிகாரிகள் மாநாட்டைத் தொடங்கிவைத்து உரையாற்றும்போது வலியுறுத்தினார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (3.10.2023) தலைமைச் செயலகத்திலுள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அலுவலர்கள் மாநாட்டில் ஆற்றிய தொடக்க உரை வருமாறு:-

தமிழ்நாட்டில் நமது அரசு பொறுப்பேற்று நடைபெறக்கூடிய இந்த இரண்டாவது மாவட்ட ஆட்சியர்கள், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்கள் மாநாட்டில், உங்கள் அனைவரையும் ஒருசேர சந்திப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

முன்னதாக, கடந்த ஆண்டு மார்ச் 10 அன்று மாவட்ட ஆட்சியர்கள், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் மாநாடு நடந்தது.

‘கள ஆய்வில் முதலமைச்சர்’ என்ற திட்டத்தின் கீழ் பல்வேறு மாவட்டங்களில் ஆய்வுப் பணியை மேற்கொண்ட போதும் மாவட்ட ஆட்சியர்களை காவல்துறை கண்காணிப்பாளர்களை நான் சந்தித்து இருக்கிறேன். தொடர்ச்சியாக உங்களை நான் சந்தித்து வருகிறேன்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.10.2023) தலைமைச் செயலகத்திலுள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் மாநாட்டை தொடங்கி வைத்து உரையாற்றினார்.

இரண்டு நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில், நாம் பல்வேறு ஆலோசனைகளை மேற்கொள்ளவிருக்கிறோம். இங்கே கூடியுள்ள நீங்கள் அனைவரும் அரசுக்கு உங்களது ஆலோசனைகளை, எந்தவித தயக்கமுமின்றி, மக்கள் நலன் ஒன்றையே மையமாகக் கொண்டு வழங்கிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்று காலையில் நடைபெறும் இந்த அமர்வில் சட்டம்ஒழுங்கு பராமரிப்பு குறித்து நாம் விவாதிக்க இருக்கிறோம்.

### மக்கள் நலன் குறித்து ஆலோசனை வழங்கிடுவீர்!

பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் அமைதியை ஏற்படுத்திக் காட்டுவது முதலாவது இலக்கு!

இரண்டாவது, பொது அமைதியைக் கெடுக்க நினைப்பவர்களை முழுமையாகத் தடுப்பது.

அமைதியான தமிழ்நாட்டில் குழப்பம் ஏற்படுத்த முடியுமா என்று திட்டமிடுபவர்களுக்கு இடமளித்துவிடக் கூடாது.

நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற இருப்பதால் அந்த உள்நோக்கத்துடன் இத்தகைய சக்திகள் செயல்படுவதற்கு வாய்ப்புள்ளது. அதனை தீவிரமாகக் கண்காணித்து தடுக்க வேண்டும்.

கள்ளச்சாராயம், போதைப் பொருட்களை அறவே ஒழிக்க வேண்டும்! இது நம் எதிர்காலத் தலைமுறையையே சீரழிக்கிறது. இது சம்பந்தமான குற்றவாளிகளை இரும்புக்கரம் கொண்டு அடக்க வேண்டும்.

மேலும், சாலை விபத்துகளால் மிக அதிக அளவில் உயிரிழப்புகள் ஏற்படும் மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு இருப்பது எனக்கு மிகுந்த கவலையை அளிக்கிறது. இந்த நிலையை மாற்ற காவல்துறை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் போக்குவரத்துத் துறை ஆகிய துறைகள் ஒருங்கிணைந்து திட்டங்களை வகுத்து, விபத்துகளைக் குறைப்பது குறித்து ஆய்வு செய்திடும் முயற்சியிலே முழுமையாக ஈடுபட வேண்டும்.

சென்னை உள்ளிட்ட பல மாநகரங்களில் பொதுமக்களுக்கு சிரமம் தரக்கூடிய ஒன்றாக இருப்பது போக்குவரத்து நெரிசல். அதனைக் குறைப்பதற்கான ஒரு சிறப்பு செயல்திட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

### போக்குவரத்து நெரிசலை குறைக்க சிறப்பு திட்டம்!

பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களில் நடவடிக்கை எடுப்பதில் துளியும் சமரசம் இருக்கக் கூடாது. குற்றவாளிகளை உடனே கைது செய்து, தண்டனை

தொடர்ச்சி 2 ஆம் பக்கம்

---

# கலைஞர் இதயத்தில் எனக்கென்று தனி இடம் இருந்தது!

**தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினையொட்டி ஒவ்வொரு மாதமும் 3ஆம் தேதியன்று பல்வேறு தலைப்புகளில் ‘முரசொலி சிறப்பிதழ்’ வெளியிட்டு வருகிறது. இதனையொட்டி இம்மாதம் (அக்டோபர்) “தமிழ்த்திரை உலகத்தின் பார்வையில் கலைஞர்” என்ற தலைப்பில் சிறப்பிதழ் வெளிவருகிறது.**

**இச்சிறப்பிதழுக்காக சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்கள் எழுதிய சிறப்புக் கட்டுரையை இங்கே வெளியிட்டுள்ளோம்.**

### சூப்பர் ஸ்டார் ரஜினி காந்த்

**நான்** மிகவும் மதிக்கும் அமரர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா தருணத்தில் நான் அவரைப் பற்றி ஒரு கட்டுரை எழுத முரசொலி பத்திரிகை அலுவலகத்திலிருந்து திரு.செல்வம் அவர்கள் என்னைக் கேட்டுக்கொண்டார்.

கலைஞரின் வாழ்க்கை ஒரு திறந்த புத்தகம். திரு. எஸ்.பி. முத்துராமன் அவர்கள் கலைஞரைப் பற்றி நிறைய விஷயங்களை எனக்கு சொல்லியிருக்கிறார். திரு. எஸ்.பி.முத்துராமன் அவர்களின் தந்தை திரு. ராம சுப்பையா அவர்கள் திராவிட கட்சியின் தீவிர விசுவாசியாக இருந்தவர். அண்ணா, கலைஞர் மற்றும் பல தலைவர்கள் செட்டிநாடு சென்றால் திரு.ராம சுப்பையா அவர்களின் வீட்டில் தான் தங்குவார்கள். அங்குதான் பல ஆலோசனைகள் மற்றும் முக்கிய முடிவுகளை எடுப்பார்கள். திரு.எஸ்.பி.முத்துராமன் அவர்கள் கலைஞரைப் பற்றி சொல்ல சொல்ல அவர் மீது இருந்த மதிப்பும், மரியாதையும் அதிகமானது.

தமிழ் திரை உலகின் இரண்டு ஜாம்பவான்களான திரு. சிவாஜி கணேசன் அவர்களும் மற்றும் திரு.எம்.ஜி.ஆர் அவர்களும் புகழின் உச்சிக்குச் செல்ல முக்கியமான காரணமாக இருந்தவர் கலைஞர் அவர்கள். கலைஞர் அவர்கள் எழுதிய “பராசக்தி” படத்தின் அற்புதமான, சமுதாய சீர்திருத்தும், புரட்சிகரமான வசனங்களை உணர்ச்சிகரமாக பேசி, நடித்து நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் ஒரே நாளில் உச்ச நட்சத்திரம் ஆனார். மதிப்பிற்குரிய திரு.எம்.ஜி.ஆர். அவர்களுக்கு “மருத நாட்டு இளவரசி”, “மந்திரி குமாரி”, “மலைக்கள்ளன்” போன்ற படங்களுக்கு வசனம் எழுதி அந்தப் படங்களை மிகப்பெரிய வெற்றிப்படங்களாக்கி திரு.எம்.ஜி.ஆர் அவர்களை நட்சத்திரமாக மாற்றினார்.

1977 ஆம் ஆண்டு என்னுடைய TMU 5004 பியட் காரில் மியூசிக் அகாடமி பக்கம் ஓட்டிக் கொண்டிருந்தேன். பின்னால் ஒரு வண்டி வந்துகொண்டிருந்தது. வண்டியில் வந்துகொண்டிருந்தவரை என் கார் கண்ணாடி மூலம் உற்றுப்பார்த்தேன். நன்கு தெரிந்த முகம். கண்ணில் கருப்புக் கண்ணாடி கலைஞர் என்று தெரிந்தது. நான் அப்படியே இடது பக்கமாக ஒதுங்கி வழி விட்டேன். எனது காரை கடக்கும் போது அவர் என்னைப் பார்த்து அன்புடன் சிரித்து கைகளை ஆட்டினார். காரில் என்னைப் பார்த்து அன்புடன் சிரித்த அந்த சிரிப்பு என் வாழ்க்கையில் மறக்க முடியாதது. அதுதான் நான் கலைஞர் அவர்களை முதல் முதலில் பார்த்தது.



நான் 1980-ல் ஒரு திரைப்படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியிருந்தேன். அந்த திரைப்படத்தின் தயாரிப்பாளர் கலைஞர் அவர்களின் நண்பர் மற்றும் அவருக்கு மிகவும் நெருக்கமானவர். அந்தத் திரைப்படத்தின் வசனங்கள் தயாரிப்பாளருக்கு திருப்தி தரவில்லை. படம் ஆரம்பிப்பதற்கு சில நாட்களுக்கு முன்னால் தயாரிப்பாளர் என்னிடம் வந்து “நான் உங்களுக்கு ஒரு மகிழ்ச்சியான விஷயத்தை சொல்கிறேன்... நம் படத்துக்கு கலைஞர் அவர்கள் வசனம் எழுத ஒப்புக்கொண்டார்” என்று மிகவும் மகிழ்ச்சியுடன் கூறினார். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது.

எளிமையான தமிழ் வசனங்களை பேசி நடிப்பதற்கே திண்டாடிக் கொண்டிருக்கும் நான் கலைஞரின் வசனங்களை பேசி நடிப்பதா ??? நடக்காத காரியம்... இதற்கு நான் கர்நாடகாவிற்கே ஓடிப்போய் மறுபடியும் பேருந்தில் டிக்கெட் விற்க ஆரம்பித்து விடலாம். தயாரிப்பாளரிடம் முடியவே முடியாது என்று கூறினேன். இதைக் கேட்ட தயாரிப்பாளருக்கு இடி விழுந்த மாறி ஆயிற்று. அவர் வசனம் எழுத சம்மதித்ததே நமக்கு கிடைத்த பாக்கியம். அவர் வசனம் எழுதினால் நம் படம் மிகப்பெரிய வெற்றி அடையும். உங்களுக்கு சிரமமாக இருந்தாலும் இதற்கு ஒப்புக்கொள்ளுங்கள் இல்லையென்றால் அவர் எழுத சம்மதித்த பிறகும் நீங்கள் வேண்டாம் என்று கூறியதை அவரிடம் நான் எப்படி சொல்வது என்று திண்டாடினார். நான் அவரை சந்திக்க ஒரு வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுங்கள், நானே அவரிடம் சொல்கிறேன் என்று கூறினேன். அவரும் வேண்டா வெறுப்பாக சரி என்று சொல்லி கலைஞர் அவர்களை சந்திக்க ஒரு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தார்.



கலைஞர் அவர்களை சந்திக்க கோபாலபுரத்தில் உள்ள அவருடைய இல்லத்திற்கு சென்றேன். தமிழ் நாட்டுக்கே தெரிந்த லக்ஷனமான வீடு. அவருடைய உதவியாளர் சண்முகநாதன் அவர்கள் ஒருவர் மட்டுமே செல்லக்கூடிய படிக்கட்டுகள் மூலம் என்னை கலைஞர் இருக்கும் அறைக்குள் அழைத்துச் சென்றார். 1977 ல் மியூசிக் அகாடமி அருகில் பார்த்த அதே முகம்.., அதே புன்னகை... வாங்க என்று அவருக்கே சொந்தமான அந்த கரகரப்புக் குரலில் என்னை அழைத்து நலம் விசாரித்தார். பின்பு “கதையைக் கேட்டேன்... நன்றாக இருக்கிறது. சிறப்பாக வசனங்களை எழுதிடலாம்” என்றார். நான் அவரை சார் என்று தான் அழைப்பேன். “சார் உங்கள் வசனங்களை நான் பேச முடியாது.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 04-10-2023

# அறிவியலாளர்களைப் போற்றுவதிலும் முதல்வர்

அனைத்துத் துறைகளையும் இந்தியாவிலேயே முதன்மையாக மாற்றுவதன் மூலம் - இந்தியாவில் முதலமைச்சர்களுக்கு எல்லாம் முதல் அமைச்சராகத் திகழ்கிறார் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள். அந்த வரிசையில் அறிவியலாளர்களைப் போற்றுவதிலும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், முதல்வராகத் திகழ்கிறார்!

**‘ஒளிரும் தமிழ்நாடு மிளிரும் தமிழர்கள்’** - என்ற விழாவே, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தனித்தன்மையை அடையாளம் காட்டுவதாக அமைந்திருந்தது.

இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்தில் பணியாற்றி - உலகையே இந்தியாவின் பக்கம் திருப்பிய - தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒன்பது அறிவியல் ஆய்வாளர்களை ஒரே மேடைக்கு அழைத்து வந்து பாராட்டிய காட்சி என்பது இதுவரை இந்தியாவில் எந்த மாநிலமும் செய்யாதது ஆகும். ஏன், ஒன்றிய அரசே கூட இப்படி ஒரு பாராட்டுவிழாவை நடத்தியது இல்லை.

தமிழ்நாட்டைச் சேர்ந்த அறிவியல் ஆய்வாளர்களை அழைத்துப் பாராட்டியதன் மூலமாக, அனைத்து மாநில அரசுகளுக்கும் முன்னுதாரணத்தைச் செய்து காட்டி இருக்கிறார் முதலமைச்சர் அவர்கள். **“இந்த மேடையில் நிற்பதே எனக்குப் பெருமையாக இருக்கிறது! தமிழ்நாட்டின் முதலமைச்சராக மட்டுமல்ல - தமிழனாகப் பிறந்த பெருமையை இன்றைய தினம் அதிகமாக அடைகிறேன்! இந்தியாவின் பக்கமாக உலகத்தையே பார்க்க வைத்த தமிழ்நாட்டு அறிவியல் மேதைகள் ஒன்பது பேர் இந்த மேடையில் அமர்ந்திருப்பது எனது உள்ளத்தை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியிருக்கிறது”** என்று சொல்லிக் காட்டிய பெருமை என்பது, இதுவரை அவர்கள் அடையாத பெருமை ஆகும்.

முனைவர் கே.சிவன், முனைவர் மயில்சாமி அண்ணாதுரை, முனைவர் வி.நாராயணன், ஏ.இராஜராஜன், எம்.சங்கரன், ஜெ.ஆசீர் பாக்கியராஜ், மு.வனிதா, நிகார்ஷாஜி, முனைவர் ப.வீரமுத்துவேல் ஆகிய ஒவ்வொருவரது சிறப்பையும் சுட்டிக்காட்டிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், **“என்னைப் பொருத்த வரையில் தமிழ்நாட்டு இளைய சமுதாயத்தினர் இவர்களையே தங்களது வழிகாட்டிகளாக ஏற்றுக் கொண்டு முன்னேற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்”** என்று தமிழ்நாட்டு மாணவ சமுதாயத்துக்கு அவர் வைத்த வேண்டுகோள் என்பதும், இதுவரை யாரும் சொல்லிக் காட்டாத பெருமை ஆகும்.

இவை அனைத்துக்கும் சிகரம் வைப்பதைப் போல, **“இத்தகைய பெருமையை இந்தியாவுக்கும் தமிழ்நாட்டுக்கும் ஏற்படுத்திக் கொடுத்த - ஏற்படுத்திக் கொடுக்கப் போகும் மேதைகளாக இந்த ஒன்பது விஞ்ஞானிகளுக்கும் தமிழ்நாடு அரசின் சார்பில் - ஒவ்வொருவருக்கும் 25 லட்சம் ரூபாய் வழங்குகிறோம் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்”** என்று சொன்னபோது அரங்கமே அதிர்ந்தது. மேடையில் இருந்த அனைத்து அறிவியல் ஆளுமைகளும் எழுந்து நின்று முதலமைச்சர் அவர்களுக்கு வணக்கம் தெரிவித்தார்கள். **“உங்கள் அறிவுக்கான அளவுகோல் ஏதுமில்லை. உங்கள் உழைப்புக்கான அங்கீகாரத்தின் அடையாளமாக தமிழ்நாடு அரசு இந்தத் தொகையை வழங்குகிறது. இதனை ஏற்றுக் கொண்டு - மேலும் மேலும் இந்தியாவுக்காக உழைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்”** என்று மகுடம் சூட்டினார் முதலமைச்சர் அவர்கள்.

‘இஸ்ரோ’ சிவன் சொல்லி இருக்கிறார். **“தமிழ்நாடு அரசு ஏற்பாடு செய்துள்ள இந்த விழா மூலம் அரசு பள்ளிகளில் தமிழ் வழியில் படிக்கின்ற பள்ளி மாணவர்கள், தாங்கள் எந்த அளவிலும் குறைவானவர்கள் அல்ல, நம்மாலும் சாதிக்க முடியும் என்ற உத்வேகத்தை ஏற்படுத்தியுள்ளது. எதிர்காலத்தில் இவர்களும் விஞ்ஞானிகளாக வருவதற்கு நிறைய வாய்ப்பு உள்ளது”** என்று சொல்லி இருப்பது முதலமைச்சர் அவர்களின் முழுமுதல் நோக்கத்தை எடுத்துச் சொல்வதாக அமைந்திருந்தது.

சந்திரயான் 3 - திட்ட இயக்குனர் விஞ்ஞானி வீரமுத்துவேல் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். **“தமிழக அரசு எங்களுக்கு மரியாதை செய்தது மகிழ்ச்சியாக இருக்கிறது. இது போன்று எங்களை ஊக்கம் அளிப்பதால் எங்களை மட்டும் அல்ல அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் அனைவரையும் சமூகத்திற்கு பெரிய அளவில் கொண்டு போக செய்யும். இந்த விழாவிற்கு ஏற்பாடு செய்த முதலமைச்சர் அவர்களுக்கு மிக்க நன்றி. அரசாங்கத்திற்கு நன்றி. விஞ்ஞானிகள் சார்பாக நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம்”** என்று மகிழ்ச்சி அடைந்துள்ளார். ஆமாம்! ஒட்டுமொத்தமாக அறிவியல் உலகத்தையே பாராட்டிவிட்டார் முதலமைச்சர் அவர்கள்.

விஞ்ஞானி வனிதா முத்தையா, **“தமிழ்நாடு அரசு எங்களுக்கு மிகப் பெரிய மரியாதையைக் கொடுத்துவிட்டது. நாங்கள் இப்படி நடக்கும் என்று நினைக்கவே இல்லை. ஒரு சின்ன நிகழ்ச்சியாக இருக்கும் என்று நினைத்தோம். மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது.தமிழக முதல்வருக்கு நன்றி”** என்று மகிழ்ச்சியைத் தெரிவித்து இருக்கிறார்.

ஆதித்யா எல்1 திட்ட இயக்குனர் விஞ்ஞானி நிகர் ஷாஜி, **“எங்களை தமிழக அரசு கௌரவித்தது எங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. தமிழ்நாட்டில் பிறந்ததற்கு நாங்கள் பெருமை அடைகிறோம்”** என்று சொல்லி இருக்கிறார்.

விஞ்ஞானி நாராயணன், **“தமிழ்நாடு அனைத்துத் துறையிலும் வளர்ந்து உள்ளது. முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களது பணி தமிழ்நாடும் இந்தியாவும் வளர்ச்சி அடைய அடித்தளமாக இருக்கும். நாம் அனைவரும் நம் தமிழ்நாட்டு முதல்வரை பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்”** என்று சொல்லி இருக்கிறார்.

அறிஞர்களைப் போற்றும் அரசு அறிவியல் அறிஞர்களைப் போற்றும் அரசு என்பதை அந்த மேடையில் இருந்தபடியே நாட்டுக்கு எடுத்துக் காட்டிவிட்டார் முதலமைச்சர் அவர்கள். இதேபோன்ற அறிவியல் ஆராய்ச்சியாளர்களை உருவாக்குவதற்கும் அடித்தளம் அமைத்துவிட்டார் முதலமைச்சர் அவர்கள்.

**அதேபோல், அறிவியல் ஆளுமைகளால் போற்றப்படும் முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் அவர்கள் உயர்ந்து நிற்கிறார்.**

**ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்.**

# போக்குவரத்து நெரிசலை குறைக்க சிறப்பு திட்டம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

பெற்றுத் தருவதில் மும்முரம் காட்ட வேண்டும்.

பட்டியலின - பழங்குடியின மக்களுக்கு எதிரான வன்கொடுமை செயல்கள் குறித்து அம்மக்கள் மாவட்ட அலுவலர்களுக்கு அச்சமின்றி தகவல் தெரிவிக்க பிரத்யேக ‘வாட்ஸ் அப்’ மற்றும் தொலைபேசி எண்ணை மாவட்ட ஆட்சியர்கள் அறிவித்து அவர்களுக்கு உதவிட வேண்டும்.

சமீப காலத்தில், தூத்துக்குடி மாவட்டம், மொறப்பநாடு கிராம நிர்வாக அலுவலர் லூர்து பிரான்சிஸ் அவர்கள் மற்றும் திருச்சி மாவட்டம், நவல்பட்டு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளர் பூமிநாதன் ஆகியோரின் கொலை வழக்குகளில் காவல்துறை விரைவாக செயல்பட்டு குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத் தந்தது பாராட்டத்தக்கது.

தற்போதைய காலகட்டத்தில், உண்மைக்குப் புறம்பான செய்திகளை பரப்புவதில் சமூகஊடகங்களின் தாக்கம் அதிகமாக உள்ளது. எனவே, மாவட்ட ஆட்சித் தலைவர்களும், காவல் கண்காணிப்பாளர்களும் சமூக ஊடகங்களைத் தொடர்ந்து கண்காணித்து, பொய்ச் செய்திகளை பரப்புவோர் மீதும், சமூக ஒற்றுமைக்குக் குந்தகம் விளைவிப்போர் மீதும் கடுமையான நடவடிக்கையை எடுப்பதோடு, அதற்குரிய உண்மை நிலையை சமூக ஊடகங்களில் தெளிவுபடுத்த வேண்டும்.

முன்னுரையாக சில கருத்துகளை நான் கூறினேன். என் மனதின் எண்ணங்களை உங்களோடு நான் பகிர்ந்து கொண்டேன்.

நான் குறிப்பிட்ட ஆலோசனைகள் பற்றியும் இதனைத் தாண்டியும் பல்வேறு நடப்புகள் குறித்தும், அரசின் திட்டங்கள் கடைக்கோடி மனிதரையும் சென்று சேரவும் உங்களது ஆக்கப்பூர்வமான கருத்துகளையும் செயல்திட்டங்களையும் இங்கு வழங்குங்கள்.

கருத்துகளைச் சொல்ல இருப்பவர்கள் சுருக்கமாகவும் அதே நேரத்தில், தெளிவாகவும் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

காவல்துறை மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் கட்டமைப்பிற்கு வேண்டிய வசதிகள் குறித்து, இக்கூட்டம் முடிந்த பிறகு, துறைத் தலைவர்களிடம் நீங்கள் முறையிட்டு தீர்வு காணலாம். எனவே, மாவட்ட நிர்வாகம், சட்டம் ஒழுங்கு உள்ளிட்ட முக்கியப் பிரச்சினைகள் குறித்து மட்டும் இங்கே கருத்துகளைப் பதிவு செய்திடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

உங்களது கருத்துகளுக்கும் ஆலோசனைகளுக்கும் மாநாட்டின் இறுதியில் நான் விளக்கங்களை அளிக்கிறேன்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இம்மாநாட்டில், அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், அரசுத் துறைச் செயலாளர்கள், காவல் துறை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதி தொப்பம்பட்டி

# ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.21.97 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப் பணிகள்!

## அமைச்சர் அர.சக்கரபாணி தொடங்கி வைத்தார்!

திண்டுக்கல், அக்.4 -

ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதி தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.21.97 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப் பணிகளை அமைச்சர் அர. சக்கரபாணி தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பேசியதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து, அவற்றை திறம்பட செயல்படுத்தி வருகிறார். தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றியதோடு, சொல்லாத பல திட்டங்களை அறிவித்து, செயல்படுத்தி வருகிறார். மஞ்சநாயக்கன்பட்டி ஊராட்சியில் 84 பணிகள் ரூ.10 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறது.

மேலும், இப்பகுதி மக்களுக்கு தேவையான சாக்கடை வசதி, சிமெண்ட் சாலைகள், தடுப்பணை ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும். 306 ஊராட்சிகளிலும் மக்களுடைய அடிப்படை தேவைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஆட்சி பொறுப்பேற்ற முதலமைச்சர் அவர்கள் மக்களுக்குத் தேவையான அடிப்படை தேவைகளை நிறை வேற்றுவதற்கு பல்வேறு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார். அந்த வகையில் ஒட்டன்சத்திரம், பழனி சட்டமன்றத் தொகுதிக்கு காவிரி நீர் ஆதாரத்தைக்கொண்டு கூட்டுக்குடிநீர் திட்டம் செயல்படுத்த ரூ.1000 கோடி மதிப்பீட்டிலான குடிநீர் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அதற்கான பணிகள் தொடங்கப்பட்டு விட்டன. இந்த திட்டம் நிறைவேற்றப்பட்டால் வரும் 30 ஆண்டு காலங்களுக்கு இங்கு குடிநீர் தட்டுப்பாடு ஏற்படாது.

மகளிருக்கு நகர பேருந்தில் கட்டணமில்லா பயண சேவை வழங்கப்பட்டு வருகிறது. அரசு பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை படித்து உயர் கல்வி படிக்கும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1,000 உதவித்தொகை வழங்கும் புதுமைப்பெண் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

மேலும், அரசுப் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 31,000 பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 18.50 இலட்சம் குழந்தைகள் பயன்பெறுகின்றனர்.

பெண்கள் படிக்கின்ற 2 கல்லூரிகள் கொண்டுவரப்பட்டுள்ளன. அடுத்தாண்டு ஒட்டன்சத்திரத்தில் ரூ.45 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும். உயர்கல்வித் துறையின் மூலமாக ஆண்கள், பெண்கள் படிக்கின்ற அரசு கல்லூரி கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது. விருப்பாட்சியில் தொழிற் பயிற்சி கல்லூரி ரூ.7 கோடி மதிப்பீட்டில் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது.

மேலும், ஒட்டன்சத்திரத்தில் ரூ.11 கோடி மதிப்பீட்டில் போட்டி தேர்வுக்கு தயாராகும் பயிற்சி மையம் குளிர்சாதன வசதியோடு, பெரிய நூலகத்துடன் அமைக்கப்படும்.

தொப்பம்பட்டி மற்றும் கோதையுறம்பு ஆகிய பகுதியில் விளையாட்டு மைதானம் அமைப்பதற்கு பணிகள் நடைபெற்று வருகிறது.

முதலமச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பின்னர் தமிழ்நாட்டில் 1.50 இலட்சம் விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகள் உற்பத்தி செய்த பொருட்களை சேமித்து வைப்பதற்கு குளிர்சாதன கிடங்கு ரூ.5 கோடி மதிப்பீட்டில் ஒட்டன்சத்திரத்தில் கட்டுமான பணிகள் முடிவடைந்துள்ளது விரைவில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளின் பயன்பாட்டிற்கு திறந்து வைப்பார்கள். பெண்களுக்கு வழங்கப்படும் கடன் தொகை ரூ.12 இலட்சத்திலிருந்து ரூ.20 இலட்சமாக உயர்த்தி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே பெண்கள் முன்னேற்றத்திற்காக இந்த அரசு பல்வேறு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இதுபோல் பல்வேறு சிறப்பான திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார். எனவே, பொதுமக்கள் வருகின்ற காலங்களில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தொடர்ந்து ஆதரவு வழங்க வேண்டும். ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதி, தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியம் மஞ்சநாயக்கன்பட்டி, தேவத்தூர், சிக்கமநாயக்கன்பட்டி, கள்ளிமந்தையம், பொருளூர், வேலம்பட்டி, மேட்டுப்பட்டி ஆகிய ஊராட்சி பகுதிகளில் ரூ.1.28 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப்பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, ரூ.21.97 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் அர.சக்கரபாணி பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பெ.திலகவதி, மாவட்ட ஊராட்சி துணைத்தலைவர் கா.பொன்ராஜ், பழனி வருவாய் கோட்டாட்சியர் சௌ.சரவணன், ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் முத்துச்சாமி, தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் சத்தியபுவனா ராஜேந்திரன், ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர் முருகாத்தாள், ஊராட்சி மன்ற தலைவர் மாரியம்மாள் பழனிச்சாமி, ஊராட்சி மன்ற துணைத் தலைவர் தன ராணி மோகனபிரபு, ஒட்டன்சத்திரம் வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தலைவர் ராஜாமணி, வட்டார வளர்ச்சி அலுவலர் தசீரா உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

### நவ்ஷாத் தலைமை! டி.பி.எம்.மைதீன்கான் பங்கேற்பு!

# நெல்லை மத்திய மாவட்டத்தில் பொதுக் கூட்டம்!

## பேராசிரியர் சுப.வீரபாண்டியன் சிறப்புரை!

நெல்லை, அக். 4-

நெல்லை மத்திய மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மற்றும் ஆதிதிராவிட நலக் குழு சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா பொதுக் கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மேலப்பாளையம் பஜார் திடலில் மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் நவ்ஷாத் தலைமையில் சிறுபான்மை நல உரிமைப் பிரிவு தலைவர் முகமது அலி, முருகேசன், மூப்பன், அப்துல் காதர்,சேக் மைதீன், ஜாஸ்பர், ஜெயகாந்த், ஜமீலா காஜா, மதுரை வீரன்,சோழராஜன், பொன்னுச்சாமி, காளியப்பன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் நவநீதன் மேலப்பாளையம் பகுதிச் செயலாளர் துபாய் சாகுல், மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் ராஜா முகமது, அண்ணாதுரை, ஹைதர் அலி, வீரபாண்டியன் ஆகியோர் வரவேற்பு உரையாற்றினர்.

இந்நிகழ்வில் திராவிட இயக்கத் தமிழர் பேரவை பொதுச் செயலாளர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன் கான் ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றினார். அதனைத் தொடர்ந்து நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

நிகழ்வில் மாநில வர்த்தக அணிச் செயலாளர் மாலைராஜா, மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் விஜிலா சத்யானந்த், மாநகரச் செயலாளர் சுப்பிரமணியன், மாவட்ட துணைச் செயலாளர்கள் சுரேஷ், கிரிஜா குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏ.எல்.எஸ்.லட்சுமணன்,மேயர் சரவணன், முன்னாள் மாவட்ட துணைச் செயலாளர் மணி, முன்னாள் மாவட்ட பொருளாளர் அருண்குமார், அணி அமைப்பாளர்கள் வில்சன் மணித்துரை, காமினி தேவன், பொன்னையா பாண்டியன், கருப்புசாமி கோட்டையப்பன், கருப்பசாமி என்ற செல்வம், மீரான்மைதீன், அனிதா சின்னத்துரை, ஷேக் தாவுது, அருள் இளங்கோ, ஸ்டீபன், துரை சக்தி கீதா,

பகுதிச் செயலாளர்கள் சுப்பிரமணியன், நமச்சிவாயம், அண்டன் செல்லதுரை, ஒன்றியச் செயலாளர் அருள் மணி, எல்.ஐ.சி. பேச்சி முத்து உள்பட கழக நிர்வாகிகள்,கழகத் தொண்டர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் மாநகர தொண்டரணி அமைப்பாளர் இம்மானுவேல் நன்றி உரையாற்றினார்.




சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் நடைபெற்ற மாவட்ட இளைஞரணி செயல்வீரர்கள் கூட்டத்தில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். உடன் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார், மாவட்டக் கழக துணைச் செயலாளர் கே.எஸ்.எம்.மணிமுத்து மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# தனி ஆளாகக் கட்சியைக் கட்டுக்கோப்பாக வழி நடத்தியவர் கலைஞர்!

## சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் சிறப்புக் கட்டுரை

முதல் பக்கத் தொடர்ச்சி



எளிமையான தமிழை பேசவே நான் சிரமப்படுகிறேன். அப்படி இருக்கும் போது உங்கள் வசனங்களை எப்படி நான் பேசுவது? என்னால் முடியாது. தவறாக நினைக்க வேண்டாம்" என்று கூறினேன். அதற்கு அவர் சிரித்து "எனக்கு யாருக்கு எப்படி எழுதவேண்டும் என்று நன்றாகவே தெரியும். சிவாஜிக்கு எழுதுவது போல எம்.ஜி.ஆருக்கு எழுத மாட்டேன்... அதே போல எம்.ஜி.ஆருக்கு எழுதுவதைப்போல சிவாஜிக்கு எழுதமாட்டேன். உங்கள் படங்களை நான் பார்த்துள்ளேன். உங்கள் ஸ்டைலில் நான் எழுதுகிறேன்" என்று சர்வ சாதாரணமாக கூறினார். எனக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. திடீரென்று ஒரு யோசனை தோன்றியது. அந்த யோசனை அந்த நொடியில் எனக்கு தோன்றியதற்கு நீ கெட்டிக்காரன்டா என்று நானே மகிழ்ந்து "சார் படப்பிடிப்பில் நாங்கள் சில வசனங்களை மாத்துவோம் சில வசனங்களை நீக்குவோம். அப்படி இருக்கும்போது உங்கள் வசனங்களை மாத்தவும் முடியாது நீக்கவும் முடியாது. அது சரியானதாகவும் இருக்காது" என்று கூறினேன்.

அதற்கு அவர் "மாற்றுங்கள்.. ஒன்றும் தவறில்லை, அது என்ன திருக்குறளா?" என்று கூறினார். அவர் அப்படி சொல்லுவார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. என்னுடைய கெட்டிக்காரத்தனமெல்லாம் நொடியில் சாம்பல் ஆகி விட்டது. எனக்கு ஒன்றும் புரியாமல் அமைதியாக இருந்தேன். இதை கவனித்த கலைஞர் சிரித்துக்கொண்டே "முன்னால் யார் வசனங்களை எழுதினாரோ அவரே எழுதட்டும்... நான் தவறாக நினைத்துக்கொள்ள மாட்டேன்... நீங்கள் கவலைப்பட வேண்டாம்..." என்று கூறி தன் உதவியாளரிடம் தயாரிப்பாளரை அழைக்கும் படி கூறினார்.

தயாரிப்பாளரிடம் "என்னுடைய வசனங்களை பேசுவதற்கு தனக்கு கஷ்டமாக இருக்கும் என்று ரஜினி கூறுகிறார். நான் அவருடைய பாணியிலேயே எழுதித் தருகிறேன் என்று சொன்னேன். அவரும் சம்மதித்தார். ஆனால் இந்த மாதம் 10ஆம் தேதி படப்பிடிப்பு என்று ரஜினி கூறுகிறாரே... நான் அடுத்த மாதம் என்று தானே நினைத்துக் கொண்டிருந்தேன்... காலம் மிகவும் கம்மியாக இருக்கின்றது. எனக்கு ஏற்கனவே முன் நிர்ணயிக்கப்பட்ட வேலைகள் நிறைய இருக்கின்றன. ஆகையால் இந்தப் படத்திற்கு என்னால் வசனங்கள் எழுத முடியாது. அடுத்த படத்தில் பார்த்துக் கொள்ளலாம்" என்று கூறி தயாரிப்பாளரை அனுப்பி வைத்தார். பிறகு என்னைப் பார்த்து "என்ன ரஜினி இப்போ உங்களுக்கு திருப்தியா?" என்று கேட்டார்.

தயாரிப்பாளரின் மனதையும்துன்புறுத்தாமல், என்னையும் திருப்திபடுத்திய அவருடைய செய்கையால் எனக்கு அவர் மீது இருந்த மதிப்பும், மரியாதையும் பல மடங்கு உயர்ந்தது. ஆனாலும் அவருடைய வசனங்களை பேசி நடித்திருக்கலாமோ? தவறு செய்து விட்டோமோ? என்ற ஒரு குற்ற உணர்ச்சி இன்றும் எனக்குள் இருந்து கொண்டே இருக்கின்றது.

பல நேரங்களில் நான் அவருடன் நெருங்கிப் பழகி இருக்கிறேன். அவர் எந்த ஒரு விஷயத்திற்கும் நான் அவரை கவனித்துப் பார்த்ததில் எந்த ஒரு முடிவையும் எடுத்தோமா கவிழ்த்தோமா என்று எடுக்க மாட்டார். அதற்கு சம்மந்தப்பட்டவர்களின் பல பேருடன் விசாரித்து, பேசி, விவாதித்து தான் எந்த ஒரு முடிவையும் எடுப்பார். அப்படி இருக்கும் போது எம்.ஜி.ஆர் அவர்களை கட்சியில் இருந்து நீக்கும் முக்கியமான முடிவை நிச்சயம் கலைஞர் அவர்கள் பல பேரின் ஆலோசனைகளை கேட்டுதான் எடுத்திருப்பார்.

எனக்கு தெரிந்த ஒருவர். அவர் பெயர் கூற இயலாது. அவர் எனக்கு ஒரு ஆடியோ கேசட்டை கொடுத்து "இதை யாரிடமும் கொடுக்க வேண்டாம். நீங்கள் மட்டும் கேட்டுபிறகு என்னிடமே திருப்பிக்கொடுத்து விடுங்கள்" என்று கூறினார். அது 1972 ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர். அவர்கள் கட்சியை விட்டு நீக்கப்பட்ட பிறகு அவர்க்கும் திரு. எஸ்.எஸ். ராஜேந்திரன் அவர்களுக்கும் நடந்த தொலைப்பேசி உரையாடல் ஆகும். அதில் திரு. எஸ்.எஸ்.ஆர். அவர்கள் "அண்ணே... ஏதோ கெட்ட நேரம் அவசர அவசரமாக என்னென்னமோ நடந்து விட்டது. வருங்காலத்தில் கழகத்திற்கு இதனால் பெரிய இழப்பு ஏற்படும். வேறு யாரும் இல்லாமல் நீங்கள் இருவர் மட்டும் ஒரு பொது இடத்தில் சந்தித்து மனம் விட்டுப்பேசினால் எல்லாம் சரி ஆகிடும். கலைஞரிடம் நான் பேசுகிறேன். எனக்காக இதை செய்யுங்கள்" என்று கூறுவார். அதற்கு எம்.ஜி.ஆர். அவர்கள் "இல்லை தம்பி.. என்னுடைய விசுவாசிகள் எனக்கு ஆதரவாக போராட்டங்கள் செய்து என்னுடைய அபிமானிகள் என்று அடையாளம் காட்டிக் கொண்டு விட்டார்கள். நான் திரும்பி கட்சியில் சேர்ந்தால் என்னுடைய அபிமானிகளை கட்சியில் உள்ளவர்கள் முந்தைய மாதிரிப் பார்க்க மாட்டார்கள். அவர்களைத் தனிமைப்படுத்துவார்கள் அவர்கள் எல்லாம் உதிரிப்பூக்கள் ஆகிவிடுவார்கள். அவர்களுக்காகவே நான் தனிக்கட்சி ஆரம்பிக்க வேண்டும். எனக்கு வேறு வழியில்லை. தப்பாக நினைத்துக் கொள்ளாதே" என்று அந்த உரையாடல் முடிந்திருக்கும்.



### 'எதையும் தாங்கும் இதயம் வேண்டும்' என அண்ணா கலைஞரை நினைத்துத்தான் சொன்னாரோ?

எதையும் தாங்கும் இதயம் என்று அண்ணா இவரை நினைத்து தான் சொன்னாரோ? எவ்வளவு வேதனைகள், சங்கடங்கள், ஏமாற்றங்கள், துரோகங்கள் என அத்தனையும் தாண்டி தொண்டர்களுக்கு அவர் எழுதிய ஆயிரக்கணக்கான கடிதங்கள், கட்டுரைகள், சினிமாவில் எழுதிய வசனங்கள், அவர் செய்த சுற்றுப் பயணங்கள், மேடைப்பேச்சுகள், 13 ஆண்டுகள் ஆட்சியில் இல்லை என்றாலும் கட்டுக் கோப்பாக, ஒரு தனி ஆளாக கட்சியை வழி நடத்தி மீண்டும் ஆட்சிக்கு வந்தார் என்றால் அது ஒரு மாபெரும் புரட்சி.

அதன் பின் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் அ.தி.மு.க. என்ற கட்சியை உருவாக்கினார். அதன் பின் யார் யார் எம்.ஜி.ஆர். அவர்கள் கட்சியை விட்டு நீக்க வேண்டும் என்று சொன்னார்களோ.. அதில் பல பேர் ஒவ்வொருவராக கட்சியிலிருந்து விலகி எம்.ஜி.ஆர். பக்கம் போனார்கள். அதனால் கலைஞரின் இதயம் எவ்வளவு வேதனையில் துடித்திருக்கும்?

எதையும் தாங்கும் இதயம் என்று அண்ணா இவரை நினைத்து தான் சொன்னாரோ? எவ்வளவு வேதனைகள், சங்கடங்கள், ஏமாற்றங்கள், துரோகங்கள் என அத்தனையும் தாண்டி தொண்டர்களுக்கு அவர் எழுதிய ஆயிரக்கணக்கான கடிதங்கள், கட்டுரைகள், சினிமாவில் எழுதிய வசனங்கள், அவர் செய்த சுற்றுப்பயணங்கள், மேடைப்பேச்சுகள், 13 ஆண்டுகள் ஆட்சியில் இல்லை என்றாலும் கட்டுக் கோப்பாக, ஒரு தனி ஆளாக கட்சியை வழி நடத்தி மீண்டும் ஆட்சிக்கு வந்தார் என்றால் அது ஒரு மாபெரும் புரட்சி.

அவரைப்பற்றி எழுதினால் எழுதிக் கொண்டே போகலாம். அவருடைய இந்த நூற்றாண்டில் அவரை நினைத்து, அவருடன் நான் கழித்த எத்தனையோ தருணங்களை ஞாபகப்படுத்தி, அவர் வாழ்ந்த அதே காலத்தில் நானும் வாழ்கிறேன், அவருடைய இதயத்தில் எனக்கென்று ஒரு தனி இடம் இருந்தது. அதனால்தான் எந்த ஒரு விழாவிலும் என்னை அவர் அருகில் அமர வைத்து மகிழ்வார் என்பதை நினைக்கும் பொழுது எனக்கு மிகவும் பெருமையாக இருக்கின்றது.

**வாழ்க கலைஞரின் புகழ்!!!**

**வணக்கம்!!!**

---

புதுக்கோட்டை மாவட்டம்

## திருவரங்குளம் ஊராட்சியில் மாணவ - மாணவிகளுக்கு மிதிவண்டிகள்!

### அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார்!

புதுக்கோட்டை, அக். 4 -

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 27.09.2023 அன்று பல்வேறு பணிகளை துவக்கி வைத்து, மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டி களை வழங்கினார்.

பின்னர் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பொதுமக்கள் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் கிராமப்புற பகுதிகளில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் இன்றையதினம் திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் பல்வேறு பணிகள் துவக்கி வைக்கப்பட்டது.

அதன்படி, திருவ ரங்குளம் ஊராட்சி ஒன்றியம், கத்தக்குறிச்சி, வாண்டாக்கோட்டை மற்றும் வல்லத்திராக்கோட்டை பகுதிகளில் புதிய மின்மாற்றிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் இப்பகுதிகளில் உள்ள குறைந்த மின்அழுத்தம் சரிசெய்யப்பட்டு, வீட்டு மின்சாரம், விவசாயத்திற்குத் தேவையான மின்சாரம் உள்ளிட்டவைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. மேலும் வல்லத்திராக்கோட்டையில் பெரமர் திரௌபதியம்மன் கோவில் முன் மண்டபம் மராமத்து பணியும் இன்றையதினம் துவக்கி வைக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து, வல்லத்திராக்கோட்டை அரசு மேல்நிலைப்பள்ளியைச் சேர்ந்த 65 மாணவர்களுக்கும், 86 மாணவிகளுக்கும் மற்றும் வேங்கிடகுளம் தூய வளனார் மேல்நிலைப்பள்ளியைச் சேர்ந்த 78 மாணவர்களுக்கும், 71 மாணவிகளுக்கும் என மொத்தம் 300 மாணவ, மாணவிகளுக்கு ரூ.14,48,020 மதிப்பிலான விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டது. இம்மாணவ, மாணவிகள் நாள்தோறும் பள்ளிக்கு மிதிவண்டிகளை பயன்படுத்துவதன் மூலம் தங்களுக்கான உடற்பயிற்சியாக அமைவதுடன், சரியான நேரத்திற்கு பள்ளிக்கு சென்று வர முடியும்.

மேலும் பள்ளித்திவிடுதி ஊராட்சியில், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.39 லட்சம் மதிப்பிலான பணிகள் அடிக்கல்நாட்டி துவக்கி வைக்கப்பட்டது. இதன்மூலம் இப்பகுதி பொதுமக்களின் அடிப்படை தேவைகள் பூர்த்தி அடைவதுடன், வளர்ச்சி ஏற்படுவதற்கு வாய்ப்பாக அமையும். மேலும் சேந்தன்குடி பகுதியில் பகுதி நேர கால்நடை மருத்துவ மனை திறந்து வைக்கப்பட்டது. இப்பகுதி கால்நடை வளர்ப்போர் தங்களது கால்நடைகளுக்கான மருத்துவ வசதியினை வீடுகளுக்கு அருகாமையிலேயே பெற்றுக்கொள்ள முடியும். மேலும் கால்நடைகளுக்கான மருத்துவ சேவையினை பெற்று, நோயில்லாமல் கால்நடைகளை வளர்த்து பயன்பெறலாம். எனவே பொதுமக்கள், மாணவ, மாணவிகள் அனைவரும் தமிழக அரசால் செயல்படுத்தப்படும் இதுபோன்ற பல்வேறு நலத்திட்டங்களை உரிய முறையில் பெற்று முன்னேற்றம் அடைய வேண்டும் என சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், மாவட்ட கல்வி அலுவலர் (அறந்தாங்கி) ராஜேஸ்வரி, திருவரங்குளம் ஒன்றியக்குழுத் தலைவர் வள்ளியம்மை தங்கமணி, வட்டாட்சியர்தி விஸ்வநாதன், வட்டார வளர்ச்சி அலுவலர் ஆயிஷாராணி, அரு. வடிவேல், உஷா செல்வம், தலைமையாசிரியர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



அண்ணல் காந்தியடிகள் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை மேல மாசி வீதி பகுதியில் காதிகிராப்டிலுள்ள காந்தியடிகள் அவர்களின் திருஉருவச் சிலைக்கு அமைச்சர்கள் பி.மூர்த்தி, பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்திய போது எடுத்த படம். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சங்கீதா, மாநகராட்சி மேயர் இந்திராணி பொன் வசந்த், ஊராட்சி குழு தலைவர் சூரிய கலா கலாநிதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

தமிழ்நாடு முழுவதும் நடைபெற்ற டெங்கு மற்றும் மழைக்கால நோய்கள்!

## சிறப்பு மருத்துவ முகாமில் 1.43 லட்சம் பேர் பங்கேற்று பயன் பெற்றனர்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, அக். 4 -

முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி 1.10.23 அன்று தமிழ்நாடு முழுவதும் ஆயிரம் டெங்கு மற்றும் மழைக்கால நோய்கள் சிறப்பு மருத்துவ முகாம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டு 2,183 மருத்துவ முகாம்கள் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. மருத்துவ முகாம்களில் பயன் பெற்றவர்கள் எண்ணிக்கை (1,42,978) ஒரு லட்சத்து 42 ஆயிரத்து 978 பேர் ஆகும்.


இதில் காய்ச்சல் கண்டறியப்பட்டவர்கள் 1434 பேர், இருமல் மற்றும் சளி கண்டறியப்பட்டவர்கள் 1340 பேர், மேல் பரிசோதனைக்காக பரிந்துரைக்கப்பட்டவர்கள் 18 பேர் என்று அமைச்சர் மா.சுப்பிர மணியன் நடைபெற்ற மருத்துவ முகாம்கள் பற்றிய அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

தமிழினத் தலைவர்

## கலைஞர் நூற்றாண்டு சிறப்பிதழ் (5)

### இன்று வெளிவருகிறது !



**தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினையொட்டி, ஒவ்வொரு மாதமும் 3 ஆம் தேதியன்று " முரசொலி சிறப்பிதழ்" வெளிவரும் என்று அறிவிக்கப்பட்டு, இதுவரை 4 சிறப்பிதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன.**

**அக்டோபர் 2 - திங்கள் கிழமை, அண்ணல் காந்தி அடிகள் பிறந்த நாள் என்பதால், அன்று 'முரசொலி' அலுவலகத்துக்கு விடுமுறை.**

**எனவே அக்டோபர் 4, புதன்கிழமை அன்று, முரசொலி சிறப்பிதழ்(5), "தமிழ்த் திரை உலகத்தின் பார்வையில் கலைஞர்" என்ற தலைப்பில், முரசொலியின் இணைப்பாக வெளிவருகிறது.**

**- ஆசிரியர்.**

கடலூர் மாவட்டத்தில் நீரில் மூழ்கி

# உயிரிழந்த மாணவியின் குடும்பத்திற்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, அக்.4-

கடலூர் மாவட்டத்தில் நீரில் மூழ்கி உயிரிழந்த மாணவியின் குடும்பத்திற்கு, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் தெரிவித்துள்ளதுடன், நிதியுதவியையும் அறிவித்துள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு வருமாறு:

கடலூர் மாவட்டம், தொண்டமாநத்தம் மதுரா, எஸ்.என்.நகர் என்ற முகவரியைச் சேர்ந்த செல்வி. ஜெயஸ்ரீ, த/பெ.செல்வக்குமார் (வயது 14) என்ற 9ம் வகுப்பு படித்து வந்த மாணவி, (1.10.2023) அன்று அப்பகுதியிலுள்ள நாகம்மாப்பேட்டை குளத்தில் குளித்த போது எதிர்பாராதவிதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

செல்வி. ஜெயஸ்ரீயை இழந்து வாடும் அவரது பெற்றோருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.



சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியம் முறையூர் ஊராட்சியில் காந்தி ஜெயந்தியை முன்னிட்டு நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் கூட்டுறவு துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஆஷா அஜீத் ஆகியோரால் பெண் குழந்தைகளை காப்போம் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் என்ற உறுதிமொழி கிராம மக்களுடன் ஏற்கப்பட்டது.

வாக்காளர் சரிபார்ப்புப் பணியில்

# திண்டுக்கல் மாவட்டக் கழகத்தினர் தீவிரமாக ஈடுபடுவீர்!

## மேற்கு மாவட்டச் செயலாளர்- அமைச்சர் அர.சக்கரபாணி - கிழக்கு மாவட்டச் செயலாளர் இ.பெ.செந்தில்குமார் அறிக்கை!





திண்டுக்கல், அக். 04-

திண்டுக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் அர.சக்கரபாணி, திண்டுக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளர் ஐ.செந்தில் குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

*01.01.2024*ஐ தகுதியேற் படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்திலுள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட வரைவு வாக்காளர் பட்டியலைத் தேர்தல் ஆணையம் 27.10.23 அன்று வெளியிடவுள்ளது. 27.10.23 முதல் 09.12.23 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும் திருத்தம் செய்யவும் மனுச் செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

இது தவிர 04.11.2023 (சனிக்கிழமை), 05.11.2023 (ஞாயிற்றுக்கிழமை), 18.11.2023 (சனிக்கிழமை), 19.11.2023 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய நான்கு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட மையங்களில் சிறப்பு முகாம்களும் நடத்தப்படவுள்ளன. இந்த நாட்களில் விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 01.01.2024 அன்று 18 வயது நிரம்பக் கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த முகாம் மையங்களில் கொடுக்க வேண்டும்.

இதன் அடிப்படையில் 2024ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும் புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்களின் பெயர்களை தற்போதுள்ள பட்டியலிலிருந்து நீக்கவும், தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வ. எண். விபரம் நாட்கள்

1. வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் 27.10.2023

2. பெயர்களைச் சேர்க்க நீக்க திருத்தம், மனு கொடுக்க கால அவகாசம் 27.10.2023 முதல் 9.12.2023

3. சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்கள் 04, 05.11.2023 மற்றும் 18, 19.11.2023

4. இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் 01.01.2024

தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளவாறு சிறப்பு முகாம் நடைபெறவிருக்கும் நாட்களில் திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், ஊர்க் கிளை, வார்டு கிளை செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், அந்தந்த வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (பிஎல்ஏ 2) ஆகியோர் இணைந்து இவ்வாய்ப்பினை பயன்படுத்தி வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க விண்ணப்பித்தல், வாக்காளர் பட்டியலில் இருந்து பெயர் நீக்குதல், திருத்தம், முகவரி மாற்றம், ஆதார் எண் இணைப்பு போன்ற பணிகளை மேற்கொள்ளமாறும், இப்பணிகள் குறித்து கழக நிர்வாகிகள் மேற்கொண்ட நடவடிக்கைகளை மாவட்டக் கழகத்திற்கு அவ்வப்போது தெரியப்படுத்துமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளனர்.

வணிகப் பயன்பாட்டிற்கான சிலிண்டர் விலை உயர்வு!

# விலையேற்றத்தை உடனே திரும்பப் பெறுக!

## ஒன்றிய அரசுக்கு - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தல்!



**சென்னை, அக்.4 -**

**வணிகப் பயன்பாட்டிற்கான சிலிண்டர் விலையை உயர்த்தியுள்ள ஒன்றிய அரசை வன்மையாகக் கண்டித்துள்ள இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், "இந்த விலையேற்றத்தை ஒன்றிய அரசு உடனே திரும்பப் பெற வேண்டும்!" என வலியுறுத்தியுள்ளார்.**

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 'ட்விட்டர்' பதிவு வருமாறு :-

வணிகப் பயன்பாட்டுக்கான சிலிண்டர் விலையை ரூ.203 கூடுதலாக ஒன்றிய அரசு உயர்த்தியுள்ளதை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இந்த விலையேற்றம், உணவகங்கள் தேநீர்க் கடைகள் வைத்திருப்போர் என சிறு வணிகர்களை பெரிதும் பாதிப்படையச் செய்யும்.

ஒன்றிய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கையாலும் முறைப்படுத்தப்படாத ஜி.எஸ்.டி. பணமதிப்பு நீக்கம் கொரோனா ஊரடங்கு உள்ளிட்ட பிரச்சினைகளாலும் நொடிந்திருந்த சிறு வணிகர்கள் மீது மேலும் ஒரு தாக்குதலாக இந்த விலையேற்றம் அமைந்துள்ளது.

இந்த விலையேற்றத்தை ஒன்றிய அரசு உடனே திரும்பப் பெற வேண்டும்.

இவ்வாறு அப்பதிவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

இராணிப்பேட்டை மாவட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர்

# இளைஞர் அணி நிர்வாகிகளுக்கான நேர்காணல்!

## மாவட்டச் செயலாளர் ஆர்.காந்தி அறிக்கை!

*இராணிப்பேட்டை, அக். 04-*

இராணிப்பேட்டை மாவட்டக் கழக இளைஞர் அணி தோழர்களுக்கு மாவட்டக் கழகச் செயலாளர், கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர். காந்தி விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

இராணிப்பேட்டை மாவட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர்க் கழக இளைஞர் அணி அமைப்பிற்கு விண்ணப்பித்த கழக இளைஞர் அணி தோழர்களுக்கு நாளை (05.10.2023 - வியாழன்) காலை 08.00 மணி அளவில் வேலூர் மத்திய மாவட்டக் கழக அலுவலகத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி நேர்க்காணல் நடைபெற உள்ளது.

எனவே ஒன்றிய, நகர, பேரூர்க் கழக இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பொறுப்பிற்கு விண்ணப்பித்த அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தாங்கள் நேர்காணல் செல்லும் போது தங்களுடைய ஆதார்கார்டு, வயது சான்றிதழ், கழக இளைஞர் அணி உறுப்பினர் கார்டு, தாங்கள் இதுவரை கழக இளைஞர் அணியில் செயலாற்றிய தகவல்கள் உடன் எடுத்து செல்லுமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

நெல்லை கிழக்கு மாவட்டத்தில்

# வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியில் தீவிரமாக ஈடுபடுவீர்!

## மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் அறிக்கை!



நெல்லை, அக்.4-

முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி தலைமைக் கழக வழிகாட்டுதலின்படியும் நெல்லை கிழக்கு மாவட்டத்தில் வாக்காளர் சரிபார்ப்பு பணியில் தீவிரமாக ஈடுபடுவீர் என நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

*01.01.2024* ஆம் தேதியை தகுதி யேற்படுத்தும் நாளாக கொண்டு தமிழகத்தில் உள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட வரைவு வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் *27.10.2023* அன்று வெளியிட உள்ளது. அதில் பெயர்களை சேர்த்திட, நீக்கிட, திருத்தங்கள் மேற்கொள்ள *27.10.23* முதல் வரும் *09.12.23* வரை மனு செய்ய கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இதனுடைய சிறப்பு முகாம்கள் *04.11.23* சனி, *05.11.23* ஞாயிற்றுக்கிழமை *18.11.23* சனிக்கிழமை *19.11.23* ஞாயிற்று கிழமை ஆகிய தினங்களில் சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளது.

இந்த நாட்களில் விடுபட்ட வாக்குகளும், இடம் மாறிய வாக்காளர்களும் *01.01.24* அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று பூர்த்தி செய்து அந்த பகுதிகளில் ஒப்படைக்க வேண்டும்.

இதன் அடிப்படையில் திருநெல்வேலி கிழக்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர், உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் இதுவரை இடம் பெறாத வாக்காளர்களின் பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்துள்ள வாக்காளர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், உரிய படிவங்களை சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் ஒப்படைத்து முழுமையாக பணியினை மேற்கொள்ள வேண்டும்.

வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் *27.10.2023*.

பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்க கால அவகாசம் *27.10.2023* முதல் *09.12.2023* வரை.

சிறப்பு முகாம் நடத்தப்படும் நாட்கள் *04.11.2023* சனி, *05.11.2023* ஞாயிறு, *18.11.2023* சனி, *19.11.2023* ஞாயிறு.

இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் *01.01.2024* ஆகும்

மேற்படி அட்டவணைப்படி நடக்க உள்ள நாட்களில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கழகச் செயலாளர்கள், வார்டு, கிளைக் கழக செயலாளர்கள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (*BLA2*) மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், அணிகளின் நிர்வாகிகள் ஆகியோர் வாக்காளர் சேர்த்தல், நீக்கல் பணிகளை மேற்கொண்டு அது குறித்த விவரங்களை மாவட்டக் கழகத்திற்கு அவ்வப்போது கடிதம் மூலம் தங்கள் பகுதிகளில் நடைபெறும் வாக்காளர் பட்டியல் குறித்த விவரங்களை தகவல் அளித்திட வேண்டும்.

இவ்வாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஊராட்சி ஒன்றியம், நடுஹட்டி ஊராட்சி கிராமத்தில், நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் கலந்து கொண்டு அரசு சார்பில் நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார். முன்னதாக நடுஹட்டி ஊராட்சி மன்றத் தலைவர் கிருஷ்ணன் அனைவரையும் வரவேற்றார், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. அருணா உள்ளிட்ட அரசுத்துறை அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மாவட்டச் செயற்குழு உறுப்பினர்கள் எக்ஸ்போ.செந்தில், கே.எம்.ராஜு, குன்னூர் ஒன்றியச் செயலாளர் ஜெ.பிரேம்குமார், பொதுக்குழு உறுப்பினர் வீரபத்திரன் மற்றும் கில்பர்ட் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

# மதுரை தெற்கு மாவட்டச் செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் அறிக்கை!



மதுரை, அக். 4-

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை தொடர்ந்து எழுச்சியுடன் கொண்டாடுவது, வரும் டிசம்பர் 17ஆம் தேதி சேலத்தில் நடைபெற உள்ள இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாட்டில் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்பது, வரும் நாடாளுமன்றத் தேர்தலில் நாற்பதும் நமதே, நாடும் நமதே என்று வலியுறுத்தி வரும் நம் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கு இணங்க கழக இளைஞரணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படியும் மாவட்டக் கழகச் செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (4ஆம் தேதி) நடைபெற உள்ளதாக மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார், அதன் விபரம் வருமாறு:-

முத்தமிழ் அறிஞர், நாடு போற்றும் செம்மொழி நாயகர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை தொடர்ந்து எழுச்சியுடன் கொண்டாடுவது, இந்தியாவே வியக்கத்தக்க வகையில் வரும் டிசம்பர் 17ஆம் தேதி சேலத்தில் நடைபெற உள்ள இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாட்டில் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்று சிறப்பிப்பது, கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் காணொலி வாயிலாக மாவட்டச் செயலாளர்கள், அமைச்சர்கள், தொகுதி பொறுப்பாளர்களிடம் தெரிவித்த ஆலோசனையின்படி வரும் நாடாளுமன்ற தேர்தலில் நாற்பதும் நமதே, நாடும் நமதே என்பதை வலியுறுத்தும் வகையிலும், அதனை மெய்ப்பிக்கும் வகையிலும் தேர்தல் பணியாற்றுவது குறித்து கழக செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (*04.10.2023 - புதன் கிழமை*) காலை *9.30* மணியளவில் திருமங்கலம் தொகுதி, தே.கல்லுப்பட்டி அருகில் உள்ள முத்தப்பன்பட்டி சேடபட்டியார் திடலில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் திருமங்கலம் தொகுதி பொறுப்பாளர் மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் சாயல்குடி ராமர், உசிலம்பட்டி தொகுதி பொறுப்பாளர் மாநில ஆதிதிராவிடர் நலக் குழு துணைச் செயலாளர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மாரியப்பன் கென்னடி, திருப்பரங்குன்றம் தொகுதி பொறுப்பாளர் மாநில தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர் இலக்குவன் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள். சிறப்பு மிக்க இக்கூட்டத்தில் மதுரை தெற்கு மாவட்டத்தில் உள்ள மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக, வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், கிளைச்செயலாளர்கள், நிர்வாகிகள் என கழகத்தினர் அனைவரும் பெரும் திரளாக பங்கேற்று சிறப்பிக்குமாறு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தமது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.



கடலூர் மாவட்டம், பண்ருட்டி தெற்கு ஒன்றியம், மருங்கூர் அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில், காந்தி ஜெயந்தியை முன்னிட்டு, சிறப்பு கிராம சபைக் கூட்டம், ஊராட்சி மன்ற வாசுகி துளசி தலைமை தாங்கினார். ஊராட்சி செயலாளர் ரவிச்சந்திரன் வரவேற்புரையாற்றினர். நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராசேந்திரன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு உரையாற்றினார். வட்டார வளர்ச்சி அலுவலர் சக்தி, வேளாண்மை துணை இயக்குனர் பார்த்தசாரதி, ஒன்றிய கவுன்சிலர் உதயகுமார், வட்டார மருத்துவ அலுவலர்கள், டி.தனசேகரன், மருத்துவ கே.அறிவொளி, சுகாதார ஆய்வாளர்கள் கோதரங்கன், செந்தில்வளவன், கனகராஜ், ராமஜெயம், பாலாஜி, ஊராட்சி துணைத் தலைவர் சசிகலா ஜெயசெழியன் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். வார்டு உறுப்பினர் தமிழ்ச்செல்வன் நன்றியுரையாற்றினார்.

## 9 மாணவர்களுக்கு சாதனை விஞ்ஞானிகள் பெயரில் ஸ்காலர்ஷிப்!

# அறிவியல் ஆர்வத்தையும் ஆளுமைத் திறனையும் வளர்த்துக்கொள்வீர்!

## தமிழ்நாடு விண்வெளி விஞ்ஞானிகள் பாராட்டு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

சென்னை, அக்.04-

**இந்தியாவிற்கும் தமிழ்நாட்டிற்கும் பெருமையை ஏற்படுத்திக் கொடுத்த, இனியும் ஏற்படுத்திக் கொடுக்கப் போகின்ற அறிவியல் மேதைகளான ஒன்பது விஞ்ஞானிகளுக்கும் தமிழ்நாடு அரசின் சார்பில் தலா 25 லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்றும் அரசு பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படும் 7.5 விழுக்காடு ஒதுக்கீட்டின் கீழ், அரசின் கல்வி உதவித்தொகை பெற்று இளநிலை பொறியியல் படிப்பை முடித்து, முதுநிலை பொறியியல் படிப்பை தொடர்கின்ற 9 மாணவர்களுக்கு சாதனை விஞ்ஞானிகள் பெயரில் ஸ்காலர்ஷிப் வழங்கப்படும். இந்தக் கல்வி உதவித்தொகைக்காக, பத்து கோடி ரூபாயில் தொகுப்பு நிதியம் ஒன்று உருவாக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.10.2023) சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற "ஒளிரும் தமிழ்நாடு மிளிரும் தமிழர்கள்" சாதனை படைத்த தமிழ்நாட்டு விண்வெளி விஞ்ஞானிகளுக்குப் பாராட்டு விழாவில் உரையாற்றினார். முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு: -

இந்த மேடையில் நிற்பதையே நான் பெருமையாக கருதுகிறேன். தமிழ்நாட்டின் முதலமைச்சராக மட்டும் இல்லை, தமிழனாக பிறந்த பெருமையை இன்றைக்கு நான் அதிகமாக அடைந்து கொண்டிருக்கிறேன்.

இந்தியாவின் பக்கம் உலகத்தையே பார்க்க வைத்த தமிழ்நாட்டு அறிவியல் மேதைகள் ஒன்பது பேர் இந்த மேடையில், அமர்ந்திருப்பது என்னுடைய உள்ளத்தை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்திக் கொண்டிருக்கிறது.

கல்வி சிறந்த தமிழ்நாடுபுகழ் கம்பன் பிறந்த தமிழ்நாடு வள்ளுவன் தன்னை உலகினுக்கேதந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடுநெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர்-மணி ஆரம் படைத்த தமிழ்நாடு என்று பாடிய மகாகவி பாரதியார் இப்போது இருந்திருந்தால், இஸ்ரோ சிவனும், மயில்சாமி அண்ணாதுரையும் பிறந்த தமிழ்நாடு, நாராயணனும், சங்கரனும், ராஜராஜனும், ஆசீர் பாக்கியராஜும், வனிதாவும், நிகார் ஷாஜியும் பிறந்த தமிழ்நாடு, வீரமுத்துவேல் பிறந்த தமிழ்நாடு என்று பாராட்டிப் போற்றியிருப்பார்.

அந்தளவுக்கு உலகத்தையே இந்தியாவின் பெருமையை உணர்த்துகின்ற தமிழர்களாக நீங்கள் இங்கே உயர்ந்து நிற்கிறீர்கள். அந்த உயரத்தில் இருக்கின்ற உங்கள் எல்லோரையும் ஒரே இடத்தில் அழைத்துப் பாராட்ட வேண்டும் என்று நாங்கள் விரும்பினோம்.

எங்களுடைய எண்ணத்தை ஏற்றுக் கொண்டு வருகை தந்திருக்கக்கூடிய உங்கள் எல்லோருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை முதலில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

### இந்தியாவுக்கு மட்டுமல்ல; உலகிற்கே முக்கியமான நாள்!

ஆகஸ்ட் 23ஆம் நாள் இந்தியாவுக்கு மட்டும் இல்லை, உலகத்துக்கே முக்கியமான நாள்! நிலாவில் இந்தியா இறங்கிய நாள். சந்திரயான் விண்கலத்துடன் லேண்டரானது வெற்றிகரமாக நிலவில் இறங்கிய நாள்!

1959ஆம் ஆண்டு சோவியத் ஒன்றியமும், 1964 ஆம் ஆண்டு அமெரிக்காவும், 2013ஆம் ஆண்டு சீனாவும்தான் இந்தச் சாதனையை செய்திருக்கிறார்கள்.

2008ஆம் ஆண்டு நிலாவை நோக்கிய பயணத்தை இந்தியா தொடங்கியது. 2023ஆம் ஆண்டில் அந்த சாதனையின் எல்லையை அடைந்திருக்கிறது. அதாவது நிலாவை தொட்ட நான்காவது நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றிருக்கிறது!

மற்ற நாடுகளுக்கு இல்லாத சிறப்பையும் இந்தியா அடைந்திருக்கிறது. இதுவரை அறியப்படாத நிலவின் தென்துருவப்பகுதியை சந்திரயான்3 தரையிறங்கி ஆராயத் தொடங்கியிருக்கிறது. அந்த சந்திரயான்3 திட்டத்தின் இயக்குநராக இந்தியாவின் தென் பகுதியைச் சேர்ந்த, அதிலும் தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரமுத்துவேல் செயல்படுத்திக் காட்டியது நமக்கெல்லாம் பெருமையிலும் பெருமை!

### தமிழ்நாட்டு மக்கள் சார்பில் வாழ்த்தும் பாராட்டும்!

சந்திரயான்3 வெற்றிகரமாக நிலவில் தரையிறங்கியதற்கு இணையாக விண்வெளி ஆராய்ச்சில் கொடி கட்டிப் பறக்கும் தமிழர்கள் என்ற செய்தி அதிகமாக பரவியது. இப்படிப்பட்ட பெருமையை தமிழ்நாட்டுக்குத் தேடித்தந்த அறிவியல் மேதைகளான உங்கள் எல்லோரையும் தமிழ்நாடு முதலமைச்சராக கோடிக்கணக்கான தமிழ்நாட்டு மக்கள் சார்பில் வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன், போற்றுகிறேன். உங்கள் எல்லோரையும் வணங்குகிறேன்.

இது பேரறிஞர் அண்ணா பெயரால், தலைவர் கலைஞர் அவர்கள் அமைத்த அரங்கம்! இந்த இடத்திற்கு அழைத்து உங்களுக்குப் பாராட்டு விழா நடத்துவது மிகமிக பொருத்தமான ஒன்று!

'இந்த நாட்டில் ஏன் ஐன்ஸ்டீன் உருவாகவில்லை? இந்த நாட்டில் ஏன் ஒரு தாமஸ் ஆல்வா எடிசன் உருவாகவில்லை? என்று ஏக்கத்துடன் கேட்டவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 2.10.2023 அன்று சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற "ஒளிரும் தமிழ்நாடு மிளிரும் தமிழர்கள்" சாதனை படைத்த தமிழ்நாட்டு விண்வெளி விஞ்ஞானிகளுக்குப் பாராட்டு விழாவில், இந்திய விண்வெளி துறையில் சாதனை படைத்த விஞ்ஞானிகள் - இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் முன்னாள் தலைவர்கள் முனைவர் கே. சிவன், முனைவர் மயில்சாமி அண்ணாதுரை, திருவனந்தபுரம் - திரவ உந்து அமைப்பு மையத்தின் இயக்குநர் முனைவர் வி. நாராயணன், ஸ்ரீஹரிகோட்டா -சதீஷ் தவான் விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் இயக்குநர் ஏ. இராஜராஜன், பெங்களூரு யு.ஆர். ராவ் செயற்கைக்கோள் மையத்தின் இயக்குநர் எம். சங்கரன், மகேந்திரகிரி உந்துவிசை வளாக இயக்குநர் ஜெ. ஆசிர் பாக்கியராஜ், சந்திராயன்-2 திட்ட இயக்குநர் திருமதி மு. வனிதா, ஆதித்யா L1 திட்ட இயக்குநர் திருமதி நிகார் ஷாஜி, சந்திரயான் 3 திட்ட இயக்குநர் ப. வீரமுத்துவேல் ஆகியோரை பாராட்டி, அவர்களுக்கு சால்வை அணிவித்து, பாராட்டு சான்றிதழ் மற்றும் நினைவுப் பரிசுகளை வழங்கி சிறப்பித்தார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.

நம்முடைய தமிழ்நாட்டில்தான் இத்தனை அறிவியல் ஆளுமைகள் உருவாகி இருக்கிறார்கள். இந்த மேடையை பாருங்க அண்ணா' என்று சொல்வதற்குதான் பேரறிஞர் அண்ணா பெயரில் அமைந்திருக்கக் கூடிய இந்த அரங்கில் இந்த விழாவை நடத்துவது மிக மிக பொருத்தமானது என்று சொன்னேன்.

நம்ம தமிழ் அறிவு என்பதே அறிவியல் அறிவுதான். எதையும் பகுத்துப் பார்க்கும் பகுத்தறிவுதான் தமிழறிவு!

### திருக்குறளில் அறிவியல் சிந்தனை!

'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு', இந்தக் குறளுக்கு இணையான அறிவியல் சிந்தனை இருக்க முடியாது. இப்படிப்பட்ட அறிவியல் அறிவைத்தான் நம்முடைய தமிழ் இலக்கியங்கள் நமக்கு கற்பித்திருக்கிறது.

நிலம், தீ, நீர், வளி விசும்போடு ஐந்தும்..' என்று அன்றைக்கு சொன்னது தொல்காப்பியம்.

நிலம் தீ - காற்று நீர் - வானம் - ஆகிய ஐந்தும் கலந்ததுதான் உலகம் என்று சொல்லியிருக்கிறது. நில அமைப்பை ஐந்தாக பிரித்து, பொருளை மூன்றாக பிரித்து வாழத் தொடங்கிய இனம் நம்முடைய தமிழினம். இதில் தமிழர்களுடைய வானியல் அறிவு தனித்தன்மை வாய்ந்தது. புறநானூற்றின் முதல் பாடலில் 'நிலம் ஏந்திய விசும்பும்' என்று வானைப் பற்றி பாடப்பட்டிருக்கிறது.

> 'இந்த நாட்டில் ஏன் ஐன்ஸ்டீன் உருவாகவில்லை? இந்த நாட்டில் ஏன் ஒரு தாமஸ் ஆல்வா எடிசன் உருவாகவில்லை? என்று ஏக்கத்துடன் கேட்டவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்.
>
> நம்முடைய தமிழ்நாட்டில்தான் இத்தனை அறிவியல் ஆளுமைகள் உருவாகி இருக்கிறார்கள். இந்த மேடையை பாருங்க அண்ணா' என்று சொல்வதற்குதான் பேரறிஞர் அண்ணா பெயரில் அமைந்திருக்கக்கூடிய இந்த அரங்கில் இந்த விழாவை நடத்துவது மிகமிக பொருத்தமானது என்று சொன்னேன்.

முடிவாக 400ஆவது பாடலும், 'மாவிசும்பின் வெண் திங்கள்' என்று வானத்தைப் பாடித்தான் முடியும்.

ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும் திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும் என்று சூரியனையும் நிலவையும் போற்றிப் பாடித்தான் சிலப்பதிகாரம் தீட்டினார் இளங்கோவடிகள்!

### தமிழ்நாட்டில் உருவான அறிவியல் மேதைகள்!

அணி நிலாதுணி நிலாமணி நிலாபணி நிலா என்று பாடியது சீவகசிந்தாமணி. இப்படிசூரியனையும்-நிலவை யும் வானத்தையும் பாடாமல் தமிழ் இலக்கியங்கள் இருந்தது இல்லை. இதையெல்லாம் நான் சொல்லக் காரணம்... விருப்பு வெறுப்பற்ற அறிவியல் அறிவுதான் தமிழ்நாட்டின் அறிவாக இருந்தது. அதுதான் இந்த அறிவியல் மேதைகள் உருவாக்கி இருக்கிறது.

இன்னும் சொன்னால், இந்த ஒன்பது பேரில் ஆறு பேர் அரசுப் பள்ளியில் படித்தவர்கள். அதுதான் மிகமிகப் பெருமைக்குரியது. மிகமிகச் சாதாரண ஊர்களில் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்து படித்து முன்னேறியவர்கள். முதல் தலைமுறைப் பட்டதாரிகளாக இருந்து விஞ்ஞானிகளாக உயர்ந்தவர்கள். அதிலும் குறிப்பாக ரெண்டு பேர் பெண்கள்.

இந்த மேடையே சமூகநீதியின் அடையாளமாக இருப்பதை பார்க்கும்போது பெருமையாக இருக்கிறது. "என்னரும் தமிழ்நாட்டின் கண் எல்லோரும் கல்விகற்றுப் பன்னறும் கலைஞானத்தால், பராக்கிரமத்தால், அன்பால், உன்னத இமய மலைபோல் ஓங்கிடும் கீர்த்தி எய்தி இன்புற்றார் என்று மற்றோர் இயம்பக் கேட்டிடல் எந்நாளோ?" என்று ஏக்கத்துடன் பாடினார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன். அது இந்த நாள்தான்! அதன் அடையாளமாக இருப்பவர்கள்தான் இந்த ஒன்பது மேதைகளும்.

### வழிகாட்டிகளாக ஏற்று முன்னேறுவீர்!

என்னைப் பொறுத்தவரை தமிழ்நாட்டு இளைய சமுதாயத்தினர் இவர்கள்தான் தங்களுடைய வழிகாட்டிகளாக ஏற்றுக்கொண்டு முன்னேறவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

## அறிவியல் மேதைகள் 9 பேருக்கு அரசின் சார்பில் தலா ரூ.25 லட்சம்

மரியாதைக்குரிய டாக்டர் கே.சிவன் அவர்கள் - கன்னியாகுமரி மாவட்டம் சரக்கல்விளை என்ற ஊரில் பிறந்தவர். 1982ஆம் ஆண்டு இஸ்ரோவில் சேர்ந்து - 2018 ஆம் ஆண்டு இஸ்ரோ தலைவராக உயர்ந்த ஆற்றலுக்குரியவர். பி.எஸ்.எல்.வி. மூலம் 104 விண்கலங்களுக்கான திட்ட ஒருங்கிணைப்பாளராக இருந்தார். ராக்கெட் அமைப்பு தொடர்பாக சித்தாராஎன்ற மென்பொருளை உருவாக்கியவர்.

சந்திரயான்2 முழு வெற்றி அடையாத நிலையில், அவர் கண்கலங்கிய காட்சிகள் தான், ஆற்றிய பணிகள், அதன் மேல் அவர் வைத்திருந்த மாறாத பற்றின் அடையாளமாக வெளிப்பட்டதை யாரும் மறந்திருக்க முடியாது!

மரியாதைக்குரிய மயில்சாமி அண்ணாதுரை அவர்கள் - பொள்ளாச்சி அருகில் கோத்தவாடி என்கின்ற கிராமத்தில் பிறந்தவர். 36 ஆண்டுகள் இஸ்ரோவில் பணியாற்றியவர். மூன்றாண்டு காலம் இஸ்ரோ விண்வெளி ஆய்வு மையத்தில் திட்ட இயக்குநராக இருந்தவர். பல்வேறு விண்கலங்களை செலுத்துவதில் முக்கியப் பங்காற்றியவர். சந்திரயான்1 வடிவமைப்பில் இந்தியக் கொடியை பொருத்தியவர் இவர். திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படித்து விண்ணைத் தொட்டவர் மயில்சாமி அண்ணாதுரை அவர்கள்.

மரியாதைக்குரிய வி.நாராயணன் அவர்கள் - குமரி மாவட்டத்தில் பிறந்தவர். திருவனந்தபுரம் திரவ உந்து சக்தி மையத்தின் இயக்குநராக இருக்கிறார். இஸ்ரோ தயாரித்த பெரும்பாலான ராக்கெட் தயாரிப்புகளில் இவருடைய பங்கு அளப்பரியது. சந்திரயான்3 விண்ணில் செலுத்தப் பயன்படுத்திய மார்க்3 ராக்கெட் உருவாக்கத்தில் முக்கியப் பங்காற்றியவர். இஸ்ரோவின் சிறந்த விஞ்ஞானி விருதை இரண்டு முறை பெற்றவர் நாராயணன் அவர்கள்.

மரியாதைக்குரிய ஏ.ராஜராஜன் அவர்கள் - காஞ்சிபுரம் மாவட்டத்தில் பிறந்தவர். இஸ்ரோவில் வெளியீட்டு அங்கீகார வாரியத் தலைவராக இருக்கிறார். ககன்யான், எஸ்.எஸ்.எல்.வி. போன்ற இஸ்ரோவுடைய விரிவடை கின்ற தேவைகளுக்கு திடமான மோட்டார்கள் தயாரிப்பதில் இவருடைய பங்கு அளப்பரியது. இஸ்ரோ மெரிட் விருதை 2015ஆம் ஆண்டு பெற்றவர் இவர்.

மரியாதைக்குரிய எம். சங்கரன் அவர்கள் - திருச்சியில் பிறந்தவர். யு.ஆர். ராவ் விண்வெளி மையத்தின் இயக்குநராக பணியாற்றியவர். சந்திரயான் 1,2,3 - ஆகிய மூன்று திட்டங்களி லும் அவர் தன்னை ஒப்படைத்துக் கொண்டு பணியாற்றி இருக்கக்கூடியவர். சூரியனை பற்றி ஆய்வு செய்ய இந்தியா அனுப்பிய ஆதித்தியா எல்1 என்ற விண்வெளித் திட்டத்திலும் பணியாற்றியவர். தொழில்நுட்பக் கருவிகள் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்ய முடியும் என்று நிரூபித்துக் காட்டியவர்களில் ஒருவர் நம்முடைய எம்.சங்கரன் அவர்கள்.

மரியாதைக்குரிய ஆசீர் பாக்கியராஜ் அவர்கள் - தூத்துக்குடியில் பிறந்தவர். ராக்கெட் எஞ்சின் - விண்கல இயந்திரங்களின் உயர்சோதனைத் துறையில் பெரும் ஈடுபாடு கொண்டவர். ராக்கெட் நிலை ஒருங்கிணைப்புகளில் நவீன வசதிகளை நிறுவியவர். G.S.L.V.யை இவருடைய குழுதான் ஒருங்கிணைத்தது. உயர் தொழில்நுட்பங்களை இணைப்பதில், இவருடைய பங்களிப்பு முக்கியமானது.

மரியாதைக்குரிய டாக்டர் எம்.வனிதா அவர்கள் - சென்னையைச் சேர்ந்தவர். சந்திரயான்2 திட்டத்தின் இயக்குநராக இருந்த பெருமைக்குரியவர். மங்கல்யான் வடிவமைப்பிலேயும் முக்கியப் பங்காற்றியவர். இஸ்ரோவில் திட்ட இயக்குநராக பணியாற்றிய முதல் பெண் விஞ்ஞானி என்ற பெருமைக்குரியவர். சிறந்த பெண் விஞ்ஞானி விருதையும் பெற்றவர்.

மரியாதைக்குரிய டாக்டர் நிகார் ஷாஜி அவர்கள் - தென்காசி மாவட்டம் செங்கோட்டையைச் சேர்ந்தவர். 1987 முதல் இஸ்ரோவில் பணியாற்றி வருகிறார். இஸ்ரோவின் சூரியன் ஆய்வுத் திட்டமான ஆதித்தியா எல் ONE திட்டத்தினுடைய திட்ட இயக்குநராக செயலாற்றினார்.

மரியாதைக்குரிய டாக்டர் வீரமுத்துவேல் அவர்கள் - விழுப்புரத்தில் பிறந்தவர். கடந்த ஆகஸ்ட் 23ஆம் நாள் ஏவப்பட்ட சந்திரயான்3 திட்டத்தின் வெற்றிகரமான இயக்குநர் தான் நம்முடைய வீரமுத்து அவர்கள். "அரசுப் பள்ளியில் 10ஆம் வகுப்பு வரை படித்தேன். பள்ளியில் நான் ஒரு ஆவரேஜ் மாணவன். அடுத்து எங்கே படிக்கவேண்டும், என்ன படிக்கவேண்டும் என்று எந்த ஒரு ஐடியாவும் எனக்கு இல்லை. அம்மா, அப்பா மற்றும் குடும்பத்தினர் யாரும் படித்தவர்கள் இல்லை" என்று சொல்கின்ற அளவுக்கு சாதாரணப் பின்புலத்தில் பிறந்து சரித்திர சாதனையை படைத்திருக்கிறார் வீரமுத்து அவர்கள்.

இதில் தமிழ் இனத்துக்கும் தமிழ்நாட்டுக்கும் என்ன பெருமை என்றால் சந்திரயான் - 1 திட்ட இயக்குநராக இருந்தவர் மயில்சாமி அண்ணாதுரை அவர்கள். 2008 அக்டோபர் 28ஆம் நாள் அது நிலவை சுற்றத் தொடங்கியது. நிலவில் நீர்க்கூறுகள் இருப்பதை அது தான் கண்டறிந்து சொன்னது.

சந்திரயான் 2, 2019 ஜீலை 15ஆம் நாள் ஏவப்பட்டது. இதனுடைய திட்ட இயக்குநராக வனிதா செயல்பட்டார். அந்தக் காலக்கட்டத்தில்தான் இஸ்ரோ தலைவராக டாக்டர் சிவன் அவர்கள் இருந்தார்.

இப்போது ஏவப்பட்டது சந்திரயான் 3. இதனுடைய திட்ட இயக்குநர் வீரமுத்துவேல். இதுதான் தமிழ்நாட்டிற்கு கிடைத்த மிகப்பெரிய பெருமை. இந்த பெருமையை தமிழ்நாடு அரசு போற்றும் விதமாக, இரண்டு அறிவிப்பை நான் வெளியிட விரும்புகிறேன்.

தொடர்ச்சி 7ஆம் பக்கம்



முன்னாள் சேலம் கிழக்கு மாவட்ட பொறுப்பாளரும், முன்னாள் மாநில தேர்தல் பணி குழு செயலாளருமான வீரபாண்டி ஆ.ராஜா அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவு நாள் வீரபாண்டி பூலாவரியில் உள்ள அவரது நினைவிடத்தில் அனுசரிக்கப்பட்டது. இந்நிகழ்வில் தமிழ்நாடு அமைச்சர்கள் கே.என். நேரு, எம் .ஆர். காந்தி ஆகியோர் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். நிகழ்வில் மாவட்டச் செயலாளர்கள் எஸ். ஆர். சிவலிங்கம், ஆர்.ராஜேந்திரன் எம்.எல்.ஏ., டி.எம்.செல்வகணபதி, பொதுக் குழு உறுப்பினர் மலர்விழி ராஜா, மாவட்ட துணைச் செயலாளர்கள் க.சுரேஷ்குமார், கு.சின்னதுரை, கோமதி ,மாவட்ட பொருளாளர் ஸ்ரீராம், மாவட்ட அவைத் தலைவர் முரா.கருணாநிதி, ஏ.ஏ.ஆறுமுகம், டாக்டர் தருண், வீரபாண்டி ஆ.பிரபு, மற்றும் குடும்பத்தினர் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக நிர்வாகிகள் ஆகியோர் ஆ.ராஜாவின் நினைவிடத்தில் மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.





தேனி வடக்கு மாவட்ட சார்பாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாபெரும் பட்டிமன்றம் போடி வள்ளுவர் சிலை அருகில் வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் தலைமையில் நாவுக்கரசர் கழகப் பேச்சாளர் நாஞ்சில் சம்பத் நடுவராக கலந்து கொண்டு பேராசிரியர் முனைவர் மானசீகன், பேராசிரியர் மலர்விழி, கவிஞர் தலைமைக் கழக பேச்சாளர் குமரி பிரபாகரன்,பேராசிரியர் கல்லூரி முதல்வர் வேதநாயகி ஆகியோர் கலந்து கொண்ட சிறப்பு பட்டிமன்றம் நடைபெற்றது. போடி நகரச் செயலாளர் புருஷோத்தமன்வரவேற்புரை ஆற்றினார், சரவணகுமார் எம்.எல்.ஏ மற்றும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் லட்சுமணன், நகர மாணவரணி துணை அமைப்பாளர் சாகுல்சேக் அப்துல்லா நன்றி உரை ஆற்றினார். மற்றும் ஒன்றியச் செயலாளர்கள், நகரச் செயலாளர்கள், பேரூர் செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### இராணிப்பேட்டை மாவட்டத்தில்

# வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியில் தீவிரமாக ஈடுபடுவீர்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆர்.காந்தி வேண்டுகோள்!



இராணிப்பேட்டை, அக். 4 -

இராணிப்பேட்டை மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆர்.காந்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

01.01.2024 தேதியை தகுதியேற்படுத்தும் நாளாக கொண்டு வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்திட வரைவு வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் 27.10.2023 அன்று வெளியிட உள்ளது.

27.10.2023 முதல் 09.12.2023 வரை புதிய வாக்காளர்களை சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும், திருத்தம் செய்யவும் மனு செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

இது தவிர 04.11.2023 (சனிக்கிழமை), 05.11.2023 (ஞாயிற்றுக் கிழமை), 18.11.2023 (சனிக்கிழமை), 19.11.2023 (ஞாயிற்றுக் கிழமை) ஆகிய நான்கு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட மையங்களில் சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளன.

இந்நாட்களில் விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும் 01.01.2024 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று பூர்த்தி செய்து அந்த படிவங்கள் அந்தந்த முகாம்களில் கொடுக்க வேண்டும்.

இதன் அடிப்படையில் 2024 ஆம் ஆண்டு ஜனவரி 1ந் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும் புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும். தொகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும்

தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள மேற்கண்ட அட்டவணையின்படி சிறப்பு முகாம்கள் நடைபெறவிருக்கும் நாட்களில், ஒன்றிய, நகர, பேரூர், ஊர்க்கிளை, வார்டு கழகச் செயலாளர் நிர்வாகிகள் மற்றும் வாக்குச் சாவடி நிலைய முகவர்கள் (பி.எல்.ஏ.2) ஆகியோர் தங்களை முழுமையாக ஈடுபடுத்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### திருவண்ணாமலை

# தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க செயற்குழுக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர்கள் - அமைச்சர் எ.வ.வேலு - எம்.எஸ்.தரணிவேந்தன் அறிக்கை!





திருவண்ணாமலை, அக். 4 -

திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக்கூட்டம் நடைபெறவுள்ளது. இது குறித்து பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, வடக்கு மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளனர்.

அவர்கள் விடுத்த அறிக்கை வருமாறு:

திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் 07.10.2023 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு திருவண்ணாமலை திருக்கோவிலூர் ரோடு, சாரோனில் உள்ள மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

செயற்குழுக்கூட்டத்திற்கு தெற்கு மாவட்ட அவைத் தலைவர் த.வேணுகோபால் தலைமை வகிக்கிறார்.

சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, வடக்கு மாவட்ட அவைத் தலைவர் அ.ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

செயற்குழுக்கூட்டத்தில் அக்டோபர் 21, 22 ஆகிய தேதிகளில், கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் திருவண்ணாமலை வருகை குறித்தும். வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல். வாக்குச்சாவடி குழுவின் அலைபேசி எண்களை முறைப்படுத்துதல். நடைபெறவுள்ள கூட்டுறவு சங்கத் தேர்தலுக்கான புதிய உறுப்பினர் சேர்த்தல். தமிழ்நாடு முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம், சென்னை மகளிர் அணி மாநாடு மற்றும் கழகஆக்கப்பணிகள் குறித்து ஆலோசனை நடைபெறவுள்ளது.

செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு பொதுப்பணித்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினருமான எ.வ. வேலு தீர்மானங்களை விளக்கி சிறப்புரையாற்றுகிறார்.

எனவே கூட்டத்திற்கு மாநில அணிகளின் நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் கலந்து கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

# ஒழுங்கு நடவடிக்கை

## தலைமைக் கழக அறிவிப்பு!

தென்காசி வடக்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் வெள்ளத்துரை அவர்கள், கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டதால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Sus pension) வைக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 03.10.2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

### திருப்பத்தூர் மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் பகுதி

# இளைஞர் அணி நிர்வாகிகளுக்கான நேர்காணல்!

## மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. அறிக்கை!



திருப்பத்தூர், அக். 4 -

திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. இளைஞரணிக்கு ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் நேர்காணல் இன்று நடைபெற உள்ளது. இது குறித்து திருப்பத்தூர் மாவட்டச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி எம்.எல்.ஏ. அவரது அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தி.மு.க. இளைஞர் அணி செயலாளரும், தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாடு பொதுப்பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு வழிகாட்டுதலின்படி திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கான நேர்காணல் மண்டலம் 3 க்கு திருவண்ணாமலை மாவட்டம் வேங்கிக்கால், வேலூர் ரோடு பகுதியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் இன்று (04.10.2023 -புதன்கிழமை), காலை 9 மணி அளவில் நடைபெற உள்ளது. இந்த நேர்காணலில் கலந்து கொள்ள வரும் விண்ணப்பதாரர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய வயதை நிரூபிப்ப தற்கான கல்விச் சான்றிதழ், ஆதார் அட்டை, கழக உறுப்பினர் அட்டை, இளைஞர் அணி அடையாள அட்டை மற்றும் கழக அமைப்புகளில் ஏற்கனவே பணியாற்றியிருந்தால் அது தொடர்பான புகைப்படத் தொகுப்பு உள்ளிட்ட ஆவணங்களை கொண்டு வரவேண்டும் என்று தனது அறிக்கையில் திருப்பத்தூர் மாவட்ட செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

### இராணிப்பேட்டை மாவட்டம்

# காவனூரில் ரூ.1 கோடியில் ஆரம்ப சுகாதார நிலையம்!

## அமைச்சர் ஆர்.காந்தி அடிக்கல் நாட்டினார்!

ராணிப்பேட்டை, அக். 4 -

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு அடுத்த காவனூரில் ரூ.1 கோடியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுவதற்கு அமைச்சர் ஆர். காந்தி அடிக்கல் நாட்டினார்.

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு அடுத்த திமிரி ஒன்றியம் காவனூரில் ஒரு கோடியே 20 லட்சம் மதிப்பில் அரசு ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டு விழா நடந்தது. நிகழ்ச்சிக்கு மாவட்ட கலெக்டர் ச.வளர்மதி தலைமை தாங்கினார். சிறப்பு அழைப்பாளராக கைத்தறி மற்றும்துணி நூல் துறை அமைச்சர் ஆர். காந்தி கலந்து கொண்டு அடிக்கல் நாட்டினார்.

அப்போது அவர் பேசியதாவது :

இந்த ஆரம்ப சுகாதார நிலையம் மூலம் காவனூர், புங்கனூர், பட்டினம், வரகூர் குப்பம், வெங்கடாபுரம் இன்னும் பல கிராமங்கள் மக்கள் பயன்பெறுவார்கள். வெங்கடாபுரம் போன்ற மலைப்பகுதி யில் மக்கள் அவசர சிகிச்சை பெற வேண்டு மென்றால் 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள விளாப் பாக்கம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை அணுக வேண்டி உள்ளது.

தற்போது இந்த மருத்துவமனை தொடங்கப்பட்டால் அவசரகால சிகிச்சைகள், பிரசவங்கள் விஷ பூச்சி , விஷ பாம்பு கடிகள் போன்ற அவசர சிகிச்சைகளை பொதுமக்களால் விரைவில் பெற முடியும் .

பொது மக்களின் அடிப்படை வசதிகளை நிறைவேற்றி வருவதில் முதலமைச்சர், தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் மிகவும் முக்கியத்துவம் அளிக்கிறார்.

பெண்கள் சுலபமாக தொழில் தொடங்கிடவும் தன்னிறைவு பெற்று சுயமரியாதையுடன் வாழ்ந்திடவும் ,

அதிகளவில் மகளிர் சுய உதவி குழுக்களுக்கு கடன்களை வழங்கி வருகிறார். குடும்பத் தலைவிகளுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தினை தொடங்கி வைத்து தமிழ்நாடு முழுவதும் ஒரு கோடிக்கும் மேற்பட்ட பெண்கள் பயனடைந்து வருகின்றனர் .

இது போன்ற மகத்தான திட்டத்தினை முதலமைச்சர் செயல்படுத்தி வருகிறார்.

இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞரணி செயலாளரும் ஆற்காடு சட்டமன்ற தொகுதி எம்எல்ஏவுமான ஜெ.எல். ஈஸ்வரப்பன் ,

சுகாதாரப் பணிகள் துணை இயக்குனர் மணிமாறன், ஒன்றிய குழு தலைவர் அசோக், துணைத் தலைவர் ரமேஷ் ,மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் தன்ராஜ் வட்டார மருத்துவ அலுவலர் கிரிஜா, பொதுப்பணித்துறை உதவி செயற் பொறியாளர் திரிபுரசுந்தரி, வட்டார வளர்ச்சி அலுவலர் அன்பரசன், ஊராட்சி மன்ற தலைவர் ரஞ்சித் குமார், கே.ஆர். சம்பத், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் டான் பாஸ்கோ மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க முதல்வரின் நபார்டு திட்டத்தின் கீழ் மல்லப்பாடி ஊராட்சி அரசு மேல்நிலைப் பள்ளியில் ரூ.1.28 கோடி மதிப்பீட்டில் ஆறு வகுப்பறை கட்டிடம் மற்றும் சிகரலபள்ளி ஊராட்சி கப்பல்வாடி அரசு மேல்நிலைப் பள்ளியில் ஆறு வகுப்பறை கட்டிடம் கட்டும் பணிகளை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ் , மாநில விவசாய அணி துணைச் செயலாளர் டேம். வெங்கடேசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கிருபாகரன், ஒன்றியச் செயலாளர்கள் ராஜேந்திரன், அறிஞர், பேரூராட்சித் தலைவர் சந்தோஷ் குமார், விவசாய அணி அமைப்பாளர் இளையராஜா, மாணவர் அணி அமைப்பாளர் ஜெயேந்திரன், ஊராட்சி மன்ற தலைவர்கள் சரோஜினி ஞானவேல், பார்த்திபன் உள்ளிட்ட துறை சார்ந்த அதிகாரிகள், கழக மூத்த முன்னோடிகள் ஏராளமானோர் உடன் இருந்தனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**வாலாஜாபாத் தி.கிருஷ்ணராஜ்**
**அக்டோபர் 4 (2014)**



**வாலாஜாபாத் ஒன்றியக் கழக பொறுப்பாளராக 1988 முதல் 1992 வரை நான்கு ஆண்டுகள் அதன்பின்னர் 1992 முதல் 2008ம் ஆண்டுவரை ஒன்றிய செயலாளராக தொடர்ந்து பணியாற்றியவர்.**

**தொடர்ந்து 20 ஆண்டு காலம் வாலாஜாபாத் ஒன்றிய கழக வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## எல்லா வசதிகளும் கொண்ட கிராமங்களை உருவாக்க

# திராவிட மாடல் அரசு எந்நாளும் உழைக்கும்!

## கிராம சபைக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, அக். 4 -**

**எல்லா வசதிகளும் கொண்ட கிராமங்களை உருவாக்க திராவிட மாடல் அரசு எந்நாளும் உழைக்கும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கிராம சபைக் கூட்டத்தில் தொடர்பாக காணொலி வாயிலாக உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

**கிராம சபைக் கூட்டத்தில் தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக ஆற்றிய உரை வருமாறு:**

கிராம சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ள வந்திருக்கிற பொதுமக்கள் எல்லோருக்கும் உங்களின் ஒருவனான இந்த மு.க.ஸ்டாலினின் அன்பு வணக்கம்!

நம்முடைய திராவிட மாடல் ஆட்சி அமைந்ததற்குப் பிறகுதான், கிராம சபை கூட்டங்களை முறையாக - தடங்கல் இல்லாமல் நடத்தி கொண்டு வருகிறோம்.

கிராமப்புற மக்களுடைய குரல் எப்போதும் எந்தச் சூழலிலும் தடையில்லாமல் ஒலிக்க வேண்டும் என்பதற்காகத்தான் இதுபோல கிராம சபைக் கூட்டங்களை தடையில்லாமல் நடத்துகிறோம்.

**மக்களாட்சி மலர்ந்த உத்திரமேரூர் வட்டாரம்!**

மக்களாட்சி முதலில் மலர்ந்த இடம் கிராமங்கள் தான். காஞ்சிபுரம் பக்கம் இருக்கிற உத்தரமேரூர் வட்டாரம் தான் ஜனநாயகத் தேர்தல் அமைப்பு முறை பிறந்த தொட்டிலாக வரலாற்று ஆசிரியர்களால் சொல்லப்படுகிறது.

உத்திரமேரூர் கல்வெட்டு இதை சொல்கிறது. யாரெல்லாம் தேர்தலில் போட்டியிட இருக்கிறார்களோ அவர்கள் எல்லோருடைய பெயரையும் ஓலைச்சுவடியில் எழுதிக் குடத்தில் போடுவார்கள். அந்தக் குடத்தை குலுக்கி ஒரு ஓலையை எடுப்பார்கள். அப்படி எடுக்கப்பட்ட பெயரில் யாருடைய பெயர் பொறிக்கப்பட்டு இருக்கிறதோ அவர் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுவார். இதுதான் குடவோலை முறை. இப்படித்தான் தமிழ்நாட்டில் மக்களாட்சி என்ற அமைப்பே மலர்ந்தது.

அந்த வகையில் பார்த்தால் கிராமங்களில்தான் மக்களாட்சி முறையானது முதலில் தோன்றியிருக்கிறது. அதிலும் குறிப்பாக, ‘கிராம சபை’ என்ற அமைப்பு தமிழ்நாட்டை பொறுத்தவரையில், சோழர் காலந்தொட்டே பழக்கத்தில் இருந்து வருகிறது.

சோழப் பேரரசில் ‘ஊர் மற்றும் மகா சபை’ என்கிற இரு வேறு அவைகள் இருந்தது. இதில் மகாசபையை போன்றதுதான் தற்போதைய கிராமசபை என்று அறியமுடிகிறது. மக்களாட்சியின் ஆணிவேராக இருக்கிற கிராம சபைக் கூட்டங்களில் மக்களே நேரடியாக விவாதித்து, தங்களுடைய தேவைகளையும், பயனாளிகளையும் தேர்வு செய்வதிலும், வளர்ச்சிக்கான திட்டங்களை தீட்டுவதிலும் முக்கியப் பங்காற்றி வருகிறார்கள்.



இது இந்திய அளவில் நாடாளுமன்றம், மாநில அளவில் சட்டமன்றம் இருப்பதைப் போல, கிராம அளவில் கிராம சபையானது மக்கள் குரலை எதிரொலிக்கிற மன்றமாக அமைந்திருக்கிறது.

கிராம சபைகள் குறைந்தது ஆண்டுக்கு இரண்டு முறை நடைபெற வேண்டும் என்று தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 குறிப்பிட்டிருந்தாலும், அதை ஆண்டுக்கு நான்கு முறை என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மாற்றி அமைத்தார். தற்போதைய திராவிட மாடல் அரசானது, இதை ஆண்டுக்கு 6 முறை கிராம சபைக் கூட்டங்கள் நடைபெற வேண்டும் என்று அதிகரித்திருக்கிறோம்.

அதன்படி, ஆண்டொன்றுக்கு முறையே *குடியரசு நாள், *உலக தண்ணீர் நாள், *தொழிலாளர் நாள், *விடுதலை நாள், *காந்தியடிகள் பிறந்தநாள் *உள்ளாட்சிகள் நாள் ஆகிய 6 நாட்களில் கிராம சபை நடைபெற்று வருகிறது.

**கிராம சபைகளுக்கு அதிக அதிகாரங்கள்!**

ஒரு அமைப்பை வலுப்படுத்த வேண்டும் என்றால் அதற்கு அதிகாரம் வழங்க வேண்டும். நிதி ஆதாரங்களையும் ஏற்படுத்தித் தர வேண்டும். கிராம சபைகளுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கிறது.

*கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டத்தை அங்கீகரித்தல், *ஊராட்சிகளில் மேற்கொள்ளப்படும்பணிகளின்முன்னேற்றத்தினைக் கண்காணித்தல், *ஊராட்சிகளின் வரவு, செலவினங்களை ஆய்வு செய்தல், *பயனாளிகளைத் தேர்வு செய்தல், திட்டக் கண்காணிப்பு செய்தல் ஆகிய அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கிறது.

கிராம சபை ஒன்றுக்கு கிராம ஊராட்சிகள் மேற்கொள்ளும் செலவினம் ஆயிரம் ரூபாயில் இருந்து ஐந்தாயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. கிராம சபைகள் பல சிறப்பு செய்கைகளைச் செய்கிற வகையில், நலிந்தோர்க்கும், வறியோர்க்கும் உதவி செய்ய மாற்றுத் திறனாளிகள் நலன், முதியோர் நலன், குழந்தைகள் நலன் போன்றவற்றில் அதீத ஈடுபாடு காட்டிட வேண்டும். கல்விக்காக நம்முடைய அரசு எடுக்கிற முயற்சிகள் எல்லாவற்றிலும் கிராம சபைகள் முக்கியப் பாலமாக இருக்க வேண்டும்.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் தொடங்கி வைத்திருக்கிறேன். உங்கள் குழந்தைகள் இப்போது பள்ளிக்கு சென்று, சாப்பிடுகிறார்களா?

தமிழ்நாடு முழுக்க 16 லட்சம் குழந்தைகள் காலை உணவு சாப்பிடுகிறார்கள்! அது மட்டுமல்ல, எண்ணும் எழுத்தும் திட்டம், பள்ளி உட்கட்டமைப்புத் திட்டங்கள், இது மாதிரியான திட்டங்களை நீங்கள் மேம்படுத்த உதவி செய்து செயல்படுத்த வேண்டும்.

**சோ**ழப் பேரரசில் ‘ஊர் மற்றும் மகாசபை’ என்கிற இரு வேறு அவைகள் இருந்தது. இதில் மகாசபையை போன்றதுதான் தற்போதைய கிராமசபை என்று அறிய முடிகிறது. மக்களாட்சியின் ஆணிவேராக இருக்கிற கிராம சபைக் கூட்டங்களில் மக்களே நேரடியாக விவாதித்து, தங்களுடைய தேவைகளையும், பயனாளிகளையும் தேர்வு செய்வதிலும், வளர்ச்சிக்கான திட்டங்களை தீட்டுவதிலும் முக்கியப் பங்காற்றி வருகிறார்கள்.

இது இந்திய அளவில் நாடாளுமன்றம், மாநில அளவில் சட்டமன்றம் இருப்பதைப் போல, கிராம அளவில் கிராம சபையானது மக்கள் குரலை எதிரொலிக்கிற மன்றமாக அமைந்திருக்கிறது.

இன்றைக்கு கிராம சபையில் பங்கெடுத்த நீங்கள், பங்கேற்காத உங்கள் ஊர் மக்களிடம் போய் சொல்லுங்கள், கிராம சபையை ஒரு ஆக்கப்பூர்வமான கருத்துப் பரிமாற்றக் களமாக கருதி கலந்து கொள்ள வேண்டும் என்று.

**ஒட்டுமொத்த வளர்ச்சி பற்றி விவாதிக்க வேண்டும்!**

கிராம சபையில், ஊராட்சிகளுடைய ஒட்டுமொத்த வளர்ச்சிக்குத் தேவையான கருத்துகளை மட்டுமே விவாதிக்க வேண்டும். ஊராட்சியினுடைய எல்லாப் பகுதிகளும் முழுமையான வளர்ச்சியை அடைய, அங்கே கூடியிருக்கக்கூடிய அலுவலர்களிடத்தில், அவர்கள் துறை மூலமாக மேற்கொள்ளப்படுகிற திட்டங்களை பற்றி தெரிந்து கொள்ள வேண்டும்.

மகளிர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் அதிக அளவில் கலந்துக் கொள்வதை உறுதி செய்ய வேண்டும். கிராமசபையில் அவர்கள் கருத்துகளுக்கு உரிய முக்கியத்துவமும் அளிக்கப்பட வேண்டும். தேர்வு செய்யப்படுகிற பணிகள் பொதுவானதாகவும் எல்லோரும் பயன் பெறும் வகையில் இருப்பதையும் உறுதி செய்ய வேண்டும். கிராம சபை நடைபெற்ற விவரங்களை குறிக்க, பதிவேடு பராமரித்து, எல்லோருடைய கருத்துகளையும் பதிவு செய்ய வேண்டும்.

*நீர் ஆதாரங்களை வளப்படுத்துதல், *தண்ணீரின் முக்கியத்துவம், *நிலத்தடி நீரினை செறிவூட்டுதல், *நீர்நிலைகளைப் பாதுகாத்தல் - போன்ற ஆக்கப்பூர்வமான பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

*சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்தல், *சுகாதாரம் பேணுதல், *முறையான திட, திரவக் கழிவு மேலாண்மை செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளவும் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும்.

இதை நிலைநிறுத்துகிற வகையில், எல்லா ஊராட்சி மன்ற தலைவர்களும் மக்கள் பணி ஆற்ற வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

**ஊரகப் பகுதிகளில் பணப் புழக்கம்!**

*மகளிருக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்குகிற வகையில், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் செயல்படுத்தபட்டு வருகிறது. ஒரு கோடியே

6 லட்சத்து 50 ஆயிரம் பெண்கள் இந்தத் திட்டத்தின் மூலமாக பயனடைந்து கொண்டு வருகிறார்கள்.

விடுபட்டவர்களும் மேல்முறையீடு செய்யலாம் என்கிற வாய்ப்பை அரசு வழங்கியிருக்கிறது. இந்தத் திட்டத்தில் கிராமப்புறப் பெண்கள்தான் அதிகமாக பயனடைகிறார்கள். 1000 ரூபாய் என்பது அவர்களுக்கும் அவர்களது குடும்பத்திற்கும் மிகுந்த உதவியாக இருக்கிறது. இன்னும் சொன்னால், ஊரகப் பகுதிகளில் பணப் புழக்கம் அதிகமாக இந்தத் திட்டம் வழிவகை செய்திருக்கிறது.

ஆட்சிப் பொறுப்பேற்ற அன்றே - மகளிருக்குக் கட்டணமில்லாப் பயணம் என்கிற விடியல் பயண வசதியை ஏற்படுத்தித் தந்தோம். இதுவும் பெண்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படையாக அமைந்திருக்கிறது.

அரசுப் பள்ளியில் படித்த மாணவிகள், உயர்கல்விக்காகக் கல்லூரியில் சேர்ந்தால், அவர்களுக்குப் புதுமைப்பெண் திட்டத்தில் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கி வருகிறோம்.

வேளாண்மைக்கு என்று தனி நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்து கொண்டு இருப்பதும் நம்முடைய கழக அரசுதான். இதன் மூலமாக, பாசனப் பரப்பும் அதிகமாகி, வேளாண் உற்பத்தியும் உயர்ந்துள்ளது. அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு புத்துயிர் வழங்கி, விரிவுபடுத்தி கொண்டு வருகிறோம்.

இப்படியாக, கிராமங்களுடைய - கிராம மக்களுடைய ஒட்டுமொத்த முன்னேற்றத்தில் சிறப்பு கவனத்தை திமுக அரசு செயல்படுத்தி கொண்டு வருகிறது.

அனைத்துத் துறையும் வளர வேண்டும் - அனைத்து மாவட்டங்களும் வளர வேண்டும் என்ற இலக்கை வைத்து செயல்பட்டு வருகிறோம். நகர்ப்புறங்கள் மட்டும் வளர்ந்தால் போதாது - கிராமப்புறங்களும் வளர்ந்தாக வேண்டும்.

**ஒட்டுமொத்த முன்னேற்றத்தில் சிறப்பு கவனம்!**

“ஒரு மாநிலத்தினுடைய வளர்ச்சி என்பது பொருளாதார வளர்ச்சியாக - தொழில் வளர்ச்சியாக மட்டும் இருக்கக் கூடாது. சமுதாய வளர்ச்சியாக இருக்க வேண்டும்” என்று நான் அடிக்கடி சொல்லி கொண்டு வருகிறேன்.

அதை செயல்படுத்திக் காட்ட வேண்டும் என்றால், கிராமங்கள் முழுமையாக வளர்ச்சி அடைந்தாகவேண்டும். இதை மனதில் வைத்துதான் எல்லாத் திட்டங்களையும் செயல்படுத்தி கொண்டு வருகிறோம்.

இன்று அக்டோபர் 2, அண்ணல் காந்தியடிகளின் பிறந்தநாள். “இந்தியா கிராமங்களில் வாழ்கிறது” என்று சொல்லி, ‘கிராம சுயராஜ்ஜியம்’ எனும் கிராம தற்சார்பு நிலையை எல்லா கிராமங்களும் அடைய வேண்டும் என்று விரும்பினார்.

தற்சார்புள்ள கிராமங்கள் - தன்னிறைவு பெற்ற கிராமங்கள் - எல்லா வசதிகளும் கொண்ட கிராமங்கள் - சமூக வளர்ச்சி பெற்ற கிராமங்கள் - ஆகியவற்றை உருவாக்க இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு எந்நாளும் உழைக்கும், உழைக்கும், உழைக்கும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

# சாதனை விஞ்ஞானிகள் பெயரில் ஸ்காலர்ஷிப்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... 5 ஆம் பக்கத் தொடர்ச்சி

முதல் அறிவிப்பு இந்தியாவிற்கும் தமிழ்நாட்டிற்கும் பெருமையை ஏற்படுத்திக் கொடுத்த, இனியும் ஏற்படுத்திக் கொடுக்கப் போகின்ற அறிவியல் மேதைகளான இந்த ஒன்பது பேருக்கும் தமிழ்நாடு அரசின் சார்பில், ஒவ்வொரு வருக்கும் தலா 25 லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதை பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்கள் அறிவுக்கான அளவுகோல் எதுவுமில்லை. உங்கள் உழைப்பிற்கான அங்கீகாரத்தின் அடையாளமாகதான் தமிழ்நாடு அரசு இந்தத் தொகையை வழங்கியிருக்கிறது. இதை ஏற்றுக்கொண்டு, மேலும், மேலும் இந்தியாவிற்கு நீங்கள் பெருமை சேர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்

இரண்டாவது அறிவிப்பு என்னோட கனவுத் திட்டமான ‘நான் முதல்வன்’ திட்டத்தை பற்றி உங்களுக்குத் தெரியும். தமிழ்நாட்டு மாணவர்கள் - இளைஞர்கள் ஏதோ பட்டம் வாங்கினால் மட்டும் போதும் என்று நினைக்காமல் கல்வியில் - அறிவாற்றலில் - சிந்திக்கின்ற திறனில் - பன்முகத் திறமையில் சிறந்தவர்களாக அப்படி உருவாக்கத்தான் நான் முதல்வன் திட்டத்தை தொடங்கி நடத்திக்கொண்டு வருகிறோம்.

சென்ற ஆண்டு மட்டும் 13 லட்சம் பேருக்கு பயிற்சி வழங்கி இருக்கிறோம். 10 இலட்சம் என்று இலக்கு வைத்திருந்தோம். ஆனால் 13 இலட்சம் பேருக்கு பயிற்சி வழங்கியிருக்கிறோம். நம்முடைய மாணவர்களை அனைத்து திறமைகளும் கொண்டவர்களாக வளர்த்து வருகிறோம்.

**சாதனை விஞ்ஞானிகள் பெயரில் ஸ்காலர்ஷிப்!**

பன்னாட்டு நிறுவனங்கள் அதிக அளவில் தமிழ்நாட்டிற்கு தொழில் தொடங்க வருகிறார்கள். அதற்குத் தகுதியானவர்களாக தமிழ்நாட்டு இளைஞர்களை உருவாக்கி வருகிறோம். அதேபோல அறிவியல் திறனுள்ள மாணவர்களையும் உருவாக்க நினைக்கிறோம். அதற்கான அறிவிப்பை இந்த மேடையில் வெளியிடுவது மிகமிக பொருத்தமாக அமையும் என்று நான் கருதுகிறேன்.

பொறியியல் படிக்கின்ற மாணவர்களுக்கு அறிவியல் கண்டுபிடிப்பு ஆர்வத்தை உருவாக்க இந்த திட்டத்தை செயல்படுத்தப் போகிறோம். அரசு பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படும், 7.5 விழுக்காடு ஒதுக்கீட்டின் கீழ், அரசின் கல்வி உதவித் தொகை பெற்று இளநிலை பொறியியல் படிப்பை முடித்து, முதுநிலை பொறியியல் படிப்பை தொடர்கின்ற 9 மாணவர்களுக்கு சாதனை விஞ்ஞானிகள் பெயரில் ஸ்காலர்ஷிப் வழங்க இருக்கிறோம். இதன் மூலம் அவர்களுக்கு கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம் உள்ளிட்ட அனைத்து கட்டணங்களும் வழங்கப்படும். அந்த மாணவர்கள், அறிவியலாளர்களின் தலைமையில் அமைக்கப்படுகின்ற குழுக்களால் தேர்வு செய்யப்படுவார்கள். இந்தக் கல்வி உதவித்தொகைக்காக, பத்து கோடி ரூபாயில் தொகுப்பு நிதியம் ஒன்று உருவாக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே அமர்ந்திருக்கும் இந்த ஒன்பது பேரை பாராட்டுவது அவர்களை பாராட்டுவது மட்டும் இல்லை, அவர்களைப் போல ஆளுமைகள் இன்னும் அதிகமாக உருவாக வேண்டும் என்று ஊக்கப்படுத்தவும் தான் இந்தப் பாராட்டு விழாக்களை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

**அறிவியல் மேதைகள் இன்னும் உருவாக வேண்டும்!**

இந்த நிகழ்ச்சியை 58 இலட்சம் கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்கள் காண்பதற்கான ஏற்பாடுகளை, நம்முடைய அரசு செய்திருக்கிறது. இதனை பார்த்துக் கொண்டிருக்கும் மாணவ கண்மணிகளே! உங்களை நான் கேட்டு கொள்வது, அறிவியல் ஆர்வத்தையும், ஆளுமைத் திறனையும் நீங்கள் வளர்த்துக் கொள்ளவேண்டும். இன்றைய மாணவர் சமுதாயத்திலிருந்து - இந்த மேடையில் இருக்கின்ற ஆளுமைகளைப் போன்ற அறிவியல் மேதைகள் உருவாகவேண்டும்! அதுதான் இந்த திராவிட மாடல் அரசின் இலக்கு! அந்த வகையில், இங்கே அமர்ந்திருப்பவர்கள் அறிவியலாளர்களாக மட்டும் இல்லை, அறிவியல் வழிகாட்டிகளாகவும் இருக்கிறார்கள்.

இவர்களுடன் சேர்த்து, பல்லாயிரக்கணக்கான விஞ்ஞானிகள் - அறிவியல் ஆளுமைகள் - திறமைசாலிகளின் கூட்டு முயற்சியால் தான் இவை அனைத்தும் நிகழ்த்திக் காட்டப்பட்டிருக்கிறது. அந்த வகையில், இன்றைய இஸ்ரோ தலைவர் மரியாதைக்குரிய சோம்நாத் அவர்களுக்கும், என்னுடைய மனமார்ந்த பாராட்டுக்களையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் அனைத்து அறிவியலாளர்களுக்கும் எனது பாராட்டுக்கள் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களால் தான் அறிவியல் துறையில் இந்தியா தலைநிமிர்ந்து நிற்கிறது. நம்மை விட அதிகமான தொழில்நுட்ப இயந்திரங்கள் மற்ற நாடுகளில் இருக்கலாம். ஆனால், அதிகமான தொழில்நுட்ப அறிவுக் கூர்மை கொண்டவர்கள் இந்தியாவில்தான் இருக்கிறார்கள்.

பூமிக்கு அப்பால் உள்ள அனைத்து ஆராய்ச்சிகளும் தொய்வின்றித் தொடரட்டும். சூரியன் பற்றியும் - நிலாவை பற்றியும் எல்லா ஆய்வுகளும் வெற்றிகரமாக அமைய வாழ்த்துகிறேன்.

மனிதரை விண்வெளிக்கு அனுப்புகின்ற வரை அனைத்து அறிவியல் முயற்சிகளும் வெற்றிகரமாக நடைபெறட்டும். இந்திய நாட்டைக் காப்போம்! நாட்டுக்கு அப்பால் உள்ள உலகத்தையும் கற்போம்! இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இவ்விழாவில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.கிரிராஜன், துணை மேயர் மு. மகேஷ் குமார், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உயர்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் ஆ. கார்த்திக், தொழில்நுட்ப கல்வி இயக்குநர் டாக்டர் டி.ஜி. வினய், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.




திருச்சுழி சட்டமன்றத் தொகுதி, தோணுகால் ஊராட்சியில் காந்தியடிகளின் பிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு கலந்து கொண்டு மக்களின் கோரிக்கைகளைக் கேட்டறிந்தார்.

# நெல்லை மத்திய மாவட்டக் கழகக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் அறிக்கை



நெல்லை.அக். 4-

நெல்லை மத்திய மாவட்ட கழக செயற்குழு கூட்டம் நாளை (05.10.2023 -வியாழக்கிழமை) காலை 10 மணி அளவில் மத்திய மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட அவை தலைவர் வி.கே.முருகன் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்கள் மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு குறித்து கலந்தாலோசிக்கப் படுகிறது. என நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது.

இந்தக் கூட்டத்தில் மாநில, மாவட்ட, மாநகர, கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய,நகர,பேரூர்,பகுதி கழக செயலாளர்கள் தவறாமல் பங்கேற்று தங்கள் கருத்துக்களை வழங்கிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழக நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள் ஆய்வு, வாக்குச்சாவடி முகவர்கள் குழு சரிபார்த்தல், ஒன்றிய, நகர,பேரூர், செயல் வீரர்கள் கூட்டங்கள்.

கழக வளர்ச்சி பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# நாகர்கோவிலில் பலத்த மழை!

## மேயர் ரெ.மகேஷ் ஆய்வு

நாகர்கோவில், அக். 4-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சிக்கு உட்பட்ட கனமழை காரணமாக பாதிக்கப்பட்ட பகுதிகளை நேற்று (03.10.2023-செவ்வாய்) காலை கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் ஆய்வு மேற்கொண்டார். ஆய்வில் கோட்டார், சவேரியார் கோவில் சந்திப்பு மற்றும் செட்டிக்குளம் சந்திப்பு பகுதியில் சாலையில் பாதாள சாக்கடை திட்டத்திற்காக தோண்டப்பட்ட இடத்தில் ஏற்பட்ட பள்ளத்தினை சரி செய்ய அதிகாரிகளிடம் அறிவுறுத்தினார்.

அதன்பின்பு 4வது வார்டு பெருவிளை, கிறிஸ்டோபர் காலனி, K.P. நாராயணன் சாலையில் மழையினால் சாலையோரத்தில் நின்ற வேப்ப மரம் மற்றும் தென்னை மரம் சரிந்து அருகிலிருந்த வீட்டின் மதில் சுவர் சேதமடைந்துள்ளது அதனை உடனடியாக அகற்றவும், இராஜலெட்சுமி நகர் பள்ளி வாசல் அருகில் மழையினால் சாலையில் ஏற்பட்ட பெரிய பள்ளத்தினை பார்வையிட்டு அதனை உடனே சரி செய்யவும் அதிகாரிகளிடம் அறிவுறுத்தினார்.

அதனை தொடர்ந்து நாகர்கோவில், அண்ணா பேருந்து நிலையத்தில் உள்ள நேர காப்பாளர் அலுவலகத்தில் ஒட்டுநர் மற்றும் நடத்துனர் பயன்படுத்தும் கழிப்பிடத்தை முறையே சுத்தம் செய்து பராமரிக்க அறிவுறுத்தப்பட்டது. பேருந்து நிலையத்தில் பொதுமக்கள் பயன்படுத்தும் நடைபாதையில் மக்களுக்கு இடையூறாக எவ்வித பொருட்களும் இருக்கக் கூடாது எனவும், பேருந்து நிலையத்தில் தஞ்சம் அடைந்த ஆதரவற்ற 5க்கும் மேற்பட்ட முதியோர்களை காப்பகங்களில் சேர்க்கவும் அதிகாரிகளிடம் அறிவுறுத்தப்பட்டது. நாகர்கோவில் மாநகராட்சி மூலமாக கட்டப்பட்டு வரும் பொது கழிப்பிடத்தை கட்டண கழிப்பிடமாக மாற்றலாமா என்று ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. பேருந்து நிலையத்தின் பின்புறம் உள்ள மழைநீர் வடிகால் ஓடையை சரி செய்யவும், பேருந்து நிலையத்தில் பயன்பாடில்லா மின்விளக்குகளை மாற்றி புதிய மின்விளக்குகளை போட்டு பராமரிக்கவும், பயன்பாடில்லாமல் இருக்கும் பயணிகள் காத்திருப்பு அறையை பயன்பாட்டிற்கு கொண்டு வரவும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அதிகாரிகளிடம் அறிவுறுத்தினார்.

ஆய்வில் மாநகராட்சி ஆணையாளர் ஆனந்த் மோகன் மாநகர நல அலுவலர் டாக்டர். ராம் குமார், சுகாதார ஆய்வாளர் திரு. மாதவன்பிள்ளை, மாநகராட்சி அதிகாரிகள், மண்டல தலைவர் திரு. ஜவகர், மாமன்ற உறுப்பனர் திருமதி. ரோஸிட்ட உட்பட கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி, காந்தி ஜெயந்தியை முன்னிட்டு தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட வில்வமரத்துப்பட்டி ஊராட்சியில் நடைபெற்ற கிராமசபை கூட்டத்தில் கலந்துகொண்டு பொதுமக்களிடையே சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ.கீதாஜீவன் கலந்துரையாடினார். உடன் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி. மார்க்கண்டேயன், ஒன்றியச் செயலாளர்கள் ராமசுப்பு(மத்திய ஒன்றியம்),சின்னமாக முத்து, செல்வராஜ், மும்மூர்த்தி, தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீதர்,மாவட்ட வருவாய் அலுவலர் அஜய் சீனிவாசன், விளாத்திகுளம் பேரூராட்சி மன்ற தலைவர் அயன்ராஜ், கோவில்பட்டி வருவாய் கோட்டாட்சியர் திருமதி ஜேன் கிறிஸ்டிபாய், ஊராட்சி மன்ற தலைவர் திருமதி. சின்னப்பொண்ணு உள்ளிட்டோர் மற்றும் திமுக கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சிக்கு உட்பட்ட கனமழை காரணமாக பாதிக்கப்பட்ட பகுதிகளை 03.10.2023, செவ்வாய் அன்று காலை கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் ஆய்வு மேற்கொண்டார்.

## பெரம்பலூரில் ஆலோசனைக் கூட்டம்

பெரம்பலூர், அக்.04–

பெரம்பலூர் மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை ஆலோசனைக் கூட்டம், மாவட்டக் கழக அலுவலகத்தில், மாவட்டச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன் தலைமையில், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் முன்னிலையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில், மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் கே.எம்.ஏ.சுந்தரராசு, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி.ஆர்.சிவசங்கர், கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை மாவட்ட அமைப்பாளர் முத்தரசன், கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை மாவட்ட துணை தலைவர் ரமேஷ், கலை இலக்கிய பேரவை மாவட்ட துணை அமைப்பாளர்கள் ந.முத்து செல்வம்,பூபதி, சின்னதுரை, தென்றல் ரவி, கணேசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### தேசிய மருத்துவ ஆணையம் கூட்டாட்சி தத்துவத்துக்கு எதிரான கட்டுப்பாடுகளை விதிப்பது-

# ஒன்றிய அரசு உடந்தையாக இருப்பது அரசியலமைப்புச் சட்டத்துக்கு எதிரானது!

## "தினகரன்" நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, அக். 4-

தேசிய மருத்துவ ஆணையம் கூட்டாட்சி தத்துவத்துக்கு எதிரான கட்டுப்பாடுகளை விதிப்பது மற்றும் ஒன்றிய அரசு உடந்தையாக இருப்பது அரசியலமைப்புச் சட்டத்துக்கு எதிரானது என "தினகரன்" நாளேடு தலையங்கம் வெளியிட்டுள்ளது. அது வருமாறு:-

மருத்துவ ஆணையம் (என். எம். சி) என்பது 33 உறுப்பினர்களைக் கொண்ட இந்தியாவின் மருத்துவத் துறையின் ஒழுங்குமுறை அமைப்பாகும். இது, இந்திய மருத்துவக் கல்வி மற்றும் மருத்துவ நிபுணர்களைக் கண்காணித்து ஒழுங்குபடுத்தும் செயலை மேற்கொள்கிறது. கடந்த 2020ம் ஆண்டு செப்டம்பர் 25ம் தேதி இந்திய மருத்துவக் குழுவை ஒன்றிய அரசு மாற்றி அமைத்தது. சமீபத்தில் தேசிய மருத்துவ ஆணையம் வகுத்திருக்கும் புதிய விதிகள், தென் இந்தியாவில் உள்ள மாநிலங்களை அதிர்ச்சியில் ஆழ்த்தி உள்ளது. ஒன்றிய அரசிதழில் ஆகஸ்ட் 16ம் தேதி வெளியிடப்பட்டுள்ள இளநிலை மருத்துவக் கல்விக்கான தேசிய மருத்துவ ஆணையத்தின் புதிய விதிமுறைகளில், 10 லட்சம் மக்கள் தொகைக்கு அதிகபட்சமாக 100 மருத்துவ மாணவர் சேர்க்கை இடங்கள் மட்டுமே அனுமதிக்கப்படும்.

அதற்கும் கூடுதலான மருத்துவ மாணவர் சேர்க்கை இடங்கள் உள்ள மாநிலங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகளோ, மருத்துவ மாணவர் சேர்க்கை இடங்களோ அனுமதிக்கப்படாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் மருத்துவக் கல்லூரிகளும், அவற்றில் உள்ள மாணவர் சேர்க்கை இடங்களும் தேவைக்கும் அதிகமாக இருப்பதால், அடுத்த ஆண்டு முதல் புதிய மருத்துவக் கல்லூரிகளை திறக்க தடை விதிக்கப்பட்டிருக்கிறது. உலகம் முழுவதும் மருத்துவக் கல்விக் கட்டமைப்புகளை அதிகரிக்க வேண்டும் என்று வலியுறுத்த வேண்டிய நிலையில் மருத்துவ ஆணையத்தின் புதிய விதி மிகவும் பிற்போக்கானது.

2011ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி தமிழகத்தின் மக்கள்தொகை 7.23 கோடி ஆகும். 2021ம் ஆண்டில் இது 7.64 கோடியாக இருக்கும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்த மக்கள் தொகைக்கு தமிழ்நாட்டில் அதிக அளவாக 7,640 மாணவர் சேர்க்கை இடங்கள் மட்டுமே இருக்க முடியும். ஆனால், தமிழ்நாட்டில் இன்றைய நிலையில், 11,600 மருத்துவ மாணவர் சேர்க்கை இடங்கள் உள்ளன. அதனால், இன்னும் பல ஆண்டுகளுக்கு தமிழ்நாட்டில் புதிய மருத்துவக் கல்லூரிகளை தொடங்க



தினகரன்

அக்டோபர் 3, 2023 செவ்வாய்க்கிழமை

கூட்டாட்சிக்கு ஆபத்து

தேசிய மருத்துவ ஆணையம் (என். எம். சி) என்பது 33 உறுப்பினர்களைக் கொண்ட இந்தியாவின் மருத்துவத் துறையின் ஒழுங்குமுறை அமைப்பாகும். இது, இந்திய மருத்துவக் கல்வி மற்றும் மருத்துவ நிபுணர்களைக் கண்காணித்து ஒழுங்குபடுத்தும் செயலை மேற்கொள்கிறது. கடந்த 2020ம் ஆண்டு செப்டம்பர் 25ம் தேதி இந்திய மருத்துவக் குழுவை ஒன்றிய அரசு மாற்றி அமைத்தது.

சமீபத்தில் தேசிய மருத்துவ ஆணையம் வகுத்திருக்கும் புதிய விதிகள், தென் இந்தியாவில் உள்ள மாநிலங்களை அதிர்ச்சியில் ஆழ்த்தி உள்ளது. ஒன்றிய அரசிதழில் ஆகஸ்ட் 16ம் தேதி வெளியிடப்பட்டுள்ள இளநிலை மருத்துவக் கல்விக்கான தேசிய மருத்துவ ஆணையத்தின் புதிய

முடியாது. புதுச்சேரி, கேரளா, ஆந்திரா, தெலங்கானா ஆகிய தென்மாநிலங்களுக்கும் இதே நிலைதான் ஏற்படும்.

அதிகளவில் மருத்துவர்கள் உருவாக்கப்பட்டால், எதிர்காலத்தில் மருத்துவர்களுக்கு வேலை கிடைக்காது என்பதால் தான் இந்த புதிய கட்டுப்பாட்டைக் கொண்டு வந்திருப்பதாக தேசிய மருத்துவ ஆணையம் கூறுகிறது. இது அபத்தமானது. தமிழ்நாட்டில் 11,600 மருத்துவ மாணவர் சேர்க்கை இடங்கள் இருந்தாலும்கூட, அந்த இடங்கள் அனைத்திலும் படிப்பவர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் அல்ல. தமிழகம் உள்ளிட்ட தென் மாநிலங்களில் தான் அதிக மருத்துவக் கல்லூரிகள் இருந்தாலும், வட மாநிலங்கள் அனைத்தும் மருத்துவக் கல்வி வழங்குவதில் இன்னும் பின்தங்கி தான் உள்ளன. அங்கு மருத்துவர்களுக்கு கடுமையான பற்றாக்குறை நிலவுகிறது.

அதனால், தமிழகத்தில் பயிலும் மருத்துவ மாணவர்கள், பிற மாநிலங்களில் சேவையாற்றும் வாய்ப்புகளை கருத்தில் கொள்ளாமல் கட்டுப்பாட்டை விதிப்பது அபத்தமானது. ஒரு மாநிலத்தில் மருத்துவக் கல்லூரிகளை திறக்க அனுமதிக்கலாமா, வேண்டாமா என்பதை தீர்மானிக்கும் அதிகாரம் மாநில அரசுக்கு தான் உண்டு. தேசிய மருத்துவ ஆணையத்துக்கு அந்த அதிகாரம் கிடையாது. இந்த விவகாரத்தில் தேசிய மருத்துவ ஆணையம் கூட்டாட்சி தத்துவத்துக்கு எதிரான கட்டுப்பாடுகளை விதிப்பதும், அதற்கு ஒன்றிய அரசு உடந்தையாக இருப்பதும் இந்திய அரசியலமைப்பு சட்டத்துக்கு எதிரானவை.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### என்னை சந்திக்க யாரும் வரவேண்டாம்!

# நலமுடன் இருக்கிறேன் - அமைச்சர் ஐ.பெரியசாமி அறிக்கை!

திண்டுக்கல், அக். 4-

'நான் நலமுடன் இருக்கின்றேன். என்னை நலம் விசாரிக்க யாரும் வரவேண்டாம் என்று அமைச்சர் ஐ.பெரியாசமி அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார். இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

நான் நலமுடன் இருக்கின்றேன். டெங்கு மற்றும் நோய் தொற்று பரவாமல் இருக்க என்னை மருத்துவனையில் நேரில் சந்தித்து நலம் விசாரிப்பதை தவிர்க்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். நான் மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பியவுடன் அனைவரையும் சந்திக்கிறேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர்அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# தேனி தெற்கு மாவட்டத்தில் தொடர் கூட்டங்கள்!

## மாவட்டக்கழகச் செயலாளர் கம்பம் நா.இராமகிருஷ்ணன்,எம்.எல்.ஏ., அறிவிப்பு



01.10.2023ஆம் நாள் காணொலிக்காட்சி வாயிலாக நடைபெற்ற மாவட்டக்கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் கழகத்தலைவர் தளபதியார் அவர்களால் அறிவிக்கப்பட்ட ஆணைக்கிணங்க கழக இளைஞரணி செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஏற்பாட்டில் நடைபெற உள்ள 2வது மாநில இளைஞரணி மாநாடு குறித்தும், எதிர்வரும் 14.10.2023ஆம் தேதி கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி,எம்.பி. அவர்களின் ஏற்பாட்டில் சென்னையில் நடைபெற உள்ள மகளிர் உரிமை மாநாடு குறித்தும், பாக வாரியாக இளைஞரணி நிர்வாகிகளை நியமிப்பது குறித்தும், இல்லந்தோறும் இளைஞரணி உறுப்பினர்களை சேர்ப்பது குறித்தும், நவம்பர் மாதம் நடைபெற உள்ள புதிய வாக்காளர்கள் சேர்த்தல், நீக்கல் முகாம் குறித்தும், கம்பம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் தனசெல்வம் மற்றும் ஆண்டிபட்டி சட்டமன்ற தொகுதி பார்வையாளர் கரூர் முரளி ஆகியோர் முன்னிலையில் மாவட்டக்கழக செயலாளரான எனது தலைமையில் பட்டியலில் கண்டவாறு ஒன்றிய, நகர, பேரூர் கழக கூட்டங்கள் நடைபெற உள்ளன. இந்த கூட்டத்தில் அந்தந்த பகுதிகளில் உள்ள மாநில, மாவட்டக்கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளைக்கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், இளைஞரணி உள்ளிட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், பாக முகவர்கள், கழக முன்னோடிகள் மற்றும் தொண்டர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

| வ. எண். | நாள், நேரம் | ஒன்றியம் / நகரம் / பேரூர் | இடம் |
|---|---|---|---|
| 1 | 04.10.2023 புதன் காலை 10.00 மணி | கம்பம் வடக்கு மற்றும் கம்பம் தெற்கு நகரம் | CNR மீட்டிங் ஹால், கம்பம் |
| 2 | 04.10.2023 புதன் காலை 11.00 மணி | க.புதுப்பட்டி பேரூர் மற்றும் அனுமந்தன்பட்டி பேரூர் | கே.எம்.பி.எல். மீட்டிங் ஹால், க.புதுப்பட்டி. |
| 3 | 04.10.2023 புதன் மாலை 04.00 மணி | உத்தமபாளையம் மேற்கு ஒன்றியம் | சமுதாயக்கூடம், பண்ணைப்புரம் |
| 4 | 05.10.2023 வியாழன் காலை 09.00 மணி | ஆண்டிபட்டி கிழக்கு மற்றும் மேற்கு ஒன்றியம் | ஆவுடையாச்சி மஹால், ஜக்கம்பட்டி. ஆண்டிபட்டி |
| 5 | 05.10.2023 வியாழன் மாலை 04.00 மணி | சின்னமனூர் நகரம் | C.R. மீட்டிங் ஹால் சின்னமனூர். |
| 6 | 05.10.2023 வியாழன் மாலை 06.00 மணி | சின்னமனூர் ஒன்றியம் | கவிப்பிரியா மஹால், ஓடைப்பட்டி ரோடு, சின்னமனூர் |
| 7 | 06.10.2023 வெள்ளி மாலை 03.00 மணி | கடமலை-மயிலை வடக்கு மற்றும் தெற்கு ஒன்றியம் | பத்திரகாளியம்மன் கலையரங்கம், கடமலைக்குண்டு |
| 8 | 06.10.2023 வெள்ளி மாலை 05.00 மணி | கம்பம் ஒன்றியம் | P.P.S.மஹால் காமயகவுண்டன்பட்டி |
| 9 | 06.10.2023 வெள்ளி மாலை 06.00 மணி | கூடலூர் நகரம் | K.S.மஹால் கூடலூர் |
| 10 | 07.10.2023 சனி காலை 10.00 மணி | உத்தமபாளையம் கிழக்கு ஒன்றியம் | R.D.M.மஹால் அணைப்பட்டி |

**கம்பம் நா.இராமகிருஷ்ணன், எம்.எல்.ஏ.**
செயலாளர்
தேனி தெற்கு மாவட்ட தி.மு.க.

# பெண்களிடம் சேமிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் உரிமைத் தொகை திட்டம்!

## இல்லத்தரசிகள் கருத்து!

அண்ணா பிறந்தநாளான கடந்த செப்டம்பர் மாதம் 15-ந்தேதி காஞ்சிபுரத்தில், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை. முதல் - அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

மக்கள் மேடை

இத்திட்டத்தின் மூலம் மொத்தம் 1 கோடியே 6 லட்சத்து 50 ஆயிரம் பெண்களுக்கு தலா ரூ.1,000 வீதம் வங்கிகள் மூலம் அனுப்பப் பட்டது.

இந்த உரிமைத்தொகைகளை பெற்ற இல் லத்தரசிகள் மகிழ்ச்சி அடைந்து இருக்கிறார் கள். மாதம் தோறும் ஆயிரம் ரூபாய் தங்க ளது கைகளில் உறுதியாக கிடைக்கப்போகிறது என்பதே அவர்களின் மகிழ்ச்சிக்கு காரணம்.

இவ்வாறு கிடைக்கும் பணத்தை பலர் உடனே செலவு செய்துவிட்டாலும் சிலர் வங் கிக்கணக்குகளில் இருப்பு வைத்து ஆனந்தப் படுகிறார்கள்.

இது மறைமுகமாக அவர்களிடம் ஒரு சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்துகிறது என் பதை மறுப்பதற்கு இல்லை.

இதுபற்றி கலைஞர் உரிமைத்தொகைபெ றும் இல்லத்தரசிகள் சிலர் கூறிய கருத்துகள் வருமாறு:

**மருத்துவ செலவுக்கு...**

ஆயிரம் விளக்கு பகுதியைச் சேர்ந்த இல் லத்தரசி ராதா கூறும் போது, 'நான் தினசரி கூலி வேலை செய்து வருகிறேன். அதில் கிடைக்கும் பணத்தை அன்றாட வீட்டுச்செலவுக்கு வைத்துக் கொள்கி றேன். உரிமைத் தொகையாக அரசு


ராதா

எனது வங்கிக்கணக்கில் போட்ட 1,000 ரூபாயை எடுக்கவில்லை. அதை குழந்தைகளின் கல்வி மற்றும் மருத்துவச் செலவுக்காக வைத்து உள்ளேன். இதன் மூலம் ஒரு சேமிப்பு பழக்கம் ஏற்படுகிறது' என் றார்.

**மிகப்பெரிய தொகை**

பல்லவன் சாலையைச் சேர்ந்த இல்லத்த ரசி லிசி கூறும்போது. 'உரிமைத் தொகை முழுவதையும் வங்கி யில் இருந்து வீட்டு செலவுக்காக எடுத்து விட்டேன். மளிகை, அரிசி உள்ளிட்ட அத்தி யாவசியப் பொருட்கள் வாங்கினேன். எங்களுக்கு 100 ரூபாயே பெரிய தொகையாக


லிசி

இருக்கும் போது. ஆயிரம் என்பது மிகப்பெ ரிய தொகையாக நினைக்கிறோம். கணக்கில் பணம் விழுந்த உடனேயே வங்கி ஏ.டி.எம். மில் நீண்ட வரிசையில் நின்று பணத்தை எடுத்துவந்து, ஒரே நாளிலேயே அத் தனை செலவுகளையும் செய்துவிட்டோம். அடுத்த உரிமைத் தொகைக்காக தற்போது காத்து கொண்டு இருக்கிறோம். கொஞ்ச நாளைக்குப் பிறகு சேமிக்கலாம் என்ற எண் ணம் இருக்கி றது' என்றார்.

**வாழ்க்கையை ஓட்ட வேண்டுமே?**

சென்னை கிரீம்ஸ் சாலையைச் சேர்ந்த இல்லத்தரசி அருள்ஜோதி கூறும் போது, 'முழுவ தையும் சேமிக்க வேண்டும் என்ற ஆசை இருக்கத்தான் செய்கி றது. இருந்தாலும் அன் றாட வாழ்க்கையை ஓட்ட வேண்டுமே? இத னால் அரசு எங்கள் வங்கி கணக்கில் செலுத் தும் தொகையில் 75சத வீதம் எடுத்து கொள்கிறோம்.


அருள்ஜோதி

மீதம் உள்ள ஒரு சிறிய தொகையை சேமிக் கிறோம். கூலி வேலை பார்ப்பதால் கிடைக் கும் தொகையால் குடும்ப செலவுகள் கழித்தா லும் கல்வி, மருத்துவம் செலவுகளுக்கு அரசு தரும் பணம் பயனுள்ள வகையில் இருக்கி றது. இதனை தேவையில்லாமல் ஊதாரித்த னமாக செலவு செய்யாமல் அத்தியாவசிய பொருட்கள் வாங்க மட்டுமே செலவு செய்கி றேன். குழந்தைகளுக்கும் இந்த தொகை பயனுள்ள வகையில் இருக்கிறது. இதற்கு தமிழக அரசுக்கு நன்றி' என்றார்.

**நல்ல எண்ணம்**

சிந்தாதிரிப்பேட்டையைச் சேர்ந்த இல்லத்த ரசி பி.சீதாலட்சுமி கூறும்போது, 'வங்கி களில் பணம் வந்து விட்டது என்று செல் போனுக்கு குறுஞ் செய்தி வந்த உட னேயே மனதிற்கு சந்தோஷமாக இருந் தது. அரசுக்கும், முதல் - அமைச்சருக்கும் நன்றியுடன் இருப்போம். இந்தப்பணத்தை முழுவதும் எடுக்கவில்லை. செலவு ஒரு புறம் இருந்தாலும் சேமிக்க வேண்டும் என்ற எண் ணமும் இருக்கிறது. எவ்வளவு தான் பணம் வந்தாலும் செலவு என்பது இருந்து கொண்டே தான் இருக்கும். எனவே செலவை கட்டுப் படுத்திகொண்டு ஒரு குறிப்பிட்ட தொகையை வரும் காலங்களில் சேமிக்க வேண்டும் என்ற எண்ணமும் தற்போது மேலோங்கி உள்ளது. குழந்தை களின் எதிர்கால தேவைக்கு அவை பயன்படும் என்பதால் சேமிக்க வேண்டும்


பி.சீதாலட்சுமி



என்ற ஒரு நல்ல எண்ணத்துடன் இருந்து வருகிறேன்' என்றார்.

**சேமிப்பை ஊக்குவிக்கும்**

இந்திய வங்கி ஊழியர் கூட்டமைப்பின் தமிழ்நாடு மாநில துணைத்தலைவர் சி. பி.கிருஷ்ணன் கூறும் போது, 'அடிப் படை தேவைக்கு மேல் இருப்பவர்கள் தான் சேமிக் கிறார்கள். தற்போது தமிழ் நாடு அரசு கலை ஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை செயல்படுத்தி வருகி றது. இந்த திட்ட பய னாளிகளின் வங்கி கணக்குகளில் அரசு செலுத் தும் தொகையை பெற 15-ந்தேதியில் இருந்து 18-ந்தேதி வரை குறைந்த பட்சம் 200 பேருக்கு மேல் வங்கி கிளைகளுக்கு வந்து பணத்தை எடுத்துச்செல்கின்றனர். இதில் 90 சதவீதம் பேர் பணத்தை எடுக்கின்றனர். 10 சதவீதம் பேர் பணத்தை சேமிக்கின்றனர். இதுப் படிப்படியாக மாறி, சேமிக்கும் பழக் கத்தை ஊக்குவிக் கும் என்று எதிர்பார்க் கிறோம்' என்றார்.


சி.பி.கிருஷ்ணன்

நன்றி :
**'தினத்தந்தி'**
03,10,2023

# ஈர இதயக்காரர்!



ஏறக்குறைய 32 ஆண்டுகள். 1986லிருந்து, அவரின் இறுதி மூச்சு அடங்கும் வரை எனக்கொரு அப்பாவாக வும் தலைவராகவும் இருந்தவர் கலைஞர். பதினேழு வயதில் சினிமா கனவுகளுடன் சென்னை வந்தேன். கவிதை எழுதுவேன். எழுதியதையெல்லாம் தொகுத்து, புத்தகமாக்கினேன். அதற்கு 'சூரியனைப் பார்க்காத சூரிய காந்திகள்' என தலைப்பு வைத்தேன். இந்தப் புத்தகத்தை கலைஞர் வெளியிட்டால்தான் சரியாக இருக் கும் என்று நினைத்து, சின்னக்குத்தூசியிடம் சொன் னேன். அவர் எங்க மாவட்டத்துக்காரர் என்பதால் நன்கு பழக்கம். அவர் என்னை, ஆற்காடு வீராசாமியிடம் அறிமுகப்படுத்தினார். பிறகு கலைஞரின் அறிமுகம் கிடைத்தது. நான் விரும்பியபடியே, கலைஞர் புத்தகத்தை வெளியிட, அவருடன் நெருங்கிப் பழக வாய்ப்புக் கிடைத்தது.

அப்போது, கலைஞரின் கதை, வசனத்தில் மு.க.ஸ்டாலின் 'ஒரே ரத்தம்' என்ற படத்தில் நடித்தார். அந்த படத்தில் பாடல் எழுத எனக்கு வாய்ப்புக் கொடுத் தார் கலைஞர்.

'ஒரே ரத்தம்' படம் வெளியான அன்று, கலைஞர் என்னை வீட்டுக்கு அழைத்தார். அதில் நடித்திருந்தவ ரும் இன்றைய முதல்வருமான மு.க.ஸ்டாலினிடம் ஆயிரம் ரூபாயைக் கொடுத்து, 'உன் படத்துக்கு பாட்டு எழுதியிருக்கான். உன் கையால கொடு. இன்னும் அவன் நல்லா வரணும்' என்றார்.

அந்த சமயத்தில், நண்பர்கள் சிலர் திரைப்படம் எடுக் கும் முயற்சியில் இருந்தனர். கலைஞர் கதை வசனம் எழுதிக் கொடுத்தால், படம் எடுக்கலாம் என்று நினைத் தேன். இதை ஆற்காடு வீராசாமியிடம் சொன்னேன். அவர் கலைஞரிடம் சொல்ல, அவரும் ஒப்புக் கொண் டார். அப்படித்தான் 'காவலுக்கு கெட்டிக்காரன்' உருவா னது. இளையராஜா இசையமைத்த அந்தப் படத்திற்கு எல்லா பாடலையும் நான்தான் எழுதினேன்.

பின்னர், கனிமொழி கருணாநிதியின் முயற்சியால், கலைஞரின் 'தென்பாண்டி சிங்கம்' நாவலை தொலைக் காட்சித் தொடராக எடுப்பதற்கு எனக்கு அனுமதி கிடைத் தது. அந்த சீரியலின் மூலமாகத்தான் நாசர், கீதா, மு. ராமசாமி, பாண்டிச்சேரி ராஜீவ் கூத்துப்பட்டறை பசுபதி போன்றவர்கள் எல்லாம் அறிமுகமானார்கள். அந்த தொடர் கலைஞருக்குப் பிடித்துப் போனதால், அதை மீண்டும் சன் தொலைக்காட்சியில் ஒளிபரப்பினார்கள். 'தென்பாண்டி சிங்கம்' கதையை கொஞ்சம் சமூக அக் கறை கொண்ட கதையாக மாற்றி 'பாசக் கிளிகள்' திரைப் படமாக வெளிவந்தது. கலைஞர் கதை, வசனம் எழுத, அமிர்தம் இயக்கினார். நான் இணை இயக்குநராக பணி யாற்றினேன்.

'பாசக் கிளிகள்' படத்தில் வேலை பார்த்ததன் மூலம் கலைஞருடன் மேலும் நெருங்கிப் பழகுவதற்கான வாய்ப்பு கிடைத்தது என்றே சொல்ல வேண்டும். ஒன் றரை ஆண்டுகள், தினமும் பத்திலிருந்து பன்னிரண்டு மணி நேரம் அவருடன் சேர்ந்து பணியாற்றினேன்.

அந்தப் படத்தின் கதை விவாதத்திற்காக கலைஞர், இராம . நாராயணன், அமிர்தம் ஆகியோருடன் நானும் பெங்களூர் சென்றேன். கலைஞரின் மூத்த மகள் செல்வி வீட்டில் பதி னைந்து நாட்கள் தங்கி படத்தின் திரைக்கதை, வச னத்தை எழுதினோம்.

**கவிஞர் இளையபாரதி**



ஒருநாள், கலைஞர் பால்கனியில் அமர்ந்து ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கிறார். அவர் எழுதிய பச்சைக் கிளி என்ற கவிதையை அவரிடம் சொன்னேன். 'நீ போய் அந்த புத்தகத்தை எடுத்து வா' என்றார்.

கலைஞர் தங்கியிருந்த செல்வி அக்கா அறையில் இருந்து அந்தப் புத்தகத்தை எடுத்து வந்தேன். அப்போது இராம நாராயணனும் அமிர்தமும் மேலே வந்துவிட்ட னர். கவிதையை சத்தமாகப் படித்துக் காட்டச் சொன் னார். படித்ததை அமைதியாக கேட்டுக் கொண்டிருந்த வர், 'யோவ் உனக்கு ஒண்ணு தெரியுமா...? நான் உயிரோடு இருக்கும் வரை பாராட்டமாட்டாங்கயா...! இறந்த பிறகுதான்யா பாராட்டுவாங்க' என்றார்.

பிறகு, பாசக்கிளிகள் படத்தின் இசை வெளியீட்டு விழா வில் பேசிய கலைஞர், இந்த திரைப்படத்திற்காக என்று இல்லாமல்; சுமார் இருபது ஆண்டுகளாக, எப்போதும் என் உணர்வுகளைப் புரிந்து கொண்ட தம்பி இளைய பாரதி' என பாராட்டிப் பேசினார். இப்படி என் மீது மிகுந்த அன்பு.

ஒருமுறை, பாடல் எழுதுவதற்கு அவரிடம் டியூன் கொடுத்துவிட்டு, பேசிக் கொண்டே இருந்தேன். 'உனக்கு லேட்டாகிடுச்சி, வீட்டுக்குக் கிளம்பு" என்றார். அவரின் வீட்டுக்கு பின்புறம் உள்ள ஹோட்டலில் சாப்பிட உட்கா ருகிறேன் கலைஞரிடமிருந்து அழைப்பு. 'ஒரு இருபது நிமிடத்தில் உன்னால் திரும்பி வர முடியுமா? டியூனுக்கு ரெண்டு லைன் எழுதியிருக்கேன். அப்படியே சொல் றேன், எழுதிக்கிறியா என்றார்.

கல்லாவிலிருந்து டிஷ்யூ பேப்பரை எடுத்து அவர் சொன்ன ரெண்டு வரிகளையும் எழுதிக் கொண்டேன். ஆர்டர் பண்ணிய சாப்பாட்டை அப்படியேவிட்டு விட்டு அவரின் வீட்டுக்கு சென்றேன். குழந்தை மாதிரி, 'நீ சொன்ன டியூனுக்கு நான்கு வரி எழுதிட்டேன்யா... இது டியூனுக்கு வருகிறதா; பாடிக்காட்டு..., என்றார். பாடி னேன்.

மறுநாள் காலையில், கோபாலபுரம் செல்கிறேன், முதல்வர் ஸ்டாலின், துரைமுருகன், ஆற்காடு வீராசாமி என எல்லோரும் இருக்கிறார்கள். இரவு நடந்த விஷயத்தை அவர்களிடம் சொல்லி கிண்டல் செய்தார்.

2006 தேர்தலில் தி.மு.க. வென்றது. வாழ்த்து தெரிவிக்க பலரும் வர, அன்று ஒருநாள் முழுவதும் அவர் பின்னாடியே நின்றிருந்தேன். மாலை வாழ்த்து சொல்லிவிட்டு வந்தவன், பிறகு அவரிடம் பேசவே இல்லை. நான்கு நாள் கழித்து, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் தலைவராக இராம. நாராயணன் அறிவிக்கப்படுகிறார். அவருக்கு வாழ்த்து சொல்வதற் காக சொல்றேன்,

'தலைவரை நீங்க மூணு நாளா பார்க்கலயாமே? என்று கேட்டார்.

அவர் முதலமைச்சராகிட்டாரு. அவரைப் போய் எதுக்கு தொந்தரவு பண்ணனும்?" என்றேன். 'இல்லை... இல்லை அவர் உங்க மேல கோபமா இருக்கார். நீங்க இப்பவே போய் பாருங்க" என்றார்.

அமிர்தம் சாரை சென்று சந்தித்தேன்.

'தலைவர் உங்களை தேடிக்கிட்டு இருக்காரு. நீங்க என்ன பண்ணிட்டு இருக்கீங்க' என்றார். இருவரும் புறப் பட்டு, கோபாலபுரம் வீட்டிற்குச் சென்றோம். வீட்டின் உள் பகுதியில் உள்ள ஹாலில் இருவரும் பேசிக் கொண்டி ருக்கிறோம். ஒரு தேர்தல் பிரச்சார வேன் வந்து நின்றது கலைஞர் கீழே இறங்குகிறார். உச்சி வெயிலில், ரோட் டில் நின்றுகொண்டு வீட்டின் உள்ளே பார்த்தவர் 'நான் தேடிக் கொண்டிருந்த ஆள் இதோ இருக்கிறார்' என சொல்லிக் கொண்டே உள்ளே வந்தார்.

'என்னையா உன்னை மூணு நாளா ஆள காணோம். தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் செயலாளராக உன்னை நியமிக்கிறேன்' என்றார்.

ஆச்சர்யப்பட்டுப்போன நான், நீங்க எது சொன்னா லும் செய்கிறேன் என்றேன்.

அவரின் நேர்காணல் எல்லாம் தொகுக்கப்பட்டு, புத்தகமாக வெளிவர இருந்த நிலையில், என்னை அழைத்தார். 'நீ தான் ரொம்ப வித்தியாசமா யோசிப் பியே.... இந்த நேர்காணல் தொகுப்புக்கு ஒரு தலைப்பு சொல்!' என்றார்.

'மாலை சொல்கிறேன்' என கூறிவிட்டு, வீட்டிற்கு வந்து நூறு தலைப்புகளை எழுதி எடுத்துச் சென்றேன். அதில் எனக்கு பிடித்த தலைப்பைச் சொல்லி, 'நீங்கள் கடல் மாதிரி ஐயா, உங்களை அள்ளவும் முடியாது அளக் கவும் முடியாது, இந்தப் புத்தகத்திற்கு 'கையில் அள்ளிய கடல்" என்று பெயர் வைத்தால் நன்றாக இருக்கும்' என் றேன். அவருக்கும் பிடித்திருந் தது. எவ்வளவு பெரிய தலை வர், பாசமலர் படத்துக்குப் பெயர் வைத்தவர். தமிழ்நாட் டின் பல அடையாள சின்னங் களை உருவாகியவரின் புத்த கத்திற்கு நான் தலைப்பு வைத்ததை என்னவென்று சொல்வது.

கலைஞரைப் பற்றி ஏறக்குறைய ஐந்தாறு கவிதைகள் எழுதியிருக்கிறேன். எல்லா கவிதைகளையும் அவரே படித்து, முரசொலியில் வெளியிட்டிருக்கிறார். அவர் இருந் தபோதே புத்தகமாக வெளிவந்திருக்க வேண்டியது, ஆனால், இப்போதுதான் வெளிவர இருக்கிறது.

ஒருமுறை கலைஞரின் முழு வாழ்க்கையும் பேசும் கவிதை ஒன்று எழுதியிருந்தேன். முரசொலியில் முழு பக்க அளவில் அந்த கவிதை வெளிவந்தது.

நான் எழுதிய கவிதையைப் பலரிடம் காட்டி படித்துப் பார்க்கச் சொல்வார். சின்னத் திரை கலைஞர்கள் எல்லாம் கலைஞருக்குப் பாராட்டு விழா நடத்தினார்கள். அந்த அழைப்பிதழின் பின் அட்டையில் கவிதை யொன்று போடுவதற்கு நண்பர் விடுதலை கேட்டிருந் தார். கொடுத்தேன். அழைப்பிதழில் கவிதையை மட்டும் போட்டிருந்தார்கள், என் பெயரைப் போடவில்லை.

நிகழ்வு நடந்த நாள் அன்று, கலைஞர் அந்த அழைப் பிதழை அமிர்தம் சார் வீட்டிற்கு எடுத்து சென்றுள்ளார். கவிதையை அவரிடம் படித்து காட்டி, இது இளையபாரதி எழுதியது என்று சொல்லியிருக்கிறார். அதேபோல், என்னை திராவிட இயக்க கவிஞர் என பிரகடனப்படுத்தி யிருக்கிறார். இது மிகப்பெரிய அங்கீகாரம். கலைஞர் கிரிக்கெட் அபிமானி என்பது போல், செல்லப் பிராணிகள் அபிமானியும் கூட. பலவிதமான நாய்களை வளர்த்தவர்.

ஒருமுறை அவரை சத்திக்கச் சென்றேன். வீட்டின் வாயிற்படியில் சடையுடன் நாய் ஒன்று உட்கார்ந்து இருக்கிறது. கலைஞர் காரிலிருந்து இறங்கி வந்து, அந்த நாயிடம் என்னை அறிமுகப்படுத்தி வைக்கிறார். 'பாரதி, இந்த நாய் பெயர் கண்ணா. நான் சாப்பிட்டால்தான் இந்த நாய் சாப்பிடும், என் கார் சத்தம் கேட்டால் ஓடி வந்திடும்' என்றார். வீட்டிற்குள் அவர் முதலில் போக அவருக்குப் பின்னால் நாயும் அதற்குப் பின்னால் நானும் சென்றேன். உள்ளே சென்றதும் 'தென்பாண்டி சிங்கம்' சீரியலை பார்க்கத் தொடங்கினார். சீரியல் தொடங்குவதற்கு முன்னர், கலைஞர் பேசுவார். தொலைக்காட்சியில் கலைஞர் பேசுவதைப் பார்த்த அந்த நாய் பக்கத்திலிருந்த கலைஞரையும் பார்க்கிறது. தொலைக்காட்சியை யும் பார்க்கிறது. நாயின் தலையை கோதிவிட்டு, 'அப்பாவைப் பாரு... அப்பாவைப் பாரு' என்றார்.

இளகிய மனம் கொண்ட மனிதர், அவரின் முன்னால் யாராவது அழுது விட்டால், மனம் இரங்கிவிடுவார். கலைஞரிடம் இறுதிவரை அந்த ஈர இதயம் இருந்தது.

**-நன்றி**
**அந்திமழை**



கானா நாட்டின் தலைநகர் அக்ராவில் 66வது காமன்வெல்த் பாராளுமன்ற மாநாட்டில் தமிழ்நாடு கிளையின் பிரதிநிதியாக சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் கலந்து கொண்டார். மாநாட்டில் இந்திய வட்டாரப் பிரதிநிதிகளின் செயலாளராக தமிழ்நாடு சட்டமன்றச் செயலாளர் முனைவர் கி.சீனிவாசன் பங்கேற்றார்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தருமபுரி ஒருங்கிணைந்த மாவட்டத்தைச் சேர்ந்த 1500க்கும் மேற்பட்ட கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் விழா தருமபுரி ஜோதி மஹாலில் நடைபெற்றது. உடன் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தருமபுரி கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி, மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன், முன்னாள் மாவட்டக் கழகச் செயலாளர் பி.என்.பி.இன்பசேகரன், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் டி.என்.வி.எஸ்.செந்தில்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.ஜி.சேகர் மற்றும் பலர் கலந்து கொண்டனர். முன்னதாக தருமபுரி கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி வழிகாட்டுதலின்படி கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.ஜி.எஸ்.வெங்கடேஸ்வரன் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு வெள்ளி வீரவாள் மற்றும் கேடயத்தை வழங்கினார்.

### வெளிநாடு வாழ் தமிழர்களுக்கு ஏராளமான உதவிகளை செய்பவர் முதல்வர்!

# உலகத்தில் வாழும் தமிழர்களை ஒன்றிணைக்க நடவடிக்கை!

## தென்னாப்பிரிக்க தமிழ்ச் சங்கத்தில் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு பேச்சு!

அக்ரா, அக். 4 -

அக்டோபர் 3ஆம் தேதி முதல் 5ஆம் தேதி வரை கானா நாட்டின் தலைநகர் அக்ராவில் 66வது காமன் வெல்த் பாராளுமன்ற மாநாட்டில் தமிழ்நாடு கிளையின் பிரதிநிதியாக சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் கலந்து கொண்டார். மாநாட்டில் இந்திய வட்டாரப் பிரதிநிதிகளின் செயலாளராக தமிழ்நாடு சட்டமன்றச் செயலாளர் முனைவர் கி.சீனிவாசன் பங்கேற்கிறார்.

முன்னதாக, எகிப்து, தென்னாப்பிரிக்கா நாடுகளில் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். தென்னாப்பிரிக்க ஜோகன்ஸ்பெர்க் இந்திய தூதரக அலுவலகத்தில் உள்ள கூட்ட அறையில், தென்னாப்பிரிக்க வாழ் தமிழ் கூட்டமைப்பு சார்பில் நடத்தப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சியில் பேரவைத் தலைவர் மு. அப்பாவு அவர்கள், 1.10.2023 அன்று மாலை 5 மணியளவில் கலந்து கொண்டார்கள். பேரவைச் செயலாளர் முனைவர் கி. சீனிவாசன் மற்றும் தென்னாப்பிரிக்க வாழ் தமிழ் கூட்டமைப்பு தலைவர் சசிகுமார் கலந்து கொண்டார்கள்.

அந்த நிகழ்ச்சியில் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் பேசியதாவது: -

தென்னாப்பிரிக்காவுடன் தமிழ் உறவு எப்படி 1694 ஆம் ஆண்டில் தொடங்கி, இன்று வரை உள்ள நிகழ்வுகள் குறித்து சீனிவாசன் தனது உரையில் குறிப்பிட்டார். அதில் 2 முக்கியமான விஷயங்கள். ஒன்று அடிமைப்படுத்துவதை ரத்து செய்யும் சட்டம், இன்னொன்று ஒப்பந்தத் தொழிலாளர் முறையை ரத்து செய்யும் சட்டம். முதன்முதலில் சென்னையில் இருந்து தான் கப்பலில் தொழிலாளர்களை அழைத்து வந்து ஒப்பந்தத் தொழிலாளர்களாக ஆக்கினார்கள். அது மட்டுமல்ல, கூலி என்ற கடினமான வார்த்தையைப் பயன்படுத்தி, அழைத்தார்கள். அதையெல்லாம் தாண்டி வந்து இன்று இந்நாட்டின் குடியுரிமையைப் பெற்றுள்ளீர்கள். சிலர் நம் நாட்டில் இருந்து வந்து போயிருக்கிறீர்கள்.

நீங்கள் இங்கு பலவிதமான பிரச்னைகளை சந்தித்து, அவற்றை கடந்து வந்து நிமிர்ந்து நிற்கிறீர்கள் என்றால், அதற்கு உங்கள் பழக்க வழக்கம், ஒழுக்கம், தைரியம், அறிவு, திறமை ஆகியவைதான் காரணம். இப்போது, 'நான் தமிழன், இந்தியன்' என்று சொல்லி பெருமைப்பட்டு கொள்வதற்கு முக்கிய காரணம் உங்களின் உழைப்புதான். மற்ற நாடுகளில் நமக்கு உள்ள நெருங்கிய உறவு போல், நம்நாட்டுடன் இல்லையே என்ற வருத்தம் உங்களுக்கு இருக்கிறது.

உங்களுக்கு ஒரு விஷயம் தெரியும் என்று நினைக்கிறேன். 2011 ஆம் ஆண்டு மார்ச் 1 ஆம் தேதி அன்று, மறைந்த கலைஞர் ஆட்சியின் போது, வெளிநாடு வாழ் தமிழர் நல வாரியம் அமைப்பதற்காக ஒரு சட்டம் கொண்டு வந்தார். ஆனால், ஆட்சி மாற்றத்தின் காரணமாக அப்போது அது நிறைவேற்றப்படாமல் கிடப்பிலே போடப்பட்டது.

இன்றைய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, முதன் முதலில் கொரோனாவை ஒழிக்க முயற்சிகளை மேற்கொண்டார். அத்தோடு சேர்த்து, பிறநாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கிற தமிழர்கள் பட்ட கஷ்டங்களை அறிந்து அவர்களை எவ்வாறு தமிழ்நாட்டுக்கு அழைத்து வர முடியும் என்று அவர் எடுத்த முயற்சிகளை நாடு அறியும்.

நமது முதலமைச்சர் அவர்கள், கொரோனா காலத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போது, மகாராஷ்டிராவில் முதலமைச்சராக இருந்த சிவசேனா கட்சித் தலைவர் உத்தவ் தாக்கரே அவர்களை, இப்போது அயலக அணியில் இருக்கும் மீரான் மூலமாக தொடர்பு கொண்டு, மும்பையில் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த தமிழர்களை விரைவாக தமிழ்நாட்டுக்கு அழைத்து வர தேவையான ரயில் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தார். இப்போது நமது முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அரசு, வெளிநாடுகளில் வசிக்கும் தமிழர்களுக்கு கல்வி, தொழில் போன்ற தேவைகளை அறிந்து பல சட்டத் திட்டங்களை உருவாக்கி இருக்கிறது. உதாரணத்திற்கு ஒன்றைச் சொன்னால், ஒரு காலத்தில் எங்கள் பகுதியில் இருந்து வெளிநாடுகளுக்கு வேலைக்கு செல்பவர்கள், ஏதேனும் பிரச்னையில் சிக்கி 10 ஆண்டு, 2 ஆண்டு சிறையில் இருப்பார்கள். ஆனால், அந்த விவரம் அவர்களது குடும்பத்திற்கு தெரியாது. அதே போல், வெளிநாட்டில் ஒரு தமிழர் இறந்துவிட்டால் அந்த உடலை எடுத்து வருவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க ஆள் இல்லாமல் 6 மாதமாக கூட அங்கேயே இருக்கும்.

ஆனால், இப்போது அப்படி அல்ல. நமது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், வெளிநாடு வாழ் தமிழர்நலனுக்காக அமைச்சர் செஞ்சி மஸ்தான் அவர்களை நியமித்து, அயலக தமிழர் நல வாரியம் அமைத்து, 3 நாட்களில் இறந்தவர் உடலை கொண்டு வந்து அந்த குடும்பத்திடம் சேர்க்கப்படுகிறது. வெளிநாட்டில் ஒருவர் இறந்து விட்டால், தமிழ்நாடு அரசுக்கு ஒரு வாட்ஸ் அப் மெசேஜ் அனுப்பினால் போதும். அல்லது முதலமைச்சருக்கு வாட்ஸ் அப் மெசேஜ் போட்டால் போதும். அதிகபட்சம் 3 நாட்களில் அந்த உடல் கொண்டு வரப்பட்டு, அவரது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்படும்.

### குழந்தைகளின் படிப்புச் செலவு!

மேலும், அந்த குடும்பத்தில் குழந்தைகளின் படிப்புச் செலவு, திருமணச் செலவை முதலமைச்சரே ஏற்றுக் கொள்கிறார். வேலைவாய்ப்பு உள்பட மற்ற உதவிகளையும் செய்து தருகிறார்.

உக்ரேனில் கலவரம் அதிகரித்து நம்முடைய தமிழ் மாணவர்கள் பாதிக்கப்பட்டபோது, விமானச் செலவை அரசே ஏற்கும் எனத் தெரிவித்து, அடுத்த விமானத்தில் 80 சதவிகித மாணவர்கள் வந்தார்கள் என்றால், தமிழர்களுக்கு உலகத்தில் எங்கு பாதிப்பு ஏற்பட்டாலும் உரக்கக் குரல் கொடுத்து, நிறைவேற்றித் தர கேட்கக்கூடிய தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள். எங்களைப் புறக்கணிக்கிறீர்கள் எனச் சுட்டிகாட்டி கேட்பதற்கு ஒரு நபர் இருந்தால்தான் நமக்கு, தமிழர்களுக்கு பாதுகாப்பு. இந்த பாதுகாப்பினை அளிப்பவர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள். இங்கே ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், உங்களுக்கு ஏதேனும் பிரச்சினை என்றால் அதனைக் கேட்பதற்கு உங்களைப் பாதுகாப்பதற்கு உள்ளவர்தான் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள்.

அயலகத் தமிழர் தினம், 12 ஆம் தேதி சனவரி மாதம், ஆண்டுதோறும் கொண்டாடும் வகையில் அறிவிப்பு செய்து, முதன் முதலாக நம்முடைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால், கலைவாணர் அரங்கத்தில், இந்த தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

கனடா நாட்டில் உள்ள 140க்கும் மேற்பட்ட தமிழ்ச் சங்கங்களை ஒருங்கிணைத்து வீடியோ கான்பரன்ஸ் மூலமாக தொடர்பு கொண்டு, தமிழ்ச் சொந்தங்களோடு உரையாற்றினார். மேலும், தமிழகத்தில் தொழில் தொடங்க முனைவோர்களுக்கு ஊக்கமளித்து, எளிதாக தொழில் தொடங்க உத்தரவிட்டுள்ளார்கள்.

உலகம் முழுவதும் 30 நாடுகளில் தமிழர்கள் அதிகமாக வசிக்கிறார்கள். 60 நாடுகளில் குறைந்த அளவு தமிழர்கள் வசிக்கிறார்கள். அவர்கள் அனைவரையும் ஒன்றிணைக்கவேண்டும் என்று முதலமைச்சர் விரும்புகிறார். அயலக தமிழர் நல வாரியத்தில் வெளிநாடுகளில் வசிக்கும் அனைவரும் உறுப்பினராக வேண்டும். அப்படி உறுப்பினரானால், உங்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் முதலமைச்சர் செய்து தருவார்.

தென்னாப்பிரிக்காவில் உள்ள தமிழர்கள் மட்டுமல்ல, அகில உலகத்திலும் வாழும் தமிழர்களை ஒன்றிணைக்கும் வகையில் நடவடிக்கை எடுத்து உள்ளார்கள்.

அமெரிக்க வாழ் தமிழர்களின் குழந்தைகள் கல்வி பயில சகோதரி கனிமொழி எனும் அம்மையார் வாரத்திற்கு 2 நாட்கள் தமிழ் பயிற்றுவிக்கிறார். அதற்கான அத்தனை வசதிகளையும் முதலமைச்சர் செய்து தந்துள்ளார்கள். அதே போல தென்னாப்பிரிக்காவிலும் ஏற்பாடு செய்ய முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்கிறேன்.

பிறநாடுகளில், பிறமாநிலங்களில் ஒரு குறிப்பிட்ட சமூகத்தினர் படித்திருப்பார்கள். தமிழ்நாட்டில் அப்படி அல்ல. எல்லா சமூகத்தினரும் படித்திருப்பார்கள். அங்கு சாதி, மத வேறுபாடுகள் இருக்காது. பிரதமர் மோடி அவர்கள் ஒன்றை சொன்னார்கள். இந்தியாவில் படித்தவர்களின் எண்ணிக்கையை 2035 ஆம் ஆண்டுக்குள் 50 சதவீதமாக ஆக்குவோம் என்றார். இப்போது இந்தியாவில் படித்தவர்களின் சராசரி விகிதம் 34 சதவீதம். அதே சமயம், தமிழ்நாட்டில் படித்தவர்களின் விகிதம் 51 சதவீதம். இன்னொரு புள்ளி விவரத்தையும் சொல்கிறேன். பெண்களில் படித்தவர்கள் சராசரி இந்திய அளவில் 26 சதவீதம். ஆனால், தமிழ்நாட்டில் 72 சதவீத பெண்கள் படித்திருக்கிறார்கள். இதற்கு காரணம், மறைந்த தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

ஒரு காலத்தில் பெண்களை படிக்க அனுமதிக்க மாட்டார்கள். 5 வயதில் திருமணம் முடித்து வைத்து விடுவார்கள். கணவன் இறந்து விட்டால், மொட்டை அடித்து வீட்டுக்குள் அடைத்து வைப்பார்கள். ஆனால், திராவிட இயக்கங்கள் அதை மாற்றி, பெண்களுக்கு சமஉரிமை பெற்று தந்தன. கலைஞர் ஆட்சியில் இருந்தபோது, பெண்களுக்கு 8 ஆம் வகுப்பு வரை படித்தால், 6 ஆயிரம் ரூபாய், 10 வரை படித்தால் 10 ஆயிரம் ரூபாய், 12 வரை படித்தால் 25 ஆயிரம் ரூபாய் என்று உதவித் தொகை அளித்து, பெண்கள் அனைவரையும் படிக்க வைத்தார்.

இப்போது நமது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அந்த திட்டத்தை மாற்றி, புதுமைப் பெண் திட்டத்தைக் கொண்டு வந்துள்ளார். அதன்படி, பெண்கள் பட்டப்படிப்பில் சேர்ந்தால் அவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

இவ்வாறு சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு உரையாற்றினார்.

## எழும்பூரில் மருத்துவ முகாம்!

சென்னை, அக். 04-


எழும்பூர் தொகுதி 99வது வார்டு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கையை முன்னிட்டு பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் கட்டணமில்லா மருத்துவ முகாம் தமிழக முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க இந்துசமய மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதலுடன் சென்னை மாநகராட்சி நியமனக் குழு உறுப்பினர் 78வது மாமன்ற உறுப்பினர் எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர் சொ.வேலு ஆலோசனையின்படி 99வது வார்டு மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் பரிதி இளம் சுருதி - தலைமையில் 99- (அ) வட்ட செயலாளர் சி. சேகர், 99வது வட்டச் செயலாளர் ஆர்.எம்.ரங்கநாதன் ஆகியோர் முன்னிலையில் மருத்துவ முகாம், கொசு ஒழிப்பு பணிகள், தூய்மை பணிகள் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மண்டலம் - ச.சுகாதார அலுவலர் மருத்துவர் ஷீலா சுகாதார அலுவலர் விஜயகுமார், சுகாதார அலுவலர் 99வார்டு - சதீஷ், 99வது வார்டு துப்புரவு ஆய்வாளர் கிருஷ்ண மூர்த்தி, மேஸ்திரி கிருபா, பி.குமார், ஏசுதானம் மற்றும் ஊர் பொதுமக்களும் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

### பெருந்தலைவர்

# காமராசரின் அளப்பரிய பணிகளை நினைவு கூர்வோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!



சென்னை, அக்.4-

அக்.2-பெருந்தலைவர் காமராசரின் நினைவு நாளில், அவர் ஆற்றிய அளப்பரிய பணிகளை நினைவு கூர்வோம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

பெருந்தலைவர் காமராசர் அவர்களின் நினைவு நாளையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**விடுதலை இந்தியாவில் தொடக்கக்கல்விக்கான மிக வலிமையான அடித்தளத்தைத் தமிழ்நாட்டில் அமைத்த முன்னோடி முதலமைச்சரும், மிகச் சிறந்த காந்தியப் பற்றாளருமான பெருந்தலைவர் காமராசர் அவர்களின் நினைவுநாளில் விடுதலைப் போராட்ட வீரராகவும் அரசியல் தலைவருமாக அவர் ஆற்றிய அளப்பரிய பணிகளை நன்றியோடு நினைவு கூர்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### மதுவிலக்கு அமலாக்கப் பணியில் சிறப்பாகச் செயல்பட்ட

# ஐந்து காவல்துறை அதிகாரிகளுக்கு 'காந்தியடிகள் காவல் விருது'!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, அக்.4 -**

**மதுவிலக்கு அமலாக்கப் பணியில் சிறப்பாகச் செயல்பட்ட ஐந்து காவல் துறை அதிகாரிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், 'காந்தியடிகள் காவல் விருது' அறிவித்துள்ளார்.**

இது தொடர்பான அரசின் செய்திக்குறிப்பு வருமாறு:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மதுவிலக்கு அமலாக்கப் பணியில் பாராட்டத்தக்க வகையில் பணியாற்றியமைக்காக கோ.சசாங்சாய், காவல் கண்காணிப்பாளர், விழுப்புரம் மாவட்டம், ப.காசிவிஸ்வநாதன், காவல் துணைக்கண்காணிப்பாளர், மத்திய நுண்ணறிவுபிரிவு, தெற்கு, சென்னை, கா.மு.முனியசாமி, காவல் ஆய்வாளர், செங்குன்றம் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, ஆவடி காவல் ஆணையரகம், அ.பாண்டியன், காவல் உதவி ஆய்வாளர், மத்திய நுண்ணறிவு பிரிவு, மதுரை மண்டலம் மற்றும் ஜெ.ரங்கநாதன், தலைமை காவலர் 318, இராணிப்பேட்டை காவல் நிலையம், அயல்பணி மத்திய நுண்ணறிவுப் பிரிவு, இராணிப்பேட்டை ஆகியோருக்கு காந்தியடிகள் காவலர் விருது வழங்க உத்தரவிட்டுள்ளார்கள்.

இவ்விருது, முதலமைச்சர் அவர்களால் 2024-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26-ஆம் நாள், குடியரசு தினத்தன்று வழங்கப்படும். இவ்விருதுடன், பரிசுத்தொகையாக ரூ.40,000/ ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நாமக்கல் கிழக்கு மாவட்ட

# தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் மூவர் கூடைப்பந்து போட்டி!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி பரிசு வழங்கினார்!

நாமக்கல் அக். 04-

நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் நடைபெற்ற மூவர் கூடைப்பந்து போட்டியில், வெற்றி பெற்ற வீரர்களுக்கு, நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கோப்பையை வழங்கினார்.

நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக விளையாட்டு மேம்பாட்டு அணி மற்றும் நாமக்கல் மாவட்ட கூடைப்பந்து சங்கம் சார்பில், புதிய முறையிலான மூவர் கூடைப்பந்து போட்டிகள், நாமக்கல் தெற்கு அரசு மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் 2 நாட்கள் நடைபெற்றது. புதிய முறையில் ஒரு அணிக்கு மூவர் மட்டுமே கலந்து கொள்ளும் வகையில், அரை மைதானத்தில் இந்த போட்டிகள் நடைபெற்றன. ஒரு போட்டிக்கு 10 நிமிடங்கள் மட்டுமே ஒதுக்கப்பட்டது. நாமக்கல், சேலம், ஈரோடு, கரூர் ஆகிய 4 மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 700 மாணவ-மாணவிகள் மற்றும் கூடைப்பந்து வீரர்கள் வீராங்கனைகள் போட்டியில் கலந்து கொண்டுவிளையாடினர். போட்டிகளை நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம் துவக்கி வைத்தார்.

நிறைவு விழாவிற்கு மாவட்ட கூடைப்பந்து சங்க தலைவர் நடராஜன், பொருளாளர் ஜெகதீசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்வில் நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தலைமை வகித்து, வெற்றி பெற்ற அணிகளுக்கு கோப்பைகளையும், சான்றிதழ்களையும் வழங்கினார். சிறந்த வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில், மாவட்டக் கழக அவைத்தலைவர் சி.மணிமாறன், நகர கழகச் செயலாளர் ராணா ஆனந்த், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சி.விஸ்வநாத், நகர்மன்றத் தலைவர் து.கலாநிதி, துணைத் தலைவர் செ.பூபதி, மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர் தீபக், மாவட்ட விளையாட்டு அணி துணை அமைப்பாளர்கள் பிரபு, சுரேஷ்குமார், ஜெயசீலன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மாவட்ட கழக விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் முரளி, கூடைப்பந்து சங்க நிர்வாகிகள் ஜெகதீசன், ஜீவா, சிவக்குமார் ஆகியோர் போட்டிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.




காந்தி ஜெயந்தியை முன்னிட்டு கடலூர் மாவட்டம் மேல் புவனகிரி ஒன்றியம் லால்புரம் ஊராட்சியில் கிராம சபை கூட்டம் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் அருண்தம்புராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் ராஜசேகரன், ஊராட்சி மன்றத் தலைவர், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிராம பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.



உத்தமர் காந்தியடிகள் அவர்களின் 155–வது பிறந்த நாளையொட்டி தமிழ்நாடு அரசின் சார்பில் 2.10.2023 அன்று சென்னை, எழும்பூர், அரசு அருங்காட்சியக வளாகத்தில் அமைந்துள்ள உத்தமர் காந்தியடிகளின் திருவுருவச் சிலைக்கு அருகே வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி அவர்களும், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். இந்த நிகழ்வின்போது, நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, பொதுப் பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், த.வேலு, ஏ.எம்.வி.பிரபாகரராஜா, துணை மேயர் மு.மகேஷ்குமார், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைச் செயலாளர் மரு.இரா. செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் த.மோகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



உத்தமர் காந்தியடிகள் அவர்களின் 155வது பிறந்த நாளையொட்டி தமிழ்நாடு அரசின் சார்பில் 2.10.2023 அன்று சென்னை, எழும்பூர், அரசு அருங்காட்சியக வளாகத்தில் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்களும், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும் மலர் தூவி மரியாதை செலுத்தி, சர்வோதயா சங்கத்தினர் நிகழ்த்திய நூற்பு வேள்வி மற்றும் காந்திய இசை பாடல் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்கள். இந்த நிகழ்வின்போது, நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், உயர்கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.கிரிராஜன், சட்ட மன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், த.வேலு, ஏ.எம்.வி. பிரபாகரராஜா, துணை மேயர் மு.மகேஷ்குமார், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைச் செயலாளர் மரு.இரா.செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் த.மோகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு,

# புகழ்பெற்ற ‘தி எகனாமிஸ்ட்’ ஆங்கில இதழ் பாராட்டு!

### ‘கவர்ச்சி அரசியல் செய்வதை விட பட்டறிவின் அடிப்படையில் சிக்கல்களை அணுகுகிறார்!’ - எனப் புகழாரம்!

உலகின் தலைசிறந்த பத்திரிக்கைகளில் ஒன்றாகக் கருதப்படும் “தி எகனாமிஸ்ட்” 177 ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்டது. அரசியல், வணிகம், தொழில்நுட்பம் என பல்வேறு தளங்களில் கட்டுரைகள் வெளியிடும் “தி எகனாமிஸ்ட்” இதழுக்கு உலகம் முழுக்க 16 லட்சத்திற்கும் மேற்பட்ட சந்தாதாரர்கள் இருக்கின்றார்கள்.

இப்படி பல பெருமைகளைக் கொண்ட “தி எகனாமிஸ்ட்” இதழில், ஒரு முழுப் பக்க அளவில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறித்தும் - அவரது அரசின் செயல்பாடுகள் குறித்து புகழ்ந்தும் கட்டுரை வெளியாகியுள்ளது.


“Meet the Dravidan stalin” என்னும் தலைப்பில் வெளிவந்துள்ள கட்டுரை, “இந்தியாவின் தலைவரான பிரதமர் மோடி அளிக்காத செயல்திறனை வழங்கும் தமிழ்நாட்டின் தலைவர்” என மு.க.ஸ்டாலின் அவர்களை புகழ்ந்து உள்ளது.




சோவியத் ஒன்றியத்தின் தலைவராக இருந்த ஜோசப் ஸ்டாலின் இறந்த அதே வாரத்தில் பிறந்த தனது மகனுக்கு அவரது நினைவாக ஸ்டாலின் என கலைஞர் பெயர் சூட்டியது குறித்து அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. மு.க.ஸ்டாலின் கவர்ச்சி அரசியல் செய்வதை விட, பட்டறிவின் அடிப்படையில் பொருத்தமான முறையில் சிக்கல்களை அணுகுவதாக அந்தக் கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

நோபல் பரிசு பெற்ற எஸ்தர் டஃப்லோ மற்றும் பிரதமர் மோடி அரசின் பொருளாதாரக் கொள்கைகளுடன் மாற்றுக் கருத்துக் கொண்ட ரகுராம் ராஜன் உள்ளிட்ட ஐந்து பொருளாதார அறிஞர்கள் கொண்ட பொருளாதார ஆலோசனைக் குழு; மாநிலத்தின் வளர்ச்சிக்காக அமைக்கப் பட்டதைக் குறிப்பிட்டுள்ள “தி எகனாமிஸ்ட்”, இந்த நியமனங்கள் பிரதமர் மோடிக்கும், முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கும் இடையேயான வேறுபாட்டை காட்டும் வகையில் உள்ளதாகத் தெரிவித்துள்ளது. ஒன்றிய பா.ஜ.க. அரசு மற்றும் பிரதமர் மோடியின் அதிகாரப் பரவலாக்கும் முயற்சிகளுக்கு எதிரான எதிர்க்கட்சிகளின் முகமாக மு.க.ஸ்டாலின் அவர்கள் உள்ளதாகவும், எதிர்வரும் 2024 நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் பிரதமர் மோடியை எதிர்த்துக் களம் இறங்கப் போவது யார் என்ற கவனம் மு.க.ஸ்டாலின், மம்தா பானர்ஜி, பினராயி விஜயன் ஆகியோர் மீது விழுந்து உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




1990-ஆம் ஆண்டுகளில் சென்னையின் மேயராகப் பதவியேற்றதிலிருந்தே மக்களின் மனதில் தனக்கென ஒரு இடத்தை மு.க.ஸ்டாலின் பிடிக்கத் தொடங்கிவிட்டதாக அதில் கூறப்பட்டுள்ளது.

கொரோனா தொடர்பாக அமைக்கப்பட்ட சட்டமன்றக் கட்சி பிரதிநிதிகளின் குழுவில் முந்தைய அ.தி.மு.க. அரசின் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சராக இருந்த விஜயபாஸ்கரை இணைப்பதன் மூலம் - ஒரு சிறந்த நடைமுறையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உருவாக்கி உள்ளதாகவும் “தி எகனாமிஸ்ட்” புகழாரம் சூட்டியுள்ளது.

ஒடிசா தலைநகர் புவனேஸ்வரில் நடைபெற்ற - 17 வயதுக்கு உட்பட்டோருக்கான

## தேசிய மகளிர் கால்பந்து போட்டியில் - தமிழ்நாடு அணிக்கு வெள்ளிப் பதக்கம்!

### இளைஞர் நலன் - விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, அக். 4 -

ஒடிசா மாநிலம் புவனேஸ்வரில் 2023 செப்டம்பர் 20 முதல் 30 வரை 16 மாநிலங்கள் பங்கேற்ற ஹீரோ ஜூனியர் தேசிய சாம்பியன்ஷிப் 17 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவு போட்டிகள் நடைபெற்றது.

இந்தப் போட்டியின் (TIER1) இறுதி ஆட்டத்தில் தமிழ்நாடு மற்றும் மணிப்பூர் மாநில அணிகள் விளையாடின.

இதில் 1:0 என்ற கோல் கணக்கில் மணிப்பூர் அணி முதலிடம் பெற்றது.

தமிழ்நாடு அணி சிறப்பாக விளையாடி இரண்டாவது இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தை வென்றது.

இந்தப் போட்டியில் பங்கேற்ற தமிழ்நாடு அணியில் - தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் விளையாட்டு விடுதி. நாமக்கல் மாவட்ட வீராங்கனைகள் 5 பேர், ஈரோடு மற்றும் திண்டுக்கல் மாவட்ட வீராங்கனை கள் 2 பேர் இடம் பெற்றிருந்தனர்.

மேலும் வீராங்கனைகளுக்கு பயிற்சி அளித்த பயிற்றுநர் அபர்ணா, மேலாளர் அஷ்வினி ஆகியோரும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தைச் சார்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு ஜூனியர் பெண்கள் கால்பந்து அணிக்கு தனது வாழ்த்துக்களை “X” ட்விட்டர் தளத்தில் பதிவு செய்துள்ளார்.

அப்பதிவு வருமாறு : -

“ஒடிசா தலைநகர் புவனேஸ்வரில் நடைபெற்ற 17 வயதுக்கு உட்பட்டோருக்கான தேசிய மகளிர் கால்பந்து போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற தமிழ்நாடு அணிக்கு வாழ்த்துகள்.

இறுதிப்போட்டியில் விளையாடிய 7 வீராங்கனையர் அவர்களின் பயிற்சியாளர் சகோதரி அபர்ணா மேலாளர் சகோதரி அஷ்விணி ஆகியோர் தமிழ்நாடு விளையாட்டு ஆணையத்தை சார்ந்தவர்கள் என்பது கூடுதல் மகிழ்ச்சி.

நம் வீராங்கனையர் இன்னும் பல உயரங்களைத் தொட தமிழ்நாடு அரசு உறுதுணையாக இருக்கும்”.

இவ்வாறு அப்பதிவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## அண்ணல் மகாத்மா பிறந்தநாளில் - வெறுப்புணர்வை ஒழித்து-

## எல்லாருக்கும் எல்லாம் என்ற இந்தியாவைக் கட்டமைப்போம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!



சென்னை, அக். 4-

நமது தேசத் தந்தை காந்தியாரின் பிறந்த நாளில், அவரது தியாகத்தை நினைவு கூர்ந்து, வெறுப்புணர்வை ஒழித்து - எல்லார்க்கும் எல்லாம் என்ற இந்தியாவைக் கட்டமைப்போம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

உத்தமர் காந்தியடிகள் அவர்களின் 155வது பிறந்த நாளையொட்டி, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**அரையாடை அணிந்து ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வென்ற போராளி! வெறுப்புணர்வுக்கு எதிராக ஒற்றை மனிதராக நின்று சமூகத்தில் அமைதி மலரப் பாடுபட்டவர்!**

**அவரது வாழ்வின் பொருளை உணர்த்தவே, இந்த நாட்டிற்கே 'காந்தி தேசம்' எனப் பெயரிட வேண்டும் எனத் தந்தை பெரியார் வலியுறுத்தினார்.**

**அண்ணல் என்றும் மகாத்மா என்றும் இந்த நாடும் பாரும் போற்றும் நமது தேசத் தந்தை காந்தியாரின் பிறந்தநாளில், அவர் தியாகத்தை நினைவுகூர்ந்து, அவரது இலட்சியப் பாதையில் வெறுப்புணர்வை ஒழித்து, எல்லார்க்கும் எல்லாம் என்ற இந்தியாவைக் கட்டமைப்போம்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## குவைத்தில் கழக முப்பெரும் விழா - விருதுகள் வழங்கல்!

### மருத்துவர் சாந்தமூர்த்தி - சரவணன் - காளிதாசன் பங்கேற்பு!

*குவைத், அக். 4-*

*அயலக திராவிட முன்னேற்ற கழகம், குவைத் தளபதி பேரவை சார்பில் கழகத்தின் முப்பெரும் விழா, முருகாப் பாலிவுட் உணவகத்தில் கழகத்தின் மூத்த உடன்பிறப்புகளுக்கும், சிறந்த சமூக சேவகருக்கும், சிறந்த மருத்துவ சேவைக்கான விருதும் வழங்கப்பட்ட திருவாளர்கள் முகமது ஹக்கீம், கடியாவயல் கருப்பையா, பழனி நல்லரசு, சரவணராஜ், குடந்தை முகமது ரபிக், வேணாடு பெர்வின் சுதர், தமிழ் மக்கள் சேவை மையம் அலிபாய், டேவிட் திவாகர் ஆகியோருக்கு விருதுகள் வழங்கி சிறப்பிக்கப்பட்டது.*

*நிகழ்வில் தலைமை அவைத் தலைவர் மருத்துவர் சாந்தமூர்த்தி, ஒருங்கிணைப்பாளர் பட்டுக்கோட்டை சரவணன் ஒருங் கிணைப்பில் முன்னிலை துணைப் பொருளாளர் காளிதாசன், தொண்டரணி, தொழிலாளர் அணி செயலாளர் புல்லட் ராமதாஸ், ஆறாம் பண்ணை ஷேக், மண்டலம் மதிவாணன், உ.கு.சிவக்குமார், கடியா வயல் கருப்பையா, ஷேக் கான் நபீஸ், ம.தி.மு.க. மணிவாசகம், சமூக ஆர்வலர் முகமது, உதயநிதி ரசிகர் மன்றம் ஈரோடு முஸ்தபா, கூட்டணி கட்சி நிர்வாகிகள் ம.தி.மு.க., இந்திய தேசிய காங்கிரஸ், வி.சி.க., மா.ஜா.க., சி.பி.எம்., சி.பி.ஐ., தமிழ் மக்கள் சேவை மையம் நிர்வாகிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள், நிர்வாகிகள் நூற்றுக்கும் மேற்பட்ட உடன் பிறப்புகள் கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தனர்.*

*நன்றி உரை: காசி ராமலிங்கம். வருகை தந்த அனைவருக்கும் உணவு உபசரிப்புடன் விழா இனிதே நிறைவுற்றது.*

## ஆசிய விளையாட்டுப் போட்டிகளில்

## பதக்கம் வென்றவர்களுக்குப் பாராட்டுகள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, அக். 4-

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றவர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில், பாராட்டு தெரிவித்துள்ளார்.

ஆசிய விளையாட்டுப் போட்டிகள் 2023இல் பதக்கம் வென்றவர்களை பாராட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**ஆசிய விளையாட்டுப் போட்டிகள் 2023இல் துப்பாக்கி சுடுதல் (ஆடவர் ட்ராப்) பிரிவில் தங்கப் பதக்கம் வென்று இந்தியாவைப் பெருமைப்படுத்தியுள்ள நம் தமிழ்நாட்டைச் சேர்ந்த ப்ரித்விராஜ் தொண்டைமான் அவர்களுக்கு என் பாராட்டுகள்.**

**மேலும் ஆடவர் இரட்டையர் டென்னிஸ் பிரிவில் வெள்ளி பதக்கம் வென்றதற்காகத் தமிழ்நாட்டைச் சேர்ந்த மற்றுமொரு திறமையாளரான ராம்குமார் ராமநாதன் அவர்களுக்கும் என் வாழ்த்துகள்.**

**ஸ்குவாஷ் விளையாட்டில் மகளிர் பிரிவில் வெண்கலம் பதக்கம் வென்றுள்ள நமது தமிழ்நாட்டு வீராங்கனைகள் ஜோஷ்னா சின்னப்பா மற்றும் தீபிகா பல்லிகல் ஆகியோருக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# திராவிடப் போராளிகள்

37 ■ வழக்கறிஞர் அருள்மொழி

**மறைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...**




# வீராங்கனை ‘அன்னை’!

1953-ஆம் ஆண்டு, சென்னை மாகாணத்தின் முதலமைச்சராயிருந்த ராஜகோபாலாச்சாரியார் குலக்கல்வித் திட்டத்தைப் பகுதி நேரப் பள்ளி/வேலைத்திட்டம் என்ற பெயரில், தொடங்குவதாக அறிவித்தார். இன்றைய பாரதிய ஜனதா கட்சி அரசின் **‘விஸ்வகர்ம யோஜனா’** திட்டத்துக்கே முன்னோடியாக அந்த அறிவிப்பு இருந்தது. அதனை எதிர்த்து தந்தை பெரியாரின் தலைமையில் திராவிடர் கழகமும், பேரறிஞர் அண்ணாவின் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகமும் களப் போராட்டத்தில் இறங்கின.

ஜூலை மாதம் 13-ஆம் தேதி ராஜகோபாலாச்சாரியார் வீட்டின் முன் ஈ.வெ.கி.சம்பத் அவர்கள் தலைமையில் மறியல் போராட்டம் நடத்தப்படும் என முடிவு செய்து அறிவித்துவிட்டார் அண்ணா. ஆனால், காவல்துறை முன்கூட்டியே, நாவலர் நெடுஞ்செழியன், சம்பத், மதியழகன், என்.வி.நடராசன் ஆகியோரைக் கைது செய்துவிட்டது. அண்ணாவும் கைது செய்யப்பட்டார்.

அந்த நிலையில், “ஆச்சாரியார் வீட்டு முன்பு அறப்போர் துவங்க இருந்த சம்பத் சிறை செல்கிறார். அந்தப் பொறுப்பினை தோழியார் சத்தியவாணி முத்து அவர்கள் ஏற்று நடத்துவார்கள்” என்று அண்ணாவால் அறிவிக்கப்பட்ட வீராங்கனை தான் ‘அன்னை’ சத்தியவாணி முத்து அவர்கள்.

## நிறைமாதக் கர்ப்பிணி வீராங்கனை

அதன்படி 1953-ஆம் ஆண்டு ஜூலை 13-ஆம் நாள் காலை எட்டு மணிக்கு மறியல் செய்யத் திரண்டிருந்த தோழர்களை, தலைமை தாங்கி சென்னை பாண்டி பஜாரில் இருந்து முதல்வர் இல்லம் நோக்கி அழைத்துச் சென்றார் வீராங்கனை சத்தியவாணி முத்து. காவல்துறை அவர்களைத் தடுத்து கைது செய்தது. சற்றும் தயங்காமல், சிறைசென்ற அவர் நிறை மாத கர்ப்பிணி. அப்போது அவருக்கு வயது 30.

அதனை விடவும் அதிர்ச்சி தரும் போராட்ட நிகழ்வுகளை அதற்கு முன்பே சந்தித்தவர் சத்தியவாணி. தந்தை பெரியார் அவர்களால் **‘துணிச்சல் மிக்கப் பெண்’** என்று பாராட்டப் பட்டவர். திராவிடர் கழக மேடைகளில் கேட்டவர்கள் வியக்கும்படியாகக் கொள்கை முழக்கம் செய்தவர்.

> **1957-ஆம் ஆண்டுத் திராவிட முன்னேற்றக் கழகம் முதல்முறையாகத் தேர்தலில் நின்றபோது போட்டியிட்டு வென்ற பதினைந்து சட்டமன்ற உறுப்பினர்களில் ஒரே பெண் சத்தியவாணி முத்து.**

## வன்முறையிலிருந்து தப்பித்தல்

1945-ஆம் ஆண்டு புதுச்சேரியில் நடந்த திராவிடர் கழக மாநாட்டில் இன எதிரிகள் நடத்திய வன்முறையும், மாநாட்டில் பங்கேற்க வந்த தலைவர்களையும் பேச்சாளர்களையும் விரட்டி விரட்டித் தாக்கியதும் செய்திகளாயின. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைத் தாக்கி, அவர் இறந்துவிட்டார் என்று எண்ணி சாலையோரம் வீசிச் சென்ற அந்தக் கும்பல் புதுவையில் தங்கியிருந்த பேச்சாளர் சத்தியவாணியை விரட்டிச் சென்றது. அவர்களுக்குப் போக்குக் காட்டி, யாரோ ஒருவரது வீட்டில் நுழைந்து தன்னைக் காப்பாற்றிக் கொண்டார் சத்தியவாணி. அங்கிருந்து தோழர்களின் துணையுடன் நேரடியாக ரயில்நிலையம் செல்லாமல், வளவனூர் வரை குறுக்கு வழியில் பயணம் செய்து அதன்பின் சென்னை வந்து சேர்ந்தார். அப்போது அவரது வயது 22.

கொள்கையில் உறுதியும் இயல்பிலேயே துணிவும் கொண்டிருந்த திராவிடர் இயக்கப் போராளிகளில் நிகரற்ற பல சாதனைகளைப் படைத்த அம்மையார் சத்தியவாணியின் வாழ்க்கையும் போராட்டங்களும் வெற்றிகளும் வளரும் தலைமுறை திராவிட இயக்கத் தோழர்கள் அறிந்திருக்க வேண்டிய வரலாறாகும்.

## பெரியார் பாராட்டிய பேச்சாளர்

1923-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15-ஆம் தேதி சத்தியவாணி பிறந்தார். அவரது பெற்றோரான நாகைநாதர்- ஜானகி அம்மாள் செங்கல்பட்டில் வசித்து வந்தனர். நாகைநாதர் முற்போக்குச் சிந்தனை கொண்டவர். தன் மகள் கல்வி கற்க வேண்டும் என்பதில் உறுதிப்பாடு கொண்டு அவரைச் செங்கல்பட்டு ‘கொலம்பஸ்’ கான்வென்ட்டிலும், பின் தெரசா கான்வென்ட்டிலும் தொடக்கக் கல்வி கற்கச் செய்தார். பள்ளி இறுதி வகுப்பை சென்னை எழும்பூர் மாநில உயர்நிலைப்பள்ளியில் படித்து முடித்தார்.

தந்தையிடம் பெற்ற முற்போக்குச் சிந்தனைகளும், திராவிட இயக்கப் பிரச்சாரங்களைக் கேட்டும், ஏடுகளைப் படித்தும் கற்ற சமூகக் கொள்கைகளும் அவரை சுயமரியாதைப் பெண்ணாக உருவாக்கின. சமூகச் சீர்திருத்தம், ஒடுக்கப்பட்டோர் விடுதலை, பெண்களின் முன்னேற்றம் ஆகியவை அவரது குறிக்கோள்களாயின. பள்ளிப் படிப்பை முடித்தவுடன் 1941-ஆம் ஆண்டிலேயே சத்தியவாணி சுயமரியாதை இயக்கத்தில் இணைந்துவிட்டார். தந்தை பெரியார் சத்தியவாணியின் பேச்சாற்றலைப் பாராட்டினார்.

சுயமரியாதை இயக்கத்தின் தீவிரத் தொண்டர்களில் ஒருவராயிருந்த தோழர் முத்து அவர்களை விரும்பிய சத்தியவாணி, 1943-ஆம் ஆண்டு **‘தமிழ்த்தென்றல்’** திரு.வி.க அவர்கள் தலைமையில் சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்டார். அதனால், சத்தியவாணி முத்து என்று அழைக்கப்பட்டார்.

## அம்பேத்கருக்கு ஆங்கில வரவேற்பு

சத்தியவாணியின் மேடைப்பேச்சில், சங்கப் புலவர்கள் முதல் சர்வதேசத் தலைவர்களாக இருந்த பெண்களையும் அவர்களது கருத்துகளையும் கேட்க முடிந்தது. அரசியல் ஆய்விலும் ஆங்கில மொழியிலும் தேர்ச்சி பெற்றிருந்தார்.

திராவிடர் கழகத்தின் மத்தியக்குழு உறுப்பினராகவும், தந்தை பெரியாரால் பாராட்டப்பட்டவராகவும் இருந்த சத்தியவாணி முத்து அவர்கள் அரசியல் அதிகாரம் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கு உதவும் என்ற நம்பிக்கை கொண்டிருந்தார்.

1944-ஆம் ஆண்டு சென்னையில் அண்ணல் அம்பேத்கர் அவர்களுக்கு ஒரு வரவேற்பு அளிக்கப்பட்டது. பகுத்தறிவாளர்கள் சார்பில், நடந்த அந்த விழாவில் அண்ணல் அம்பேத்கர் அவர்களுக்கு ஆங்கிலத்தில் ஒரு வரவேற்பு அறிக்கையை வாசித்தளித்தார். அவரது ஆளுமைக்குச் சான்றாக அந்த நிகழ்ச்சி அமைந்தது.

## முதல் கட்ட உறுப்பினர்

தந்தை பெரியாருக்கும், பேரறிஞர் அண்ணா அவர்களுக்கும் முரண்பாடு ஏற்பட்டு, 1949-ஆம் ஆண்டு அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கியபோது, சத்தியவாணி முத்து அதன் முதல் கட்ட உறுப்பினரானார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னணித் தலைவர்களில் ஒருவரானார்.

அன்று முதல் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இயக்கப் பொறுப்புகளிலும், போராட்டக் களங்களிலும் அமைச்சரவையிலும் ஆண் தலைவர்களுக்கு நிகரான இடத்தைப் பெற்ற ஒரே பெண் என்ற பெருமையைப் பெற்றார் சத்தியவாணி முத்து அவர்கள்.

1957-ஆம் ஆண்டுத் திராவிட முன்னேற்றக் கழகம் முதல்முறையாகத் தேர்தலில் நின்றபோது போட்டியிட்டு வென்ற பதினைந்து சட்டமன்ற உறுப்பினர்களில் ஒரே பெண் சத்தியவாணி முத்து. அதன் பின்பு அவர் முதலிடம் பெற்ற சாதனைகளைப் பட்டியலிட்டால் வியப்பால் விரியும் விழிகளை இமைக்கவே முடியாது.

(வருவார்கள்...)

---

### ஊடகர்கள் அச்சப்படுகின்றனரா?

அண்ணாமலையிடம் தலைமைப் பதவி இல்லாவிட்டாலும் தொண்டனாக பா.ஜ.க.வில் தொடர்வீர்களா என்று கேட்கப்பட்டது, இது ஒரு சாதாரணக் கேள்வி. அதற்கு ‘ஆமாம், இல்லை’ என்று சொல்லலாம். அல்லது பதில் அளிக்க விரும்பவில்லை எனலாம். அது எளிதான வழியும் கூட... ஆனால், பெண் நிருபரை ‘இங்கே வாங்க. உங்களுக்கு எதிர்காலம் இருக்கு. வளரணும். இப்படிக் கேள்வி கேட்காதீங்க’ என்று அறிவுரை சொல்வது போல மிரட்டுவதும் வேலைக்கு உலை வைத்துவிடுவேன் காலி பண்ணிடுவேன் என்பதையே அக்கறை உள்ளது போல மிரட்டும் தொனியில் பேசுவதும் அசலான ரவுடித்தனம். சக நிருபருக்கு இப்படி ஓர் அவமதிப்பு நடக்கும்போது அதைப் பார்த்துக்கொண்டும் அடுத்த கேள்விக்குத் தயாராவதும் நல்லதல்ல. நிருபர்களுக்குச் சுயமரியாதை என்பது மற்றவர்களைவிட சற்றே கூடுதலாக இருக்கவேண்டும். ஆனால், சீமான், அண்ணாமலை மாதிரியான அரசியல் ரவுடிகளிடம் மட்டும் ஏனோ, அது இல்லாமல் போய்விடுகிறது. இவர்களின் இந்த ரவுடித்தனம் வளர்வது அவர்களுடைய தைரியத்தில் அல்ல... நிருபர்களின் அச்சத்தால்.

**-எழுத்தாளர் அதிஷா X தளப் பதிவு**

### :ப்ளாஷ்பேக்





இராஜேந்திரன்

### அன்பளிப்பாக ‘பூங்கா’!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எழுதிய **‘தொல்காப்பிய பூங்கா’** நூல் வெளியீடு கோவையில் நடைபெற்றது. அந்த நிகழ்வு முடிவுற்ற பிறகு கோவை மாநகர் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களோடு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தலைவர் கலைஞர் அவர்களின் ‘தொல்காப்பிய பூங்கா’ நூலை எங்கள் அனைவருக்கும் அன்பளிப்பாக வழங்கினார். அவரோடு புகைப்படம் எடுத்துக்கொள்ளும் வாய்ப்பும் அமைந்தது. ‘அருளாளர்’ என்று வர்ணிக்கப்பட்ட, கழகத்தின் பொருளாளர் அண்ணன் ஆற்காட்டார் அவர்களும், தலைவர் கலைஞரின் நிழலாக வாழ்ந்த அண்ணன் சண்முகநாதன் ஆகியோரும் அப்போது உடனிருந்தார்கள்.

**-ஜி.டி.இராஜேந்திரன், வழக்கறிஞர் அணி முன்னாள் அமைப்பாளர், கோவை மாநகர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in


### கருவூலம்

**கார் ஓட்டுநரான கண்ணப்பன்!**

**1976-ஆம் ஆண்டு மிசா காலத்தின் போது கலைஞருடன் யாரும் இருக்கக்கூடாது எனத் திட்டமிட்டு நெருக்கடிகள் கொடுக்கப்பட்டன. கலைஞர் தனியாகவே எங்கும் சென்று வந்தார். அப்போது அவருக்கு இரண்டு ஓட்டுநர்கள் இருந்தனர். அவர்களில் ஒருவர் உடல்நிலை சரியில்லை எனக் கூறிவிட்டு வேறு ஒருவரிடம் வேலைக்குச் சேர்ந்து விட்டார். மற்றொருவரும் வேலையில் இருந்து நின்று கொள்வதாகக் கூறிவிட்டார். அந்தச் சூழலில் கலைஞரின் காரை ஓட்டும் பொறுப்பை முன்னாள் அமைச்சர் கண்ணப்பன் ஏற்றுக் கொண்டார். ஆனால், அதையும் பொறுத்துக் கொள்ளமுடியாமல் கண்ணப்பனும் மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டார்.**

---

### திராவிடத்தால் வாழ்கிறோம் 259




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.